
# வணிக வனிதை
# Vaniha vanithai




இதழ் -12

யாழ் இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## COMMERCE STUDENT'S UNION

## J/Hindu Ladies' College

# வணிக வனிதை

# 2010

## இதழ் பன்னிரண்டு

இதழாசிரியர்கள்
து.மயூரி
கு.நிவேதிகா

வர்த்தக மாணவர் ஒன்றியம்
யாழ் இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வாழ்த்து

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி – எங்கள்
பெறுவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி – உயர்
மறுவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி – உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்தோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப்புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம் பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி – வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி – உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி – ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி – உனை
அங்கையில் மலர்கொண்டன்புடன் பாடி
அனுதினம் ஏந்தோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

கலைமகள் உலவக் களிநடனம் புரியக்
கண்டிடுங் கல்லூரி – என்றும்
மலைமகள் தொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி – நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி – உனை
தலை முறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மன்ற கீதம்

வாழ்க மன்றம் வணிக மன்றம் வாழ்க வாழ்கவே – என்றும்
மாண்புமிகு மாணவரின் மகிமை நிலைக்கவே
மண்ணுலகில் நுட்பங்கள் மறைந்திடாமலே – எங்கள்
இந்து மகளிர் வணிக வனிதை வாழ்க வளர்கவே.

மனித நாகரிகம் வெற்றி பெற்று உயரவே
வணிகவியல் முதுகெலும்பாய் ஆச்சு உலகிலே
வணிகவியல் ஓங்க தேசம் சொர்க்கமாகுமே
குனிவிலாத வாழ்வை அளிக்கும் வணிகக் கல்வியே – என்றும்

வணிக வனிதையர் ஒன்று இணைந்து சேரவே
வணிகவியல் நுட்பம் யாவும் கண்டு கொள்ளவே
வணிகக் கல்வியாலே ஊரும் உலகும் ஓங்கவே
வந்துதித்த வனிதை தன்னைப் போற்றிப் பாடுவோம்.

வணிக மன்றம் இன்று வீறுநடை போடுதே
வளர்ந்து தனது காலில் நின்று வலிமை கொள்ளுதே
தகவல் யுகம் தன்னில் இன்று இணைந்து கொள்ளுதே
தலைமுறைக்குத் தரவுகளை அள்ளித் தருகுதே.

வணிகக் கல்வி புதுமை புகுத்தி மாண்பு பெறவே
மகிழ்ந்து நாமும் இந்த நூற்றில் வளர்ந்து வாழவே
செழுமை கொண்டு சிறப்பு பெற்று சீரும் பெறவே
நெகிழ்ச்சி பெற்று உயர்ந்து வனிதை வளங்கள் சேர்க்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப்பணிப்பாளரின்
# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் வணிக வனிதை என்னும் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மாணவர் மையக் கற்றலும், தேர்ச்சி மையக் கற்றலும் சிறப்புற நடைபெறுவதற்கான காட்டியாக இச்சஞ்சிகை உள்ளது என்றால் மிகையாகாது. வணிக பாடம் கலைத்திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு எம் மாணவர்கள் பலரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானமைக்கு இத்தகைய சஞ்சிகை வெளியீடுகளும் பங்களித்துள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியினால் வெளியிடப்படும் இச் சஞ்சிகை இனிவரும் காலத்தில் வணிகம் கற்கும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த உசாத்துணை நூலாகவும் விளங்கும். இதிலுள்ள மாணவர் ஆக்கங்களை எழுதிய மாணவர்களையும் இதற்கு ஊக்கமளித்து வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும், காப்பாளராக இருந்து நெறிகாட்டிய அதிபரையும் வாழ்த்துவதுடன், இம்முயற்சி தொடர்ந்தும் நடைபெற வேண்டும் என்ற வேண்டுகோளையும் இச்சந்தர்ப்பத்தில் விடுக்கின்றேன்



திருமதி அ. வேதநாயகம்
யாழ்.வலயக்கல்வி பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளவாளர் அவர்களின்
# ஆசிச்செய்தி

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியின் 12வது வணிக வனிதை சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். சஞ்சிகை வெளியிடுவதன் மூலம் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல் வெளிக்கொணரப்படுகின்றது. இவ்வாறான சஞ்சிகைகளை வெளியிடுதல் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கற்றலுக்கும் மாணவர்களின் சிந்தனைகளை கிளறி சிறந்த ஆக்கங்களை உருவாக்குவதற்கும் அடிப்படையாக அமைகின்றன. மாணவர்கள் தேடலில் ஈடபடும்போது இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப வணிகத்துறையில் ஏற்படும் மாற்றங்களை அறியக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான மாற்றங்களை மாணவர்களுக்கு வெளிப்படுத்தும் களமாக சஞ்சிகைகள் திகழ்கின்றன. எனவே இச்சஞ்சிகைகள் வணிகத்துறை கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உசாத்துணை நூல்களாகவும் திகழ்கின்றன. இவ் வெளியீடானது இக்கல்லூரியின் கலாச்சார விழுமியங்கள் பேணப்பட்டு வருகின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது.

இவ்வாக்கத்திற்கு நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் அதிபரையும் பாராட்டுவதுடன் இது தொடர்ந்தும் நடைபெற வேண்டும் என்பதையும் வேண்டுகோளாக விடுத்து சகலரையும் வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

செல்வி A. சகுந்தலாதேவி
வளவாளர்,
யாழ் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசியுரை

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் வர்த்தக மன்றத்தினால் வருடந்தோறும் வெளிவரும் "வணிக வனிதை" தொடர்ந்து 12வது இதழாக வெளிவருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வணிகத்துறை மாணவர்களின் தேடலுக்கு ஒரு உந்து சக்தியாக விளங்கும் வணிக வனிதை மாணவர்களின் படைப்பாற்றல்களை வெளிப்படுத்துவதுடன் ஏனைய கல்வியலாளர்களின் சிறந்த ஆக்கங்களையும் தாங்கிவரும் ஒரு ஊடகமாகவும் விளங்குகின்றது. வருடா வருடம் பல தடைகளையும் தாண்டி தரமான மலராக வெளிவருவது மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இம் மலரை ஒவ்வொரு மாணவரும் கற்றுப் பயன் பெற வேண்டும் என்பதே எனது அவா. வணிக வனிதை தொடர்நது வெளிவர முழுமுயற்சியுடன் செயற்பட்ட மாணவர்களையும் அவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய பொறுப்பாசிரியர்களையும் பாராட்டுவதில் அகமகிழ்வடைகின்றேன்.

தொடர்ந்தும் வணிக வனிதை மென்மேலும் மெருகுடன் வருடாவருடம் வெளிவர எனது ஆசிகள்.



திருமதி. வே. பேரின்பநாதன்

அதிபர்

யாழ் இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபர் ஆசியுரை

இவ்வாண்டில் ஒளி வெள்ளத்தைப் பரப்பிக் கொண்டு "வணிகவனிதை" என்ற சஞ்சிகை வெளிவர இருக்கின்றது. கால மாறுதல்களுக்கும் சமூக மாற்றங்களுக்கும் ஏற்ப தன் பொற்கிரணங்களை இதழ்களாக விரித்துக் கொண்டு மலர இருக்கின்றது.

புதுமைகளும், மாறுதல்களும் நிரம்பி வழியும் உலகத்தை விழித்தெழச் செய்ய பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி வெளிவர இருக்கின்றதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இச்சஞ்சிகை ஆக்கங்கள் ஆற்றல் மிகுந்த சான்றோர்களின் வழிகாட்டல் மூலம் வெளி வர இருக்கின்றது.

திருமதி. மீ. செல்லையா

பிரதிஅதிபர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துரை

மாணவர்களின் சுயகல்வி முறைக்கு எடுத்துக்காட்டாக பல்வேறு இடர்களின் மத்தியிலும் இதழ் 12வது வணிக வனிதையை தமது இடைவிடா முயற்சியினால் வெளியிட்டுள்ளனர். வணிக மாணவர்கள் பல புதிய தகவல்களை அறிந்து கொள்ளும் தேவை உள்ளது. அதற்கு இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்த வகையில் எமது பாடசாலை வணிக மன்றத்தினால் வெளியிட்டு வரும் வணிக வனிதை பல்வேறு புத்தாக்கங்களை தாங்கி மேலும் தொடர்ந்து வர எனது இதய பூர்வமான வாழ்த்துகளை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

திருமதி சா. சுரேஸ்குமார்.
பொறுப்பாசிரியர்
வணிக மாணவர் மன்றம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயத்தில் இருந்து.....

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் வணிகத் தாய் பெற்றெடுத்த "வணிக வனிதை" என்னும் நூலின் 12வது இதழை வெளியிடுவதை இட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

மாற்றமடைந்து வரும் இவ்வுலகில் பல்வேறுபட்ட தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் ஓர் கிராமமாக சுருங்கியுள்ள நவீன உலகிற்கு வணிகத்துறையின் தேவை அதிக பங்களிப்பை செய்தவண்ணம் உள்ளது. இக் காலத்தில் ஒவ்வொருதுறையின் வளர்ச்சிக்கும் ஆணி வேராக வேரூன்றி நிற்பது எமது வணிகத்துறை ஆகும்.

இம்மலரானது வனிதையின் கல்விக்கடலில் மூழ்கிக்களிக்கும் சின்னச்சிப்பிகள் சிந்திய முத்துக்களில் சேர்த்து மாலையாகின்றது. இம்முத்துக்களை வணிகத்துறையில் கல்விபயிலும் சகல மாணவர்களும் வாசித்து பயன் பெறுவர் என நம்புகின்றோம்.

எமது வணிகவனிதையானவள் நமது இளையதலைமுறையினரின் அறிவு ஒளியைப் பெற்று சமூகத்தில் பிரகாசிக்க வழிகாட்டுகின்றாள். இம் மலரானது அறிவு மணம் கமழும் வண்ணப் பூங்காவாக உள்ளது. இப்பூங்காவினுள் அனைவரும் நுழைந்து பயன்பெறமுடியும்.

இவ்வணிக வனிதையானது சிறப்பாக வெளிவருவதற்கு பல வழிகளிலும் உதவிகளை நல்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று போல் வணிக வனிதையானவள் நல்ல அணிகலன்களைப்பூண்டு இடைவெளி இல்லாது ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக வெளிவர எமது வாழ்த்துக்கள்.



செல்வி. கு. நிவேதிகா
செல்வி. து. மயூரி
இதழாசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mrs. V. Perinpanathan**

B.Sc. Dip. in Edu, MA in Public Ad, SLPS I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் சிந்தனையிலிருந்து...

வளர்ந்து வருகின்ற தகவல் தொழில்நுட்பயுகத்திலே வணிகத்தின் பங்கு மிகவும் அளப்பெரியது. அந்த வகையில் வணிகம் சம்பந்தமான பல்வேறுபட்ட விடயங்களையும் சுமந்து வருகின்ற எமது கல்லூரியின் 12வது வணிக வனிதை இதழை வெளியிடுவதையிட்டு பெருமை அடைகிறேன்.

எமது வணிக வனிதை சஞ்சிகையானது, மாணவர்களினதும், விரிவுரையாளர்களினதும் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருகிறது. இந்நூலைக் கற்பதனால் மாணவர்களுக்குத் தமது திறன்களை தேடிக்கற்கின்ற ஆற்றலை அதிகரிக்கச் செய்கின்றது.

இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகிற்கு முதுகெலும்பாகவுள்ள வணிகத்துறையில் நாளுக்கு நாள் ஏற்பட்டு வரும் மாற்றங்களை சமூகத்திற்கு வெளிப்படுத்துவதில் எமது "வணிக வனிதை" ஆற்றும் பங்களிப்பு அளப்பரியது. இச்சஞ்சிகை வெளிவருவதில் எமக்குதவிய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விமான்கள், ஆக்கங்களை தந்துதவிய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு வழிகாட்டிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் விளம்பரம் மூலம் நிதி அளித்து உதவிய வர்த்தகர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.



வி. தர்சிகா
தலைவர், வர்த்தக மாணவ மன்றம்
யாழ். இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரின் பேனாவிலிருந்து....

மங்கையராய் பிறப்பதற்கே நல்லமாதவம் செய்திடல் வேண்டும் என்ற வாக்கிற்கிணங்க இன்றைய உலகத்ததைக் கரங்களில் தாங்கக்கூடிய சக்தி பெண்களிற்கு உண்டு. இதற்குச் சான்றாக கல்பனா சாவ்லா, கிரன்பேடி போன்ற வனிதையர் முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளனர். அது போல்இம்மண்ணில் பெருமையை நிலைநாட்டவந்த மாதவச்செல்வங்களான எம்மங்கையரின் ஆக்கத்திறனில் துளிதுளியாக திரளும் ஆக்கங்களின் கோர்வையாக இவ்வணிகவனிதையானவள் 12வது பிறப்பெடுத்து உங்கள் கைகளில் தவழ்கிறாள்.

உலகமயமாதல் மூலம் வணிகத்துறை உலகெங்கும் வியாபித்து நிற்பதுடன் அனைத்துத்துறைகளிலும் முதன்மை பெற்று விளங்குகின்ற அக் கால கட்டத்தில் வணிகத்துறை மாணவர்களாகிய நாம் எமது வணிகத்துறை மீதான ஆற்றல்களை வளர்த்துக்கொள்வதிலும் வணிகத்தின் செய்திகளை மக்களிற்குக் காலத்திற்துக் காலம் எடுத்துரைப்பதிலும் இவ்விதழ் முதன்மை பெறுகின்றது. அது மட்டுமன்றி மாணவர்களது பலதரப்பட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும் இவ் வணிக வனிதையானவள் உறுதுணை புரிகின்றாள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஆசிரியர்களின் ஆசியுடனும், அனைத்து மாணவர்களின் அர்ப்பணிப்பினையும் கொண்டு அனைவரது ஆதரவாலும் பிறக்கப் போகும் இவ் வனிதையாளவள் வணிகம் மட்டுமன்றி சந்தைப்படுத்தல் மற்றும் தொழிநுட்பம் சம்பந்தமான தரமான ஆக்கங்களுடன், விளம்பரங்களையும், நல்லாசிச் செய்திகளையும் தாங்கிய வண்ணம் சஞ்சிகை வரலாற்றில் தனக்கெனத் தடம் பதிப்பாள் எனும் நம்பிக்கையுடன் இவ் வனிதையின் வெளியீட்டிற்கு வழியமைத்த அனைவரிற்கும் எமது மனங்கனிந்த நன்றியைக்கூறிக்கொண்டு இவ் வணிக வனிதை ஆண்டு தோறும் ஊற்றெடுத்து மலர மனதார வாழ்த்துகிறேன்.

"வனிதையர் நாங்கள்
வணிகத்தில் தடம் பதிப்போம்"



இ.சௌம்யா
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் விபரம்

### முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| சைந்தவி ஜெயராமன் | 2.0907 | 3A |
| தனுஜா குணசேகரம் | 1.7832 | 3A |
| கஜோதா விஜயபாலன் | 1.6039 | 2A, B |
| நிறைந்தனா வரதலிங்கம் | 1.4443 | A, 2B |
| அனுஷா சிவலோகநாதன் | 1.4319 | 2A, C |

### வர்த்தகம்

| | | |
|---|---|---|
| திபாஹினி சிவபாதசுந்தரம் | 1.2483 | A, 2B |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மாணவர் மன்றம்
# 2010 நிர்வாகச் செயலணி

| | |
|---|---|
| காப்பாளர்: | திருமதி. வே. பேரின்பநாதன் (அதிபர்) |
| துணைகாப்பாளர்: | திருமதி. மீ. செல்லையா (பிரதி அதிபர்) |
| பொறுப்பாசிரியர்: | திருமதி. சா. சுரேஸ்குமார். |
| தலைவர்: | செல்வி. வி. தர்ஷிகா |
| உபதலைவர்: | செல்வி. தி. விதுஷ்கரணி |
| செயலாளர்: | செல்வி. இ. சௌம்யா |
| உபசெயலாளர்: | செல்வி. தி. பிரசாந்தி |
| பொருளாளர்: | செல்வி. செ. நிவேதிதா |
| உபபொருளாளர்: | செல்வி. இ. ஜீவகி |
| இதழாசிரியர்கள்: | செல்வி. து. மயூரி |
| | செல்வி. கு. நிவேதிகா |
| ஆசிரிய ஆலோசகர்கள்: | திருமதி. சி. ஞானசுப்பிரமணியம் |
| | திருமதி. ஸ்ரீ. அருள்வேல் |
| | திருமதி. ம. சிவானந்தநாதன் |
| | திருமதி. கௌ. சிவகுமார் |
| | திருமதி. சி. சிவகுமார். |
| மலர் குழு: | செல்வி. பா. காமதேனு |
| | செல்வி. ஜீ. தாக்ஷாயிணி |
| | செல்வி. தி. பிரஷாந்தி |
| | செல்வி. தெ. தர்ஷிகா |
| | செல்வி. சி. சிவசொரூபினி |
| | செல்வி. ப. பிருந்தா. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

செல்வி இ.ஜீவகி(உபசெயலாளர்), செல்வி செ.நிவேதிதா(பொருளாளர்), செல்வி ஜீ.தாட்சாயினி, செல்வி ப. பிருந்தா, செல்வி து.மயூரி(இதழாசிரியர்) செல்வி கு.நிவேதிகா(உபஇதழாசிரியர்), செல்வி தி.விதுஷ்கரணி(உபதலைவர்), செல்வி தெ.தர்ஷிகா, செல்வி பா.காமதேனு, செல்வி இ.சௌம்யா(செயலாளர்)

**சமூகமளிக்காதோர்**


திரு. கமலதாசன், செல்வி பி.சொக்கலிங்கம், செல்வி சி. சிவசொரூபினி, செல்வி பிரஷாந்தி

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

திரு. கிருஸ்ணானந்தன், திருமதி சி. சிவகுமார், திருமதி ஹீ. அருள்வேல், திருமதி ச. நரேந்திரன் (உபஅதிபர்), செல்வி வி. தர்சிகா (தலைவர்) திருமதி வே. பேரின்பநாதன் (அதிபர்), திருமதி மீ. செல்லையா (பிரதி அதிபர்), திருமதி சா. சுரேஸ்குமார் (மன்றப்பொறுப்பாளர்), திருமதி சி. ஞானசுப்பிரமணியம், திருமதி ம. சிவானந்தநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - பொருளடக்கம் -


| | | |
|---|---|---|
| 1) | பங்கு முதலீட்டிற்கான அறிமுகம் | |
| | **Introdution to Share investment** | 1-5 |
| 2) | வருமானம் | |
| | **(Revenue SLAS)** | 6-12 |
| 3) | உலகப் பொருளாதார நெருக்கடி | 13-17 |
| 4) | புதிய கைத்தொழில் மய நாடு என்ற நிலையை | |
| | இலங்கை அடையும் சாத்தியம் உண்டா? | 18-20 |
| 5) | உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் | |
| | பின்னணியில் இலங்கை | 21-23 |
| 6) | அங்கீகார வணிகமும் அதன் முக்கியத்துவமும் | |
| | [FRANCHISE BUSINESS & ITS IMPORTANCE] | 24-28 |
| 7) | மேந்தலைக் கிரயம் (OVER HEAD COST) | |
| | ஓர் கண்ணோட்டம் | 29-36 |
| 8) | மூன்றாம் உலகை உலுக்கி வரும் | |
| | உணவுப் பற்றாக்குறை | 37-39 |
| 9) | கைத்தொழில் மயமாக்கலும் இலங்கையும் | 40-45 |
| 10) | இலத்திரனியல் காசு கொடுப்பனவு முறை | |
| | [E-CASH] | 46-48 |
| 11) | உலகமயமாக்கல் | |
| | **(GLOBALIZATION)** | 49-53 |
| 12) | சந்தைப்படுத்தல் போட்டியின்போது பின்பற்ற வேண்டிய | |
| | "மைக்கல் போட்டரின்" பொதுவான | |
| | தந்திரோபாயங்கள் | 54-58 |
| 13) | நேர முகாமைத்துவம் | 59-60 |
| 14) | மூலப்பொருள் விலையிடல் | 61-65 |
| 15) | நாணயகொள்கை, அதன் நோக்கங்கள் | |
| | மற்றும் நாணய கொள்கை கருவிகள். | 66-68 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16) புத்தாயிரம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோள் or
மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள் 69-72
17) கடை அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ்
ஊழியர்களதும் தொழில் வழங்குனர்களதும்
உரித்துக்கள், கடப்பாடுகள், பொறுப்புகள் 73-79
18) குறுக்கெழுத்து 80-82
19) காப்பிடப்பட்ட உடன்படிக்கையும் எண்ணெய் விலையும்.
Hedging Agreement and Oil Price 83-85
20) வங்கியின் வைப்புக்களும் அவை தொடர்பான
நடைமுறை விதியும்
ஹற்றன் நஷனல் வங்கி (HNB) 86-88
21) அரச வரவு செலவுத் திட்டம் 2009
ஒரு கண்ணோட்டம் 89-96
22) சர்வதேச நாணய நிதியம்
International Monetary Fund 97-100
23) இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு
முறைமையினை நவீனமயப்படுத்துதல் 101-103
24) பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கங்கள் 104-106
25) இலங்கையின் சுபீடசச் சுட்டெண்
சமநிலையான பிராந்திய அபிவிருத்தி நோக்கி...... 107-109
26) PAY CARD 110-112
27) BARCODE 113-115
28) Advertising impact on business success 116-120
29) AN ANALYSIS AN ORGANIZATIONS 121-124
ENVIRONMENT
30) அரசின் தனியார் மயப்படுத்தலின்
உட்கட்டமைப்புக்கள் 125-127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு முதலீட்டிற்கான அறிமுகம்
# Introdution to Share investment

B. Mugunthan

## பங்கு என்றால் என்ன? What is a Share?

ஒரு கம்பனியின் மீது ஒருவர் கொண்டுள்ள உரிமையினை வெளிப்படுத்துவதே பங்கு எனப்படும். இப்பங்குகளை உடமையாகக் கொள்வதன் மூலம் ஒருவர் அக் கம்பனியின் இலாபத்தின் ஒரு பகுதியை அனுபவிக்க முடியும். அதாவது குறிப்பிட்ட கம்பனியின் முன்னேற்றத்தின் மூலம் பங்குதாரர் நன்மை அடைய முடியும்.

## சாதாரண பங்கு Ordinary Share

- சாதாரண பங்கானது அதனை பெறுபவருக்கு கம்பனியின் உடமையை அவர் பெற்றுக்கொண்ட பங்குகளின் வீதத்திற்கேற்ப வழங்குகின்றது.
- ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உரிமை உண்டு
- பங்கு லாபத்தில் ஒரு பகுதியைப் பெறுவதற்கு உரிமை உண்டு.
- கம்பனி முடிவுறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் கடன் கொடுத்தோர் வைப்புச் செய்தோர் மற்றும் கடன்தாரர் களிற்கான கொடுப்பனவு தீர்வு செய்யப்பட்டதன் பின்னரே சாதாரண பங்குகளிற்கான தீர்ப்பனவு செய்யப்படும்

## முன்னுரிமை பங்கு Preference Share

- முன்னுரிமைப் பங்கானது அதனைப் பெற்றுக் கொள்பவருக்கு வரையறுக்கப் பட்டதான உடமைகளையும் உரிமைகளை மட்டுமே வழங்குகின்றது.
- பங்குலாபம் வழங்கலின் போது முன்னுரிமைப் பங்குகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு பங்குலாபம் வழங்கிய பின்னரே சாதாரண பங்குதாரருக்கு பங்குலாபம் வழங்கப்படும்.
- கம்பனியானது கலைக்கப்படும் போது முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு கடன் தீர்ப்பனவின் போது முன்னிரிமை வழங்கப்படும்.

## பங்குகள் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகள் Benefits from Shares

பங்குகளை உடமையாகக் கொள்வதன் மூலம் பின்வரும் பிரதான நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

அ) பங்குலாபம்

ஆ) மூலதன இலாபம்

இ) உபகார வழங்கல்

ஈ) உரித்து வழங்கல்

## பங்குலாபம் - Dividend

பங்குலாபமானது கம்பனியின் இலாபங்கள் மற்றும் ஒதுக்கங்களைப் பயன்படுத்தி பங்குதாரர்களுக்கு வழங்குவதற்காக பணிப்பாளர்களினால் பிரேரிக்கப்படும் தொகையே பங்குலாபம் எனப்படும் பங்குலாபம் பொதுவாக காசாக வழங்கப்படுகின்றது.

## மூலதன இலாபம் - Capital Gain

மூலதன இலாபம் என்பது பிணைகளைக் கொள்வனவு செய்த விலையை விட அதிகமான விலைக்கு சந்தையில் விற்பதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பெறப்படும் இலாபமே மூலதன இலாபம் எனப்படும். மூலதன இலாபம் பங்குச்சந்தையில் நிலவும் விலைக்கேற்ப மாறுபடும். மாறாக மூலதன நட்டம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளது. அதாவது சந்தை விலையானது கொள்வனவு விலையை விடக்குறையும் போது மூலதன நட்டம் ஏற்படும்.

### உபகார வழுங்கல் - Bonus Issue

ஏற்கனவே உள்ள சாதாரண பங்குதாரர்களுக்கு அவர்களிடம் இருந்து எதுவித பணத்தையும் அறவிடாது கம்பனியில் உள்ள ஒதுக்கங்களைப் பயன்படுத்தி இலவசமாக பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் பங்குகள்.

### உரித்து வழுங்கல் - Rights Issue

ஏற்கனவே உள்ள சாதாரண பங்குதாரர்களுக்கு சந்தை விலையிலும் பார்க்க குறைந்த விலையில் மேலதிகமாக பங்கு வழுங்குதல்.

### மேலதிக நன்மைகள் - Further Benefits

அ) பங்குதாரர் என்ற வகையில் நீங்கள் ஆண்டுப் பொதுக்கூட்டம், விசேட பொதுக் கூட்டம் என்பவற்றில் பங்குபற்றுவதற்கும் தீர்மானமெடுத்தலின் போது வாக்களிக்கவும் தகுதியுடையவராகின்றீர்கள்.

ஆ) பங்குப் பத்திரங்கள் வங்கியில் பிணையாகக் கொடுத்து கடன் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளும் உள்ளன.

இ) பணவீக்கம் அதிகமாக உள்ள காலப்பகுதியில் பங்குகள் மீதான முதலீடுகள் ஏனைய முதலீட்டுகளிலும் பார்க்க நன்மையளிக்கும், ஏனெனில் பங்கு விலைமாற்றம் பணவீக்கத்தின் பிரதிபலிப்பையும் கொண்டிருக்கும்

### பங்குகள் அல்லது தொகுதிக் கடன்களை எப்படி வாங்க முடியும்? How do purchase shares/ debentures?

ஒருவர் பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களை வாங்குவதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

1) முதலாம் தரச்சந்தை
2) இரண்டாம் தரச்சந்தை

### முதலாம் தரச்சந்தை அல்லது முதனிலை வழங்கல் என்றால் என்ன? What is the primary market?

புதிய பங்குகள் மற்றும் தொகுதிக் கடன்களை வழங்குவதற்குரிய இடமே முதலாம் தரச்சந்தை எனலாம். முதலாம் தரச்சந்தையில் பிணைகள் நேரடியாக வழங்குனரிடம் (கம்பனி) இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன. முதனிலைப் பங்கு அல்லது தொகுதிக் கடன்களை வழங்குவதற்காக கம்பனி முன்விபரணம் (Prospectus) எனும் ஓர் ஆவணத்தை வெளியிடுகின்றது. முன்விபரணம் என்பது பொதுமக்களை பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை வாங்குமாறு கோரும் ஓர் அழைப்பாகும். இந்த முன்விபரணம் கம்பனியின் வழங்கல் தொடர்பான விபரங்கள், வியாபார நடவடிக்கைகள், நிதியின் ஸ்திரத்தன்மை, எதிர்காலத்திட்டங்கள், பணிப்பாளர்கள் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள், மற்றும் கம்பனி என்ன நோக்கத்திற்காக நிதியினைத் திரட்டுகின்றது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான விளக்கத்தினையும் கொண்டிருக்கும்.

## இரண்டாம் தரச்சந்தை என்றால் என்ன? What is the Secondary Market?

ஒரு முதலீட்டாளர் பிணைகளை இன்னும் ஒருவரிடம் இருந்து வாங்கக் கூடிய அல்லது இன்னொருவருக்கு தன்னிடம் உள்ள பிணைகளை விற்கக் கூடிய ஓர் இடம் இரண்டாம் தரப்பங்குச் சந்தை எனப்படும்.

இரண்டாந்தரச்சந்தையில் வியாபாரமானது திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப.9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறும்.

போயா தினம், பொது விடுமுறைகள், வர்த்தக வங்கி விடுமுறைகள் போன்ற விடுமுறை நாட்களில் இந்த இரண்டாம் தரச் சந்தை (பங்குச்சந்தை) இயங்க மாட்டா.

## எனது கொடுக்கல் வாங்கற் செலவுகள் யாவை? What is my transaction cost?

கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பங்குகளின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவுக்கு குறைவானதாயின் அக்கொடுக்கல் வாங்கற் பெறுமதியின் 1.425 வீதமும் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பங்குகளின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவுக்கு அதிகமாயின் அக்கொடுக்கல் வாங்கற் பெறுமதியின் 1.225 வீதமுமாக இருக்கும்.

கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பங்குகளின் பெறுமதி பத்து மில்லியன் ரூபாவுக்கு அதிகமாயின் தரகுக் கட்டணம் பேசித் தீர்மானிக்கப்படும்.

## மத்திய வைப்புத் தொகுதி என்றால் என்ன? What is the Central Depository system (CDS)?

மத்திய வைப்புத் தொகுதி என்பது பங்குகள், தொகுதிக் கடன்கள் போன்றவற்றின் கொடுக்கல் வாங்கல்களுக்கான தீர்வக இல்லமாகச் (clearing and settlement house) செயற்படுகின்றது. நீங்கள் பங்குகள் தொகுதிக் கடன்களைக் கொள்வனவு செய்யுமிடத்து அவை உங்கள் CDS கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. (செலவு வைக்கப்படுகின்றது) அதே போல் பங்குகள் தொகுதிக் கடன்களை விற்பனை செய்ய வேண்டுமாயின் உங்கள் CDS கணக்கிலே பங்குகள் தொகுதிக் கடன்கள் வைப்புச் செய்யப்படவேண்டும். அப்பிணைகள் உங்கள் CDS கணக்கிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு (வரவு வைக்கப்பட்டு) அப்பங்குகளை கொள்வனவு செய்பவரின் CDS கணக்கிற்கு மாற்றப்படும் (செலவு வைக்கப்படும்) இதுவே ஆவணமற்ற (Scriptless) பரிமாற்று நடவடிக்கையின் அடிப்படை ஆகும்.

## நான் CDS கணக்கு ஒன்றை எவ்வாறு ஆரம்பிப்பது? How do I open a CDS account?

நீங்கள் கணக்கு திறக்கும் படிவம் (Account Opening Form) ஒன்றைப் பெற்று பூர்த்தி செய்தல் வேண்டும். பங்குத்தரகர்கள் அனைவரிடமும் இப்படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த படிவத்தினை பங்குத்தரகர்கள் ஊடாக மத்திய வைப்புப் தொகுதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட்டு இரண்டு நாட்களுக்குள் உங்கள் பெயரில் கணக்கு ஆரம்பிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும். விரும்பின் கூட்டுக் கணக்குகளையும் (Joint Account) ஆரம்பிக்கலாம். CDSல் கணக்குகளை ஆரம்பிப்பதற்காகக் கட்டணம் அறவிடப்படுவதில்லை. CDS கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கு உங்கள் தேசிய அடையாள அட்டையின் (NIC) ஒளிப்படப்பிரதி (Photo copy) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மின்சாரப் பட்டியல் (Electricity bill) or தொலை பேசிப்பட்டியல் (Telephone) or கிராம சேவையாளரின் வதிவிடச்சான்றிதழ் ஒன்றையும் தரகரிடம் கொடுப்பதுடன் பரிசீலனை செய்வதற்காக தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும். அடையாள அட்டை இல்லாத விடத்து கடவுச்சீட்டும் (Passport) ஆள் உறுதிப்படுத்தல் ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

## நான் பங்குகளைக் கொள்வனவு செய்யும் போது எனது கடப்பாடுகள் யாவை? What are my obligations when I purchase shares?

நீங்கள் பங்குகளைக் கொள்வனவு செய்து 3 சந்தை நாட்களுக்குள் அதற்குரிய கொடுப்பனவை செலுத்துதல் வேண்டும். நீங்கள் புதிய முதலீட்டாளர்களாகக் காணப்படும் பட்சத்தில் பங்குத்தரகர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக குறிப்பிட்டளவு முற்பணத்தை செலுத்துமாறு கேட்கப்படலாம்.

## நான் பங்குகளை எப்படி விற்க முடியும்? How do I sell shares?

பங்குகளை வாங்குகின்ற அதே நடைமுறையில் நீங்கள் பங்குத்தரகரிடம் தொடர்பு கொண்டு நீங்கள் விற்க விரும்பும் பங்குகளை வழங்கிய கம்பனியின் பெயர், பங்குகளின் எண்ணிக்கை, மற்றும் அப்பங்குகளுக்கு பெற விரும்பும் விலை போன்ற விபரங்களை தெரியப்படுத்துதல் வேண்டும். பங்குத் தரகர் உங்கள் வேண்டுகோளை மிக விரைவில் சாத்தியப் படக்கூடிய சந்தர்ப்பத்தில் நிறைவேற்றுவார். பங்குகள் விற்பனை செய்யப்பட்டு 3ம் சந்தை நாளில் உங்களுக்குரிய கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கப்படும்.

## கொடுப்பனவை நிறைவேற்றும் காலம் என்றால் என்ன? What is the settlement date?

கொள்வனவு செய்த அல்லது விற்பனை செய்த பங்குகள் தொகுதிக்கடன்களுக்கான பணக்கொடுப்பனவு இறுதியாக்கப்படும் காலம் கொடுப்பனவு செவ்வை செய்யும் காலம் எனப்படும்.

பங்குகளைக் கொள்வனவு செய்யுமிடத்து பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு 3 சந்தை நாட்களுக்குள் (T+3) கொள்வனவாளரினால் கொடுப்பனவு தீர்க்கப்படல் வேண்டும். இது "ரீ + மூன்று" என அழைக்கப்படும்.

பங்குகளை விற்பனை செய்யுமிடத்து பங்குகள் விற்பனை செய்யப்பட்டு 3 சந்தை நாட்களுக்குள் (T+3) கொடுப்பனவு தீர்க்கப்படும் இது "ரீ + மூன்று" என அழைக்கப்படும்.

## சந்தையின் நடவடிக்கைகளை எவ்வாறு கண்காணிப்பது? How do I monitor the performance of the market?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குகளின் விலையானது தினசரிப் பத்திரிகைகளில் அறியத்தரப்படுவதுடன் பங்குத்தரகர் அலுவலகத்தில் நிறுவப் பட்டுள்ள கணனிகளுடாகவும் தெரிந்து கொள்ளமுடியும். அதேபோல் பங்குப்பரிவர்த் தனையின் எந்த ஒரு வியாபாரத்தளத்திலும் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். வானொலி, தொலைகாட்சி யூடாகவும் இவை அறியத்தரப் படுகின்றன. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் இணையத்தளத்தினூடாகவும் (www.cse.lk) இவ்விபரங்களை அறிந்து கொள்ள முடியும். பங்குச் சந்தையினால் பிரசுரிக்கப்படும் நாளாந்த, வாராந்த, மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டறிக்கைகளை வாசித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பிரசுரிப்புக்கள் சந்தைப்புள்ளி விபரங்கள், பங்கின் விலைகள் போன்றவற்றுடன் மேலும் பல முதலீட்டாளர் பயன்பெறு தகவல் களையும் கொண்டுள்ளது.

நீங்கள் பங்குத்தரகர்களிடம் இருந்தும் ஏனைய தகவல் வழங்குனர் களிடம் இருந்தும் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் குறுந் தகவல்கள் மூலமும் (SMS) தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

## பங்குப்பரிவர்த்தனையின் அங்கத்துவ நிறுவனங்களும் வியாபார அங்கத்துவ நிறுவனங்களும்

## Member firms and Trading members of Colombo stock Exchange

Bartleet Mallory Stockbrokers (Pvt) Ltd

Acuity Stockbrokers (Pvt) Ltd

John Keels Stockbrokers (Pvt) Ltd

Asha Phillip Securities Ltd

DP Global Securities (Pvt) Ltd

Somerville Stockbrokers (Pvt) Ltd

J B Securities (Pvt) Ltd

Lanka Securities (Pvt) Ltd

Asia Securities (Pvt) Ltd

Ceylinco Stockbrokers (Pvt) Ltd

Capital Trust Securities (Pvt) Ltd

S C Securities (Pvt) Ltd

CT Smith Stockbrokers (Pvt) Ltd

HND Stockbrokers (Pvt) Ltd

NDB Stockbrokers (Pvt) Ltd

Capital Alliance Securities (Pvt) Ltd

SMB Securities (Pvt) Ltd

First Guardian Equities (Pvt) Ltd

Taprobane Securities (Pvt) Ltd

Amana Securities Ltd

SKM Lanka Holdings (Pvt) Ltd



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமானம்
# (Revenue SLAS)

பு.பிரதீப்காந்
உதவி விரிவுரையாளர்
வணிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

## வருமானம்

இந் நியமங்கள் (standard) பின்னணி விடய சந்தர்ப்பத்தில் இந் நியமத்தில் உள்ள அமுலாக்கல் வழிகாட்டல் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமத்துக்கான முன்னுரையின் சந்தர்ப்பத்திலும் காட்டப்பட வேண்டும். இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பொருட்சார் விடயங்களுக்கு பிரயோகிக்கும் நோக்கம் கொண்டவை அல்ல.

## குறிக்கோள்

நிதிக்கூற்றுக்களை தயாரித்து வழங்குவதற்கான திட்டத்தில் வருமானமானது பின்வருமாறு விபரிக்கப் பட்டுள்ளது. சம உரிமை பங்காளர்களிடம் இருந்து (Equity participants) கிடைக்கின்ற பங்குகள் தொடர்பானவற்றில் இருந்து கிடைப்பவற்றை விட கணக்கீட்டு பகுதியின் போது சொத்துக்களின் உட்பாய்ச்சல் அல்லது அதிகரிப்புக்களாக அல்லது சம உரிமை பங்குகளில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்ற கடன்களின் வீழ்ச்சி என்ற வடிவில் பொருளாதார அனுகூலங்களில் அதிகரிப்புகளாகும். இறை மற்றும் இலாபங்கள் ஆகிய இரண்டையும் வருமானம் உள்ளடக்குகிறது. ஒரு தொழில் நிறுவனத்தின் சாதாரண நடவடிக்கைகளின் போது ஏற்படுகின்ற வருமானம் இறையாகும். அத்துடன் விற்பனைகள் கட்டணங்கள் வட்டி உரிமைப்பங்கு இலாபப்பங்குகள் என்ற பல்வேறு பெயர்களினால் இது குறிப்பிடப்படுகிறது. குறிப்பிட்ட சில வகையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தின் கணக்கீட்டுக் கையாளுகையை தெரிவிப்பது இந்த நியமத்தின் குறிக்கோளாகும்.

வருமானத்திற்கான கணக்கீட்டின் பிரதான பிரச்சினை யாதெனில் வருமானத்தை அங்கீகரிப்பது எப்போது என்பதை தீர்மானிப்பதாகும். எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் தொழில் நிறுவனத்திற்கு கிடைக்கும் சாத்தியமுள்ள போது அவற்றை நம்பகமாக அளவிட முடியும் போது வருமானம் அங்கீகரிக்கப் படுகிறது. இந்த நியமம் இவ் அளவு கோல்கள் நிறைவு செய்யப்பட்டு வருமானம் அங்கீகரிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளை இனங்காண்கிறது. அத்துடன் இவ் அளவு கோல்களை பிரயோகிப்பது பற்றிய நடைமுறைச்சாத்தியமான வழிகாட்டலையும் இது வழங்குகிறது.

## வீச்சு (Scope)

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளிலிருந்து கிடைக்கின்ற வருமானத்துக்கான கணக்கீட்டில் இந்த நியமம் (Standard) பிரயோகிக்கப்பட வேண்டும்:

1. பொருட்களின் விற்பனை
2. சேவைகளை வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வட்டி,உரிமைப்பங்குகள் மற்றும் இலாபப் பங்குகளை வழங்குகின்ற நிறுவனத்தின் சொத்துக்களை ஏனையோர் பயன்படுத்தல்

விற்பனைக்காக நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், சில்லறை வியாபாரி ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்ட வியாபாரப் பொருட்கள் போன்ற மீள் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களும் அல்லது, மீள் விற்பனைக்காக காணி மற்றும் ஏனைய சொத்துக்கள்,பொருட்களில் (goods) அடங்குகின்றன.

சேவைகளை வழங்குதல் என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தொழில் நிறுவனத்தினால் ஒப்பந்த ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடு சம்பந்தமானதாகும். இச் சேவைகள் ஒரு காலப்பகுதியின் போது அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காலப்பகுதியின் போது வழங்கப் பட்ட சேவைகளாக இருக்க முடியும். சேவைகளை வழங்குவதற்கான சில ஒப்பந்தங்கள்,நிர்மான ஒப்பந்தங்களுடன் நேரடியாக தொடர்புபட்டவையாகும். உதாரணமாக, திட்ட முகாமையாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களின் சேவைகள் இவ் ஒப்பந்தத்தில் இருந்து கிடைக்கின்ற வருமானம் இந்த நியமத்தில் கையாளப்பட வில்லை. ஆனால், இலங்கை கணக்கீட்டு நியமம் SLAS 13, நிர்மாண ஒப்பந்தங்களில் குறிப்பிடத்தக்கவாறு நிர்மான ஒப்பந்தங்களுக்கான தகமைகளின் படி அவை கையாளப்படுகின்றன.

**தொழில் நிறுவனங்களின் சொத்துக்களை ஏனையோர் பயன் படுத்துதல், பின்வரும் வடிவில் வருமானத்துக்கு வழி செய்கின்றது:-**

a. நிறுவனத்துக்கு கிடைக்க வேண்டிய தொகைகள் அல்லது பணம் அல்லது பணத்துக்கு சமமானவற்றை பயன்படுத்துவதற்கான வட்டி - கட்டணங்கள்

b. உரிமைப்பங்குகள் - நிறுவனத்தின் நீண்டகால சொத்துக்களைப் பயன் படுத்துவதற்கான கட்டணங்கள். உதாரணமாக வர்த்தக அடையாளங்கள், அச்சுரிமை மற்றும் கணனி – மென்பொருள்

c. இலாபப் பங்குகள் - சம உரிமைப் பங்குகளின் முதலீடுகளை வைத்திருப்போருக்கு முதலின் ஒரு குறிப்பிட்ட வகையின் அவர்களின் இருப்புக்களின் விகிதாசாரத்துக்கு அமைய இலாபங்களை பங்கீடு செய்தல்.

**பின்வருவனவற்றில் இருந்து கிடைக்கின்ற வருமானம் பற்றி இந்நியமத்தில் கையாளப்பட வில்லை.**

a. குத்தகை உடன்படிக்கைகள்

b. சம உரிமை வழிமுறையின் கீழ் கணக்குக்காட்டப்பட்ட முதலீடுகளிலிருந்து கிடைக்கின்ற இலாபப் பங்குகள்

c. காப்புறுதி நிறுவனத்தின் காப்புறுதி ஒப்பந்தங்கள்

d. நிதிச் சொத்துக்களின் நியாயமான பெறுமதிகள் மற்றும் நிதிப் பொறுப்புக்களில் மாற்றங்களும் அவற்றினை விற்றுத் தீர்த்தலும்.

e. ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதியில் மாற்றங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

f. கால்நடை,விவசாய மற்றும் வன உற்பத்திப் பொருட்களின் இயல்பான அதிகரிப்புக்கள். மற்றும்

g. கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல்

## வரைவிலக்கணங்கள்

இந் நியமத்தில், பின்வரும் பதங்கள், குறிப்பிட்ட அர்த்தத்தில் உள்ளவாறு பயன்படுத்தப்படுகின்றன.

சம உரிமை பங்குதாரர்களிடமிருந்து கிடைக்கின்ற பங்களிப்புக்கள் தொடர்பான அதிகாரிகளை விட, மொத்த உட்பாய்ச்சலானது சம உரிமைப்பங்குகளில் அதிகரிப்புக்களை ஏற்படுத்தும் போது, ஒரு காலப்பகுதியின் போது ஒரு நிறுவனத்தின் சாதாரண நடவடிக்கைகளில் இருந்து எழுகின்ற பொருளாதார அனுகூலங்களின் மொத்த உட்பாய்ச்சலே வருமானம் ஆகும்.

நியாயமான பெறுமதி (Fire value) என்பது தூரத்து கொடுக்கல் வாங்கல் ஒன்றில் அறியப்பட்ட இசைவான தரப்பினரிடையே ஒரு சொத்தினை பரிமாறுவதற்கு அல்லது ஒரு கடனைத் தீர்ப்பதற்கான தொகையாகும்.

நிறுவனமானது அதனது கணக்கில் பெறுகின்ற மற்றும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ள பொருளாதார அனுகூலங்களின் மொத்த உட்பாய்ச்சல் களை மட்டுமே வருமானம் உள்ளடக்கியுள்ளது. மூன்றாவது தரப்பினர் சார்பாக சேகரிக்கப்பட்ட விற்பனை வரிகள், பொருட்கள் மற்றும் சேவைகள் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட வரிகள் போன்ற தொகைகள் பொருளாதார அனுகூலங்கள் அல்ல. இவை சம உரிமைப்பங்குகளில் அதிகரிப்பை ஏற்படுத்துவதில்லை. ஆகையால் அவை வருமானத்திலிருந்து விலக்கப்படுகின்றன. இதே போன்று ஒரு வியாபார நிலை தொடர்பில் பொருளாதார அனுகூலங்களின் மொத்த உட்பாய்ச்சல்கள் முதலின் (Principal) சார்பாக சேகரிக்கப்பட்ட தொகையை உள்ளடக்குவதுடன் அந் நிறுவன சமஉரிமைப்பங்கில் அதிகரிப்புக்களையும் ஏற்படுத்துவதில்லை. முதல் சார்பாக சேகரிக்கப்பட்ட தொகைகள் வருமானம் அல்ல. பதிலாக தரகுப்பணத்தின் (Commission) தொகையாக வருமானம் உள்ளது.

## வருமானத்தின் அளவீடு

பெறப்பட்ட அல்லது பெறக்கூடியதாகவுள்ள தொகையின் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவிடப்பட வேண்டும்.

ஒரு கொடுக்கல் வாங்கலில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தின் அளவானது வழமையாக அந் நிறுவனத்துக்கும் அச் சொத்தினை வாங்கியவர் அல்லது பயன்படுத்துபவருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்படுகிறது. அந் நிறுவனத்தினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக கழிவுகள் (Volume rebates) கருத்திற் கொண்டு கிடைத்த அல்லது கிடைக்கக்கூடிய தொகையின் நியாயமான பெறுமதியில் இது அளவிடப்படுகிறது.

அநேகமான சந்தர்ப்பங்களில் இத் தொகையானது பணமாகவோ அல்லது பணத்திற்கு சமமான வடிவில் அமைந்திருக்கும். அத்துடன் வருமானத்தின் அளவானது கிடைத்த அல்லது கிடைக்கவுள்ள பணம் அல்லது பணத்திற்கு சமமானவற்றின் அளவானதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறாயின் பணம் அல்லது பணத்திற்கு சமமானவற்றின் உட்பாய்ச்சலானது பிற்போடப்பட்டால் இத் தொகையின் நியாயமான பெறுமதி கிடைத்த அல்லது கிடைக்கவுள்ள பணத்தின் பெயரளவுத் தொகைக்கு (Normal amount) குறைவானதாக இருக்கலாம். உதாரணமாக ஒரு நிறுவனமானது வாங்குபவருக்கு வட்டியில்லாத கடனை வழங்கக் கூடும் அல்லது பொருட்களின் விற்பனைக்கான தொகையாக வாங்குபவரிடமிருந்து சந்தை வட்டி விகிதத்திற்கு குறைவான வட்டியை ஏற்றுக்கொள்ளக்கூடும். உடன்படிக்கையானது விளைதிறனுள்ள ஒரு நிதிக் கொடுக்கல் வாங்கலாக அமையும் போது இத் தொகையின் நியாயமான பெறுமதியானது வட்டியின் பொறுப்பான விகிதத்தை பயன்படுத்தி எதிர்காலப் பெறுகைகள் (Receipts) யாவற்றையும் கவனத்திற் கொள்ளாது தீர்மானிக்கப் படுகிறது. பொறுப்பான வட்டி வீதத்தை (imputed rate of interest) பின்வரும் இருவழிகளில் ஒன்றின் மூலம் அதிக தெளிவாக தீர்மானிக்க முடியும்.

இதே போன்றதொரு வட்டி விகிதத்தில் வழங்கும் ஒருவரின் இதே போன்ற ஒரு கருவிக்கான தற்போது நிலவும் விகிதம் அல்லது பொருள்கள் அல்லது சேவைகளின் தற்போதுள்ள காசு விற்பனை விலைக்கு கருவியாகவுள்ள பெயரளவிலான தொகையினைக் குறைக்கின்ற ஒரு வட்டி விகிதம் தொகையின் (consideration) நியாயமான விலைக்கும் (Fair value), பெயரளவிலான பணத்திற்குமிடையிலான வித்தியாசம், வட்டி வருமானமாக அங்கீகரிக்கப்படுகிறது.

## 1) பொருள்களின் விற்பனை

பின்வரும் நிலைமைகள் யாவும் நிறைவு செய்யப்பட்டதும் பொருள்களின் விற்பனையிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற வருமானம் அங்கீகரிக்கபடவேண்டும்.

a. தொழில் நிறுவனமானது பொருள்களின் (உடமை) உரிமையின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் வாங்குபவருக்கு (Buyer) மாற்றப்பட்டுள்ளன.

b. உடமையுடன் வழமையாக சம்பந்தப்பட்ட அளவுக்கு தொடர்ந்து முகாமைத்துவ ஈடுபாட்டையோ அல்லது விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மீதான வினைத்திறன் உடைய கட்டுப்பாட்டையோ தொழில் நிறுவனம் தக்கவைக்கவில்லை.

c. வருமானத்தின் அளவினை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும்.

d. இக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய பொருளாதார அனுகூலங்கள் தொழில் நிறுவனத்திற்கு கிடைக்கும் சாத்தியமுள்ளது.

e. இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட அல்லது ஏற்படவுள்ள செலவுகள் நம்பகத் தன்மையுடன் அளவிட முடியும்.

வாங்குபவருக்கு உடமையின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை ஒரு தொழில் நிறுவனமானது மாற்றம் செய்யும் போது அதனை மதிப்பீடு செய்வதற்கு அக் கொடுக்கல் வாங்கல்களின் சூழ்நிலைகள் பற்றிய ஒரு பரிசீலனை தேவையாகின்றது. அநேகமான சந்தர்பங்களில் உடமையின் ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளின் மாற்றம் செய்தல் ஆனது வாங்குபவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட ரீதியான உறுதியை (Title) அல்லது உடமை கையளிப்பின் மாற்றத்துடன் ஒரே சமயத்தில் நிகழ்வதாக உள்ளது. அநேகமான சில்லறை (Retail) விற்பனைகளின் விடயத்தில் இது இவ்வாறே உள்ளது. வேறு சந்தர்ப்பங்களில் உடமையின் ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் மாற்றம் செய்யப்படுதல் ஆனது சட்டரீதியான உறுதி அல்லது உடமை கையளிப்பின் மாற்றத்தில் இருந்து வேறு ஒரு சமயத்தில் நிகழ்கின்றது.

## 2) சேவைகளை வழங்குதல்

சேவைகளை வழங்குதல் சம்பந்தப்பட்ட ஒரு கொடுக்கல் வாங்கலின் விளைவை நம்பகமாக கணிப்பிட முடியாத போது இக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய வருமானமானது ஐந்தொகைத் திகதியில் (balance sheet) கொடுக்கல் வாங்கலின் நிறைவுக் கட்டத்தினை குறிப்பிடுவதன் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும். பின்வரும் நிலைமைகள் யாவும் நிறைவு செய்யப்படும் போது ஒரு கொடுக்கல் வாங்கலின் விலையை நம்பகமாக கணிப்பிட முடியும். வருமானத்தின் அளவை நம்பகமாக அளவிட முடியும் போது இக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்கு கிடைக்கும் சாத்தியம். ஐந்தொகைத்திகதியில் கொடுக்கல் வாங்கலின் நிறைவுக்கட்டத்தை நம்பகமாக அளவிடமுடியும். அத்துடன் இக் கொடுக்கல் வாங்கலுக்காக ஏற்பட்ட செலவுகளையும், நிறைவு செய்வதற்கான ஏற்பட்ட செலவுகளையும் அளவிடமுடியும் போது ஒரு கொடுக்கல் வாங்கலின் நிறைவுக்கட்டத்தை குறிப்பிடுவதன் மூலம் வருமானத்தை அங்கீகரிப்பது நிறைவின் சதவீத வழிமுறை (Percentage of completion method) என அநேகமாக குறிப்பிடப்படுகின்றது. இவ் வழிமுறையின் கீழ் சேவைகள் வழங்கப்படுகின்ற காலப்பகுதிகளில் (Accounting periods) வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது. இவ் அடிப்படையில் வருமானத்தை அங்கீகரிப்பதானது சேவைச்செயற்பாடு மற்றும் ஒரு காலப்பகுதியின் போதான செயற்றிறன் ஆகியவற்றின் அளவு பற்றிய பயன் உள்ள தகவலை வழங்குவதாக உள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமம் (SLAS 11) நிர்மாண ஒப்பந்தங்களும் இவ் அடிப்படையில் வருமானம் அங்கீகரிப்பதை வேண்டுவதாக உள்ளது. அந்த நியமத்தின் தேவையான வருமான அங்கீகரிப்புக்கும் சேவை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட ஒரு கொடுக்கல் வாங்கலுக்கான தொடர்புடைய செலவுகளுக்கும் பொருந்துவனவாக உள்ளது.

இக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்கு கிடைக்கும் என்ற சாத்தியம் இருக்கும் போது மட்டுமே வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ஒரு தொகையின் சேமிப்பு பற்றிய நிச்சயமற்ற தன்மை எழும் போது சேகரிக்கப்பட முடியாத இத் தொகை அல்லது மீளப்பெறுவது சாத்தியமற்றது என்ற தொகையானது ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட வருமான அளவு சீராக்கலை விட ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது. இக் கொடுக்கல் வாங்கலின் ஏனைய தரப்பினருடன் பின்வரும் விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் ஒரு நிறுவனம் பொதுவாக நம்பகமான கணிப்பீடுகளை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a. வழங்கப்படவுள்ள மற்றும் தரப்பினரால் பெறப்பட்ட சேவைகள் தொடர்பாக ஒரு தரப்பினரதும் அமுலாக்கப்படக்கூடிய உரிமைகள்.

b. பரிமாற்றம் செய்யப்படவுள்ள தொகை

c. தீர்வின் வகையும் நிபந்தனைகளும்

விளைவு திறனுள்ள ஒரு உள்ளக நிதிப்பாதீடு மற்றும் அறிக்கையிடல் ஒழுங்கு முறை ஆகியவற்றை நிறுவனம் கொண்டிருப்பதும் வழமையாக அவசியமாகும். நிறுவனமானது மீள்நோக்கி தேவையானது சேவை வழங்கப்படுகையில் வருமானக்கணிப்பீடுகளை மீளாய்வு செய்கின்றது. இவ்வாறான மீளாய்வுக்கான தேவையானது இக் கொடுக்கல் வாங்கலின் விளைவினை நம்பகமாக கணிப்பிட முடியாது என்பதை குறிப்பதாக எப்போதும் அமைவதில்லை.

## வட்டி உரிமைப்பங்குகள் (Royalties)மற்றும் இலாபப்பங்குகள் (Dividends)

வட்டி உரிமைப்பங்குகள், மற்றும் இலாபப்பங்குகள் வழங்குகின்ற தொழில் நிறுவனச் சொத்துக்களை ஏனையோர் பயன்படுத்துவதன் மூலம் பெறப்படுகின்ற வருமானத்தை பின்வரும் நிலைமைகளின் கீழ் அங்கீகரிக்க வேண்டும்.

a. கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய பொருளாதார அனுகூலங்கள்

நிறுவனத்திற்கு கிடைக்கும் சாத்தியம் உள்ள போதும்

b. வருமானத்தின் அளவினை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும்.

**பின்வரும் அடிப்படையில் வருமானம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.**

a. சொத்தின் மீதான விளைதிறன் உள்ள பலனைக்கருத்திற் கொள்கின்ற ஒரு விகிதாசார நேர அடிப்படையில் (Time proportion basis) வட்டி அங்கீகரிக்கப்பட வேண்டும்

b. சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் சாரம்சத்துக்கு அமைவாக ஒரு திரட்டு அடிப்படையில் (Accrual basic) உரிமைப்பங்குகள் (Royalties) அங்கீகரிக்கப்பட வேண்டும்.

c. கொடுப்பனவை பெறுவதற்கான பங்குதாரரின் உரிமை நிறுவப்படும் போது இலாபப்பங்குகள் (Dividends) அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஒரு சொத்தின் விளைதிறன் உள்ள பலன் என்பது அச் சொத்தின் ஆரம்பக் கொண்டு செல்லும் தொகையினை (Initial carrying amount) சமப்படுத்துவதற்கு அச் சொத்தின் ஆயுட் காலத்தின் போது எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்காலம் பணப் பெறுகைகளின் ஓட்டத்தைக் (Stream of future cash receipts) குறைப்பதற்கு தேவையான வட்டி விகிதம் ஆகும். ஏதாவது கழிவு (Discount) premium or ஒரு கடன் பிணையின் (A debt security ) ஆரம்ப கொண்டு செல்லும் தொகைக்கும் முதிர்ச்சியில் அதன் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தில் தொகையினை வட்டி வருமானம் உள்ளடக்குகின்றது.

வட்டி வழங்குகின்ற ஒரு முதலீட்டினை உடமையாக்குவதற்கு முன்னதாக கொடுப்பனவு செய்யப்படாத வட்டி திரண்டிருக்கும் போது உடமையாக்கு வதற்கு முன்னதாக மற்றும் பின்னதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதிகள் இடையே வட்டியின் பிந்திய பெறுகைகள் (Subsequent receipt of interest) ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. உடமையாக்குவதற்கு பிந்திய பகுதி மட்டும் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. பங்குப் பிணைகள் மீதான இலாபப்பங்குகள் உடமையாக்குவதற்கு முன்னதாக தேறிய வருமானத்தில் இருந்து வெளியிடப்படும் போது அவ் இலாபப்பங்குகள் பிணை முறிகளின் (Securities) செலவில் இருந்து கழிக்கப்படுகின்றன. எதேச்சையான ஒரு அடிப்படை தவிர இவ்வாறான ஓர் ஒதுக்கத்தினை மேற்கொள்வது சிரமமாக இருப்பின் பங்குப்பிணைகளின் (Equity securities) செலவின் ஒரு பகுதியின் ஒரு மீளப்பெறுதலை அவை தெளிவாக பிரதிபலிக்காவிட்டால் இலாபப்பங்குகள் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக உரிமைப் பங்குகள் (Royalties) திரட்சி அடைவதுடன் அவ் உடன்படிக்கையின் சாராம்சத்தைக் கருத்தில் கொண்டு பிறிதொரு ஒழுங்கு முறை மற்றும் நியாயமான அடிப்படையில் அங்கீகரிப்பது அதிக பொருத்தமானதாக இருந்தால் அன்றி வழமையாக இவ் அடிப்படையிலேயே அங்கீகரிக்கப் படுகின்றன.

இக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய பொருளாதார அனுகூலங்கள் தொழில் நிறுவனத்திற்கு கிடைக்கும் சாத்தியமுள்ள போது மட்டுமே வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. எனினும் வருமானத்தில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்ட ஒரு தொகையின் சேமிப்பு பற்றிய நிச்சயமற்ற தன்மை எழும்புவது சேகரிக்கப்பட முடியாத அத் தொகை அல்லது ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட வருமானத்தின் அளவின் ஒரு சீராக்கல் (Adjustment) என்பதிலும் பார்க்க ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

## வெளிப்படுத்தல் (Disclosure)

ஒரு தொழில் நிறுவனம் பின்வருவனவற்றை வெளிப்படுத்தல் வேண்டும்.

a. சேவைகளை வழங்குவது தொடர்பான கொடுக்கல் வாங்கலின் நிறைவுக்கட்டத்தினை தீர்மானிப்பதற்கு கையாளப்படுகின்ற வழிமுறைகள் உட்பட வருமானத்தினை அங்கீகரிக்கப் பதற்காக கையாளப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள்

b. பின்வரும் விடயங்களில் இருந்து கிடைக்கின்ற வருமானம் உட்பட அக்காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட வருமானத்தின் ஒவ்வொரு குறிப்பிடத்தக்க வகையினதும் தொகை

1. பொருட்களின் விற்பனை
2. சேவைகளை வழங்குதல்
3. வட்டி
4. உரிமைப்பங்குகள்
5. இலாபப்பங்குகள்

c. வருமானத்தில் குறிப்பிடத்தக்க ஒவ்வொரு வகையிலும் உள்ளடக்கப் பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் பரிமாற்றத்தில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தின் அளவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பொருளாதார நெருக்கடி

வ.நந்தீஸ்வரன்
B.B.A (Hons) Dip. in Edu.
(உப அதிபர், யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**அறிமுகம்:-**

ஐக்கிய அமெரிக்காவில் லெக்மன் சகோதரர்கள் நிறுவனத்தின் முறிவைத் தொடர்ந்து உலகெங்கிலும் பரவத் தொடங்கிய உலகப் பொருளாதார நெருக்கடி 1930களில் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தத்தின் பின்னர் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தத்தின் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான நெருக்கடியாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. இந்தப் பாரிய உலகப் பொருளாதார மந்தத்தின் விளைவால் உலகளாவிய நிதிச் சந்தைகளால் 10000 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் பூரணமாக அழிந்து போனது.

**நிதி நெருக்கடி தோன்றிய விதம்**

ஐக்கிய அமெரிக்கா பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாகத் தோன்றிய உலகப் பொருளாதார சமநிலையின்மையே இந்த நெருக்கடிக்கு மூலகாரணமாக இருந்தது என்பது பொருளியலாளர்களின் கருத்தாகும். 1999ம் ஆண்டு அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்ட கிராம்-லீச்-பில்லி சட்டம் முதலிட்டு வங்கிகள் வர்த்தக வங்கித் தொழிலில் ஈடுபடவும் அதேபோல் வர்த்தக வங்கிகள் முதலீட்டு வங்கித் தொழிலில் ஈடுபடவும் இடமளித்தது. மேலும் நிதித்துறையின் ஒழுங்குவிதிகளின் தளர்வால் அமெரிக்கக் குடும்பங்களின் பாரம்பரியமான சிக்கனப் பழக்கம் படிப்படியாக சீர்குலையத் தொடங்கியது. கடன்பெற்றுப் பணத்தைத் தாராளமாகச் செலவிடும் ஒரு நடைமுறையும் ஆரம்பித்தது. மேலும் 2000ஆம் வருடத்தின் போது உலகம் (dot.com.crash) கணினி நெருக்கடியை எதிர்கொண்டது. அதனைத் தொடர்ந்து 2001 செப்.11இல் அமெரிக்காவின் உலக வர்த்தக நிலையத்தின் மீதான பயங்கரவாதத் தாக்குதலும் அதனைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகள் மீதான அமெரிக்கப்படை நடவடிக்கைகளும் அமெரிக்கப் பொருளாதாரம் மீது பாரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அமெரிக்காவில் வர்த்தகப் பற்றாக்குறை இடையறாது அதிகரித்தது. அபரிமிதமான கடன்களில் இருந்து ஒரு முதலீட்டு வீழ்ச்சி அங்கு தோன்றிது. வட்டிவீதம் குறைவாக இருந்ததால் மக்கள் தமது சேமிப்புக்களை முதலிட்டு ஆதாயம் தரும் மெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதனத்துறையை நாடினர். உப முதன்மை ஈடுகளிலும் ஒரு துரித அதிகரிப்பு ஏற்பட்டது. உபமுதன்மைக் கடன் வழங்கல் என்பது பல்வேறு ஆபாய ஏதுக்களின் நிமித்தம் சந்தை வட்டிவீதங்களில் கடன்பெறத் தகைமை பெறாதவர்களுக்கு கடன்களை வழங்கும் நடைமுறையாகும். வர்த்தகப் பற்றாக்குறையைப் போக்க அமெரிக்க டொலரின் பெறுமதி குறைப்புச் செய்யப்பட்டது. எரிபொருட்களின் விலை அதிகரிப்பு, காலநிலை மாறுபாட்டால் உணவுப்பொருள் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்ப்பட்டது. உலகில் பணவீக்கம் வேகமடையத் தொடங்கியது. இதனால் வட்டிவீதத்தை அதிகரிக்க வேண்டியநிலை ஏற்பட்டது. இது சங்கிலித் தொடராகப் பின்வரும் நிலைமைகளை ஏற்படுத்தியது.

1) ஈடுக்கடன்களை எடுத்தவர்கள் தமது கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியது. அக்கடன்கள் தவணைதப்பிய கடனாக மாறியது.

2) வைப்புச் சான்றிதழ்களில் முதலிட்டவர்கள் இழப்புக்களை எதிர்கொண்டனர். மெய்யாதனத் துறையின் செழிப்பும் திடீரென முடிவுக்கு வந்தது.

3) வங்கிகள் கடன் வழங்குவதை நிறுத்திக் கொண்டன.

4) இந்தப் பீதிநிலையினால் மக்கள் வங்கியில் இருந்த வைப்புக்களை மீளப்பெறத் தொடங்கினர்.

5) நட்டங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய விதத்திலான பணத்தொகையைப் பெறமுடியாத நிலை முதலீட்டு வங்கிகளுக்கு ஏற்பட்டது.

இவையனைத்தும் நிதிச்சந்தையின் ஸ்திரத்தன்மையைக் குலைக்க 2008 செப். 15ம் திகதி மிகப் பிரமாண்டமான நிதித்துறை நிறுவனமான லேமன் பிரதேஸ் முறிவடைந்தது. அதனைத் தொடர்ந்து உலகெங்கும் நிறுவனங்கள் முறிவடையத் தொடங்கின. பங்குச் சந்தையும் சரிவடைய உலகளாவிய நிதி நெருக்கடி தோன்றியது.

## உலகளாவிய நிதி நெருக்கடி தென்னாசியப் பிராந்தியம் மீதான தாக்கங்கள்

அமெரிக்காவில் தோன்றிய நிதி சம்பந்தமான குழப்பமானது 2008ம் ஆண்டின் மூன்றாம் காலாண்டளவில் உலகளாவிய நிதி நெருக்கடியாக மாற்றமடைந்தது. ஐரோப்பிய நிதிச்சந்தைகளும் மிகமோசமாகச் சீரழிந்தது. தென்கிழக்காசிய நாடுகளையும் அது வேகமாகப் பாதித்தது. முன்னணிக் கைத்தொழில் நாடான யப்பானும், சீனாவும் கூட பெரும் பாதிப்புக்களைச் சந்தித்தன. எனினும், தெற்காசிய நாடுகளை ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாகவே பாதித்தது. அதற்குரிய காரணங்கள் வருமாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தென்னாசிய வங்கி முறைமை யானது ஐக்கிய அமெரிக்காவின் உப முதன்மை அடமானச் சந்தைகளில் உள்ள அதி பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கருவிகளுடன் மிகக் குறைந்த தொடர்பு களையே கொண்டிருந்தது.

2) பொதுவாக தென்னாசிய நாடுகள் தமது சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கின் மூலதன வெளிப்பாய்ச்சலைப் பூரணமாகத் தாராளப்படுத்தி இருக்கவில்லை.

3) உள்நாட்டு பங்குரிமைச் சந்தைகளில் வெளிநாட்டு முதலீடுகளின் ஒப்பீட்டு ரீதியான பங்கு போதியளவில் இல்லை.

4) ஐக்கிய அமெரிக்காவில் முறிவடையும் நிலையிலிருந்த நிதி நிறுவனங்களின் கிளைகள் தென்னாசிய நாடுகளில் அதிகளவில் பரவியிருக்கவில்லை.

5) உள்நாட்டு நிதிச்சந்தையை ஸ்திரப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தென்னாசிய நாடுகள் மேற்கொண்டமை.

மேற்படி காரணங்களால் தென்னாசியப் பிராந்தியத்தில் தாக்கத்தைக் குறைத்தாலும் இந்த நிதி நெருக்கடி பின்வரும் தாக்கங்களை இப்பிராந்தியத் திலும் ஏற்படுத்தியுள்ளது.

1) வர்த்தக மாற்றுவீத இழப்புக்கள்
2) சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அதிகரிப்பு
3) பொருளாதார வளர்ச்சியில் மந்தநிலை
4) உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வீழ்ச்சி
5) குறைவடைந்துவரும் வெளிநாடுகளில் இருந்தான பண அனுப்புதல்கள்
6) வெளிநாட்டு வர்த்தகம் குறைவடைந்தமை
7) சுற்றுலாத்துறை வளர்ச்சி குறை வடைந்தமை
8) பெறக்கூடிய வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் குறைவடைந்தமை

உலகளாவிய நிதி நெருக்கடித் தாக்கங்களை கணிப்பிடுவதற்காக இலங்கையினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**1) பசல் II ஒப்பந்தத்தின் (Basel II Accord - தேர்வும் அமுலாக்கமும்:-**

இந்த ஒப்பந்தத்தின் கீழ் 3 முக்கிய விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

a) நிதி நிறுவனங்களது ஆகக்குறைந்த மூலதனத் தேவைகள் அதாவது வர்த்தக வங்கிகளின் ஆகக்குறைந்த மூலதனத் தேவை 2500 million ரூபா எனவும் சிறப்பியல்பு வாய்ந்த நிதிநிறுவனங்களது இழிவு மூலதனத் தேவை 1500 million ரூபாவாகவும் வரையறுக்கப்பட்டது. இதன் நோக்கம் மூலதனத்தை வங்கித்தொழில் செயற்பாடுகளால் அதிர்ச்சியை தாக்கும் முக்கிய கருவியாகப் பயன்படுத்து வதாகும்.

b) மேற்பார்வை மீளாய்வு செய்முறை மற்றும் ஆதாரவிடயம் - இதனூடாக அறிமுகம் செய்த விடயம் நிறுவனங் களுக்கு கடன்தர வரிசைப்படுத்தலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களால் வழங்கப்படும் பல்வேறு கடன்படு கருவிகளின் பெறுமதி 100 million ரூபாவிற்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் இக்கடன் தரவரிசைப்படுத்தல் வலுக்கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும் செயற்படுத்தப்படும் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றின் மீது சதவீதத்தை முற்பாதுகாப்புத் தொகையாக ஒதுக்கும் பொது ஏற்பாட்டை அனைத்து வணிகங்களும் பின்பற்ற வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

வீடமைப்புக் கடன்களுக்கு பொருத்தமாக ஆபத்து பொறுப்பு 50 சதவீதத்தில் இருந்து 55 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

வணிகவங்கிகள் அவற்றின் மூலதனத்தில் 15 சதவீதத்தை மட்டுமே வெளிநாட்டுக் கடன் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டன.

c) சந்தை ஒழுங்குமுறை வங்கித் துறையின் அதிர்ச்சியைத் தாங்கும் முக்கிய கருவியாக மூலதனம் காணப்படுவதில் கவனம் செலுத்தல்.

**2) நிதி முறைமையின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு தகவல் தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தல்:-**

அதேநேர மொத்த தீர்ப்பனவுமுறை (RIGS), பத்திரங்களற்ற பிணையங்கள் தீப்பனவு முறை (SSSS) மத்தியவங்கியின் திறைசேரி தொடர்பாடல் நிலைய முகாமைத்துவமுறை Treasury Dealing Room Management System (TDRMS) காசோலை பிரதிமையை வடிவமைத்தல் மற்றும் முனைமுறிப்பு முறை (Cheque Imaging and Truncation System - CITS) போன்ற தகவல் தொழில்நுட்ப முறைகளுடாக செயற்பாடுகளை நவீனமயமாக்கியமையும் விரைவுபடுத்தியமையும்.

**3) மூலதனக் கணக்கின் தாராளமயமாக்கல்**

தெரிந்தெடுக்கப்பட்ட வகையில் உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய மூலதனப் பாய்ச்சலுக்கு இலங்கை 1978இல் அனுமதி வழங்கியது. வழக்கிலுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய உள்நோக்கிய நேரடி முதலீடு அத்துடன் பட்டியலிட்ட முதலீடுகளுக்கு சுதந்திரமாக அனுமதியளிக்கப்பட்டது. மேலும் 2006ல் திறைசேரிப் பிணைகளில் அரச அனுமதி பெற்ற வெளிநாட்டவரை 5% வரை முதலிட அனுமதி அளித்தமையும் மூலதனக்கணக்கில் தாராளமயமாக்கத்திற்கான உதாரணங்களாகும்.

4) மெய்த்துறையைப் பலப்படுத்த இலங்கையில் பின்பற்றப்பட்ட அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வமான பின்வரும் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டன.

a) மெய்த்துறைக் கைத்தொழில் களைப் பாதுகாக்கவென அரசாங்கம் பொருளாதார தூண்டற்பொதி ஒன்றை வழங்கியது. இதிலிருந்தான நிதியைக் கொண்டு பரல், மண்ணெய், மற்றும் எரிவாயு என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டன.

b) ஆடைத்தயாரிப்பு, சுற்றுலாத்துறை, தோற்பொருள் மற்றும் றப்பர்க் கைத்தொழில்கள் மீதான மின்சாரக் கட்டணத்தில் 15% விட்டுக்கொடுப்பு வழங்கப்பட்டமை.

c) சிறுதேயிலைத் தோட்டக்காரர் களுக்கு உரமானியம் வழங்கப்பட்டமை.

d) சுற்றுலாத்துறை நட்டங்களை ஈடுசெய்ய சலுகைக்கால அடிப்படையிலான கடன்வசதி அளிக்கப்பட்டமை.

மேலும் மத்தியவங்கி நெருக்கடிக் குள்ளான நிதி நிறுவனங்களுடன் எமது நாட்டின் உறவுகளைத் தினமும் ஆராய்கிறது. வெளிநாட்டு வங்கிகளுடன் உறவுகளைக் கொண்டுள்ள வணிக வங்கிகளுடன் தொடர்ச்சியாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுகின்றது. பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

## முடிவுரை

பலவருடங்களாக இலங்கையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவுபூர்வமான நிதியியல் நடவடிக்கையின் பயனாகவும் இலங்கை நிதிநிறுவனங்கள் பிணைப்படு கடன்பொறுப்பு வர்த்தகத்தில் ஈடுபடவில்லை என்பதாலும் இலங்கையின் நிதித்துறை மீதான உலகளாவிய நிதி நெருக்கடியின் தாக்கம் குறைவாக இருக்கின்றது. எனினும், இலங்கையின் மெய்த்துறையின் மீதான தாக்கம் பாரியதொன்றாகத் தொடர்ந்து பல வருடங்களுக்கு இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. ஆனாலும் இலங்கையில் தோன்றியுள்ள ஸ்திரமான அரசியல் நிதிச் சந்தையில் ஒரு உறுதியான வளர்ச்சியை அண்மையில் ஏற்படுத்தியுள்ளதும் பங்கு விலைச்சுட்டெண்களாக அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண்ணும் வரலாற்றுச் சாதனையாக உயர்புள்ளிகளைப் பதிவு செய்துள்ளன. உலக நிதி நெருக்கடியில் இருந்து பூரண விடுதலைபெற மக்களது மனங்களை நிதி அமைப்புக்கள் வெற்றிகொள்வது அவசியமாகும்.

## உசாத்துணை நூல்கள்

1. மத்திய வங்கி ஆண்டறிக்கை. 2007 சிறுகுறிப்பு "துணை முதன்மை ஈட்டுச் சந்தை நெருக்கடிகளும் அதன் பாடல்களும்" (பக்கம் 182)

2. பொருளியல் நோக்கு ஏப்ரல்/ மே 2009 - மக்கள் வங்கி வெளியீடு

3. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு "இறை முகாமைத்துவ அறிக்கை" 2008

4. மத்திய வங்கி ஆண்டறிக்கை 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கைத்தொழில் மய நாடு என்ற நிலையை இலங்கை அடையும் சாத்தியம் உண்டா?

ம.ஜெனரஞ்சினி
2010 Com[A]

இலங்கை போன்ற வளர்முக நாடுகள் முன்னுதாரணமாக கொண்டு பின்பற்றக் கூடிய பொருளாதார நிலைப்பாடுகளை கடந்த இரண்டு தசாப்தமாக ஆசியப் பிராந்தியத்தில் கிழக்கு மூலையில் காணப்பட்ட குறிப்பிட்ட சில நாடுகள் கொண்டுள்ளன. அந் நாடுகளைப் புதிய கைத்தொழில் மய நாடுகள் என்பர். (NIC Newly Industrialized countries) தென் கொரியா, கொங்கொங், சிங்கப்பூர், தாய்வான், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகள் NIC நாடுகளாக கருதப்படுகின்றன. இவற்றில் தென்கொரியா, கொங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஆசியாவின் பொருளாதார புலிகள் என பொருளியலாளர்களால் வர்ணிக்கப்படுகிறது.

இன்று மூன்றாம் மண்டல நாடுகளாகக் காணப்படும் நாடுகள் பெருமளவான பொருளாதார இன்னல் களுக்கு முகம் கொடுத்த வண்ணம் இருக்கின்றன. சர்வதேச தங்கியிருப்புக் கொள்கை என்னும் வலைக்குள் சிக்கித் தவிக்கும் உலக நாடுகளுள் இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகள் முன்னணியில் காணப்படுகின்றன. வேலையின்மைத் தாக்கம், தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை, அதிகரித்த பணவீக்கம், தொடர்ச்சியான வரவு செலவுப் பற்றாக்குறை, அரசியல் அமைதியின்மை, உள்நாட்டு இனக்கலவரங்கள், ஆகக் குறைந்த மட்ட பொருளாதார வளர்ச்சி போன்ற காரணங்களால் நாட்டின் அபிவிருத்தியை வேகமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால் புதிய கைத்தொழில் மய நாடு என்ற நவீன கொள்கை குறிப்பாக ஆசிய நாடுகளில் பெரும் முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

இந்நாடுகளில் காணப்படும் முக்கிய இயல்புகள்

1. உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதம் காணப்பட வேண்டும். (வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் 8-10% வரை காணப்படுகின்றன.
2. தலா வருமானம் 2000US$ ற்கு கூடுதலாகக் காணப்படுகின்றது.
3. சேமிப்பு முதலீட்டு வீதங்கள் 30% மாக காணப்பட வேண்டும்.
4. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20%ற்கும் மேலான பங்கினை தயாரிப்பு கைத்தொழில் உற்பத்திகள் கொண்டிருப்பதுடன் இந்நாடுகளில் கைத்தொழில் துறையானது துரிதமாக வளர்ச்சி அடைந்து வரவேண்டும்.
5. வேலையின்மை வீதம் 5%க்கு குறைவாக இருக்க வேண்டும்.
6. மொத்த ஏற்றுமதியில் கைத்தொழில் பொருட்களின் உற்பத்தியின் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20%க்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.

7. இந்நாடுகள் திறந்த பொருளாதாரக் கொள்கையை பின்பற்றி வருவதோடு வெளிநாட்டு முதலீடுகள் பிரதான இடத்தை வகிக்கின்றன.

## NIC நாடும் இலங்கையும் ஒப்பீடு

1. 2008ல் பொருளாதார வளர்ச்சி 6% மாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
2. இலங்கையின் தலா வருமானம் 1969 US$w;F சமமாக காணப்படுகின்றது.
3. சேமிப்பு முதலீட்டு வீதங்கள் 30%மாக காணப்படுதல்.
4. கூட்டிய பெறுமதி முறையில் கணிப்பிடும் போது சேவை உற்பத்தி முதல் இடம் வகித்தல்.
5. வேலையின்மை வீதம் 2008ல் 5.2%மாக காணப்பட்டது.
6. உள்நாட்டு யுத்தம், சிறந்த ஊழியப்படையின்மை , போதுமான உட்கட்டுமான வசதியின்மை என்பவற்றால் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல் அதிகரிப்பதில் சிக்கல் காணப்படுகின்றன.

## NIC நாடு என்ற அந்தஸ்தை பெறுவதற்கு இலங்கை ஆரம்பத்தில் இருந்து மேற்கொண்ட நடவடிக்கைகள்

1. 1948ல் இலங்கையிலிருந்து ஸ்ரேலிங் பவுண் நாணயம் வெளியேற்றப்பட்டு ரூபாய் நாணய முறை அறிமுகப் படுத்தப்பட்டது.
2. 1950ல் எக்கலையில் முதலாவது கைத்தொழில் பேட்டை உருவாகியது. அதனைத் தொடர்ந்து இன்று வரை 05 சர்வதேச தரம் வாய்ந்த கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளது.
3. 1950 நாட்டின் தாய் வங்கியான இலங்கை மத்திய வங்கி உருவாக்கப்பட்டது.
4. 1951ல் முதலாவது கைத்தொழில் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.
5. 1960ல் இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை கொண்டு வரப்பட்டது.
6. 1977ல் கொண்டு வரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை அமுல் செய்யப்பட்டது.
7. 1989ல் தனியார் மயமாக்கல் கொள்கை அமுல் செய்யப்பட்டமை மற்றுமொரு முன்னேற்ற கரமான நடவடிக்கையாக உள்ளது.

கைத்தொழில் துறையின் பெறுமதி கூட்டல் துறை முன்னைய ஆண்டின் 7.6%துடன் ஒப்பிடுகையில் 5.9%ல் வளர்ச்சியடைந்துள்ளது. சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் தயாரிப்பு, மின்வலு, வாயு, நீர் கட்டடவாக்கம் ஆகிய சகல நான்கு துணைத் துறைகளும் இவ் வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிப்புச் செய்தன. கைத்தொழில் துறையின் பங்கு முன்னைய ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 28.5%திலிருந்து 28.4%ற்கு சிறிதளவால் குறைவடைந்தது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் பதனிடல், தொழிற்சாலைக் கைத்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழிலை உள்ளடக்கிய தயாரிப்புத் துணைத்துறையின் பங்கு 17.7%லிருந்து 17.5%ற்கு வீழ்ச்சி அடைந்தமையால் ஏற்பட்டதாகும். மின்வலு வாயு மற்றும் நீர் துணைத்துறையின் பங்கும் 2007ன் 2.5%லிருந்து 2008ல்2.4%ற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

மொத்தக் கைத்தொழில் துறை வெளியீட்டில் கிட்டத்தட்ட 55%தை பங்களிப்புச் செய்யும் தொழிற்சாலைக் கைத்தொழில் 2007ன் 6.7%துடன் ஒப்பிடுகையில் 2008ல் 5.0%ல் வீழ்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி முக்கியமாக உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள், இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள், உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி ஆகிய ஐந்து முக்கிய வகைகளிலான விரிவாக்கத்தால் ஏற்பட்டது. தொழிற்சாலைக் கைத்தொழிலின் செயலாற்றம் முக்கிய ஏற்றுமதி நாடுகளில் நிலவிய பொருளாதார மந்தமான நிலைமைகள், கூலிகள், வலு, எரிபொருள் மற்றும் வட்டிச்செலவு உள்ளிட்ட சார்பு ரீதியிலான உயர் உற்பத்திச் செலவு அது போல் தொடர்ச்சியான இறுக்கமான நாணயக் கொள்கை காரணமாக சார்பு ரீதியில் மெதுவான உள்நாட்டு கேள்வி போன்ற பிரதான காரணங்களால் மெதுவடைந்தது.

இக்கொள்கைகள் இன்றுவரை பல்வேறு எதிர்பார்ப்புக்களின் மத்தியிலும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கையில் பல்வேறு சீர்திருத்த பொருளாதார நடவடிக்கைகளை காலத்துக்குக் காலம் மேற்கொண்ட போதும் அடிக்கடி ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக ஒரு தொடர்ச்சி நிலை காணப்படவில்லை. மற்றும் இலங்கை காலணித்துவ ஆட்சிக் காலத்தின் போது இவற்றினுடைய வளங்கள் குடியேற்றவாத நாடுகளால் சுரண்டப்பட்டதுடன் கைத்தொழில் வளர்ச்சிக்கு தேவையான அடித்தளமும் வளர்ச்சி கட்டமைப்பும் திட்டமிட்டு சிதைக்கப்படாமல் குடியேற்றவாத நாடுகளின் உற்பத்திக்கு மூலவளங்களை வழங்க வேண்டிய கட்டாயத்துக்கு இலங்கை போன்ற நாடுகள் உள்ளடக்கப்பட்டன. இதனால் அவற்றின் கைத்தொழில்துறை பெருமளவில் வளர்ச்சிகான முடியவில்லை. முற்றும் அரசியலில் காணப்பட்ட ஸ்திரமின்மை யாலும் 20 வருட கால உள்நாட்டு இனப் பூசல்களாலும் புதிய கைத்தொழில் மய நாடு என்ற தகுதியை அடைவதில் பல்வேறு வரையறைகளை இலங்கையானது எதிர் நோக்கி நிற்கின்றது.

உசாத்துணை :-

மத்தியவங்கி ஆண்டறிக்கை 2008

வெண்சங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் பின்னணியில் இலங்கை

ப.பிருந்தா
2010 com[A]

2007ல் ஐக்கிய அமெரிக்க துணை முதன்மை ஈட்டுச் சந்தையில் தோற்றம் பெற்ற தற்போதைய உலக நிதியியல் நெருக்கடியானது துரித கதியில் நிதிச் சந்தைகளில் பரவியது. இது ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்காவோடு நெருங்கிய நிதியியல் தொடர்புகளுடைய வளர்ச்சி யடைந்த பொருளாதாரங்களுக்கும் அதனைத் தொடர்ந்து உலகம் பூராகவும் சிதறிப்பரவியது. முன்னெட்பொழுதுமில்லாத மட்டத்தை அடைந்த விலைகளிலான ஏற்ற இறக்கத்தால் ஏற்பட்ட தற்போதைய உலகப் பொருளாதார நெருக்கடியை பின் தொடர்ந்த நிதியியல் நெருக்கடி தற்போதைய உலக பொருளாதார ஒழுங்கு நிறுவியதற்குப் பின்னர் அனுபவிக்கப்படாததொன்றாக விளங்கியது. வர்த்தகம், கைத்தொழில், உற்பத்திகள் மற்றும் நிதியியல் பாய்ச்சல்களில் உலகளாவிய வழிமுறை களிலான மெதுவடைவுப்பாதை போன்றவை பாரதூரமான அதிர்ச்சியை உண்டாக்கி யுள்ளது. உலக பொருளாதார வளர்ச்சி பற்றிய எதிர்வு கூறல்கள் படிப்படியாக மந்தகதியிலான முன்னேற்றத்தினையே அடைகின்றன. 2009 ஜனவரியில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் அடிப்படை எதிர்வு கூறல் மற்றும் ஐக்கிய நாடுகளிலிருந்தான ஆகப் பிந்திய எதிர்வு கூறல்கள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2009ல் பூச்சியத்திற்கு அண்மித்ததாக வளர்ச்சி யடையும் என்பதையும் எதிர்க்கணிய வளர்ச்சியின் சாத்தியத்தைக் கூட அவை நிராகரிக்கவில்லை.

மென்மையடையும் உலக நிதியியல் முறைமையானது வளர்ந்து வரும் நாடுகள் உலகப் பொருளாதாரத்துடன் கொண்டுள்ள தொடர்புகளின் தீவிரத்திற் கமைவாக பாதகமான விளைவுகளைக் கொண்டிருந்தன. இலங்கையைப் பொறுத்த வரையில் மூலதனக் கணக்கு தாராளப் படுத்தப்படாமையாலும் , உள்ளூர் வங்கிகள் சிக்கல் நிறைந்த நிதியியல் துறை மீது உலக நிதி நெருக்கடியின் நேரடித் தாக்கம் குறைந்தளவினதாகவே காணப்பட்டது. இருப்பினும் பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் ஏற்பட்ட திரவத் தன்மை பற்றாக்குறை மற்றும் மெய்த்துறைகளுக்கு பரவி ஏற்படுத்திய கடுமையான தாக்கமும் நாட்டினால் பலமாக உணரப்பட்டது.

உலக நிதி நெருக்கடி காரணமாக அபிவிருத்தியடைந்து வரும் சந்தைகளில் முதலிட்ட பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகரித்துச் செல்லும் திரவத்தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்பாடுகளை எதிர் கொள்வதற்கு தமது குறுங்கால முதலீடுகளை தமது தாய்நாட்டிற்கே திருப்பி அனுப்பினர். இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. திரவத்தன்மை பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக மத்திய வங்கியானது வெளிநாட்டு செலாவணித் தொழிற்பாடுகளூடாக ஈர்க்கப்பட்ட திரவத்தன்மையை தளர்த்தி நியம ஒதுக்குத் தேவையை மூன்று முறைகள் 3% புள்ளிகளினால் குறைத்து 7% மாக்கியதோடு திறைசேரி உண்டியல்களை முதலாந்தர மற்றும் இரண்டாம் தரச் சந்தைகளில் கொள்வனவு செய்தது. எஞ்சிய எந்தவொரு பற்றாக்குறையும் ஓரிரவு அடிப்படையில் நேர்மாற்றுக் கொடுக்கல் வாங்கல்கள் ஊடாக ஈடுசெய்யப்பட்டன. இவ்வழி முறைகள் கொள்கை வட்டி வீதத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட குறைப்புக்களால் உதவப்பட்டதுடன் இது நாணயத் தளர்த்தலுக்கு வழி செய்த வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கத்தால் இயக்கப்பட்டது.

## ஏற்றுமதிக்கான சவால்கள்

நிதி நெருக்கடியின் விளைவாக பாரிய ஏற்றுமதி நிலையமாகவிருந்த இலங்கையின் ஏற்றுமதி நெருக்கடியைத் தொடர்ந்து மெதுவடைந்தது. குறிப்பாக ஆடை உற்பத்திகள் உள்ளடங்கலான இலங்கையின் ஏற்றுமதிக்கான கேள்வியைக் குறைத்தது. 2008ம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் 2.7% வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதிச் சந்தையில் காணப்படும் கடும் போட்டித் தன்மையினாலும், இலங்கையில் உற்பத்திச் செலவு ஒப்பீட்டளவில் உயர்வாகவுள்ளதாலும் பல ஏற்றுமதி யாளர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த லாபமட்டங்களுடன் தொழிற்படுகிறார்கள். அத்துடன் பன்நாட்டுச் சந்தைகளில் தேயிலை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இலங்கையின் தேயிலைத் துறையும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. இறப்பர், கறுவா போன்ற ஏனைய வேளாண்மை ஏற்றுமதிப் பயிர்களின் பன்னாட்டு விலைகள் குறைவடைந்ததன் காரணமாக உற்பத்தி தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்காததால் அரசாங்கம் விலைகளை உறுதிப்படுத்துவதற்காக தலையிட வேண்டி ஏற்பட்டது. இவற்றிற்கு மேலதிகமாக இறப்பர் சார்ந்த உற்பத்திகள், வைரங்கள், ஆபரணங்கள் போன்ற ஏனைய ஏற்றுமதி சார்ந்த துறைகளும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டமையால் அரசாங்கம் இம்முக்கிய துறைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக பொருளாதார தூண்டல் பொதியை வழங்க வேண்டியிருந்தது.

இலங்கையின் சுற்றுலாத் துறையின் பாரிய பங்கைக் கொண்டிருக்கும் மேற்கு ஐரோப்பா தொடர்ச்சியான பொருளாதார மந்த நிலையை நோக்கிச் செல்கிறது. எனவே உலக பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்களின் நிச்சயமற்ற தன்மையின் ஏற்றம் நாணயமாற்று வீத அசைவுத் தளம்பல்கள், சுற்றுலா ஆர்வம் மேம்பட்ட நாடுகளிலுள்ள உயர்வான தொழில் இழப்பு மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையிழப்பு காரணமாக சுற்றுலாத்துறை 2009 ல் மீள் எழுச்சி பெறுவது கேள்விக் குறியாக வுள்ளது. மேலும் கிழக்கு பசுபிக் கரை, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் உயர்வருமானம் பெறும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மெதுவடைவதால் பெருமளவில் பாதிக்கப் படமாட்டார்கள். உலகப் பொருளாதார மந்த நிலை காரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகள் தம்மைப் பாதுகாத்தல் தொடர்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வியாபார முதலீட்டின் சுயாதீன பாய்ச்சலை தடை செய்யலாம். இலங்கை கரை கடந்த வெளிமூலங்களை வழங்கும் முடிவிடமாக தோற்றம் பெற்று வருவதால் வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் வெளியிலிருந்து அறிவைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பணிகள் போன்ற ஏற்றுமதிகள் உள்ளிட்ட பொருட்களிலான வர்த்தகம் இது போல பணிகளிலான வர்த்தகம் மீது உலகளாவிய பொருளாதார மெதுவடைவின் தாக்கத்தை மோசமாக்கலாம்.

குறைந்தளவிலான இறக்குமதிகள், இலாபங்கள், பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றினால் நெருக்கடியின் இணைந்த விளைவு அரசின் அரசிறையைப் பாதிக்கும் குறைவடையும் அரச வருமானங்கள் மற்றும் அதிகரிக்கும் அரச செலவுகள் போன்றவை வடிவமைக்கப்படவுள்ள "பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு 2006 – 2016" இன் கூட்டிணைந்த அரசிறை செயற்பாட்டில் தற்காலிக இடைவிலகலுக்கு இட்டுச் செல்லும் இலங்கை வெளிநாட்டு ஒதுக்குகளை இழந்தவுடன் வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான உட்பாய்ச்சல் உறுதிப்படுத்தப்படாதவிடத்து இலங்கை சென்மதி நிலுவைப் பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இவை உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் பின்னணியில் இலங்கை எதிர்கொண்ட சவால்களாகும்.

உசாத்துணைப் பகுதி :-
இலங்கை மத்திய வங்கி தகவல்
திணைக்களக் குறிப்பேடு 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கீகார வணிகமும் அதன் முக்கியத்துவமும்

## [FRANCHISE BUSINESS & ITS IMPORTANCE]

ஞா.வாசுகி
2010 com[A]

### அங்கீகார வணிக வகை

அங்கீகாரம் வழங்குபவருக்கும், அங்கீகாரம் பெறுபவருக்குமிடையே ஏற்படுத்தப்படும் அங்கீகார வணிக உடன்படிக்கைக்கமைவாக அங்கீகார வணிகமானது பல்வேறு நோக்கங்களின் அடிப்படையிலும், பல்வேறு தேவைகளின் அடிப்படையிலும் பல்வேறு வகைகளிலும் உருவாக்கப்படலாம். உதாரணமாக

1. உற்பத்திப் பொருளுக்கான அங்கீகார வணிகம்
2. உற்பத்திக்கான அங்கீகார வணிகம்
3. வணிக முறைக்கான அங்கீகார வணிகம்

என்றவாறாக உருவாக்கப்படுவதைக் கூறலாம். மேலும் அங்கீகாரம் பெறுபவர் ஒருவர் அங்கீகார வணிகத்தைக் கொள்வனவு செய்யும் போது தனக்குப் பொருத்தமான அங்கீகார வணிகத்தைக் கொள்வனவு செய்வது மிகவும் முக்கியமானதாகும். கொள்வனவு செய்யப்படும் அங்கீகார வணிகம் உற்பத்திப் பொளுக்கானதாகவோ, உற்பத்திக்கானதாகவோ, வணிக முறைக்கானதாகவோ எவ்வாறானதாகவிருப்பினும் அது அங்கீகாரம் பெறுபவருக்கு பொருத்தமானதாக அங்கீகார வணிகத்தைத் தெரிவு செய்கின்ற அடிப்படையிலும் அங்கீகார வணிகத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஒற்றையலகு அங்கீகார வணிகம்
2. தொடர் வரிசை அங்கீகார வணிகம்
3. பிரதேச அபிவிருத்தி அங்கீகார வணிகம்
4. உப அங்கீகார வணிகம்
5. பிரதேச பிரதி நிதித்துவ அங்கீகார வணிகம்

### ஒற்றையலகு அங்கீகார வணிகம்

அங்கீகாரம் பெறுபவர், அங்கீகாரம் வழங்குபவருடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைக்கமைய அங்கீகாரம் பெறுபவர் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தில் மட்டும் அங்கீகார வணிகத்தை உருவாக்க அனுமதிக்கப்படுவர். இதே போல இன்னும் பல அங்கீகாரம் பெறுபவர்களுக்கு வேறு வேறு இடங்களில் அங்கீகார வணிகங்களை உருவாக்க அங்கீகாரம் வழங்குபவர் அனுமதி வழங்குவார். இதுவே ஒற்றையலகு அங்கீகார வணிகமாகும். எனவே இங்கு ஒரு அங்கீகாரம் வழங்குபவரும் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகாரம் பெறுபவர்களும் காணப்படுவர். எனினும் அங்கீகாரம் பெறுபவர் ஒருவர் ஒரு அங்கீகார வணிக நிலையத்தையே நடாத்த அனுமதிக்கப்படுவர்.

## தொடர் வரிசை அங்கீகார வணிகம்

அங்கீகாரம் பெறுபவர் அங்கீகாரம் வழங்குபவருடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைக்கமைவாக முதலில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அல்லது பிரதேசத்தில் மட்டும் அங்கீகார வணிகத்தை உருவாக்க அனுமதிக்கப்படுவர். பின்னர் அங்கீகாரம் பெறுபவர் ஒவ்வொன்றாக மேலும் பலஅ ங்கீகார வணிகங்களை நடாத்த அங்கீகாரம் வழங்குபவரிடம் அனுமதி கோரும் பட்சத்தில் அங்கீகாரம் பெறுபவரின் ஆளுமை, தகமை மற்றும் பொருத்தம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வொன்றாக வரிசையாக இன்னும் பல அங்கீகார வணிகங்களை உருவாக்க அங்கீகாரம் பெறுபவருக்கு அங்கிகாரம் வழங்குபவர் அனுமதிப்பார். இதுவே தொடர் வரிசை அங்கீகார வணிகம் ஆகும். இங்கு ஒரு அங்கீகாரம் வழங்குபவரும், ஒரு அங்கீகாரம் பெறுபவரும் காணப்படுகின்ற போதும் அங்கீகாரம் பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகார வணிக நிலையங்களை வரிசையாக உருவாக்கி நடாத்த அனுமதிக்கப்படுவர்.

## பிரதேச அபிவிருத்தி அங்கீகார வணிகம்

அங்கீகாரம் பெறுபவரை பிரதேச அபிவிருத்தியாளராக நியமித்து அவர் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களிலும் அங்கீகார வணிகத்தை உருவாக்க அங்கீகாரம் வழங்குபவர் அனுமதிப்பார். இதன் பிரகாரம் குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு அங்கீகாரம் வழங்குபவரின் பிரதேச அபிவிருத்தியாளராக தொழிற்படுவதன் மூலம் அவரின் வேண்டுகோளிற்கிணங்க அங்கீகார வணிகங்களை உருவாக்கி அதற்குத் தேவையான ஊழியர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்து அங்கீகார வணிகங்களை நடாத்திச் செல்வர். இதுவே பிரதேச அபிவிருத்தி அங்கீகார வணிகம் ஆகும்.

## உப அங்கீகார வணிகம்

இது தலைமை அங்கீகார வணிகம் (Master Franchising) எனவும் அழைக்கப்படும். இது இரு மட்டத்தில் அங்கீகாரம் பெறுபவர்களைக் கொண்டதாகும். அதாவது அங்கீகாரம் வழங்குபவர் அங்கீகார வணிகத்தை நடாத்த அங்கீகாரம் பெறுபவருக்கு அங்கீகாரம் வழங்குவார். இருவரும் செய்து கொள்ளும் உடன்படிக்கைக்கு அமைவாக அங்கீகாரம் பெறுபவர் குறிப்பிட்ட பிராந்தியத்திற்கு உப அங்கீகாரம் வழங்குபவராகத் தொழிற்படுவதன் மூலம் குறித்த பிராந்தியத்தில் அங்கீகாரம் பெறுபவர்களை நியமித்து அவர்களூடாக உப அங்கீகார வணிகங்களை நடாத்துவார். உப அங்கீகாரம் பெறுபவர்களைச் செயற்படுத்தும் பொறுப்பு உப அங்கீகாரம் வழங்குபவர்களையே சாரும்.

## பிரதேச பிரதிநிதித்துவ அங்கீகார வணிகம்

இதுவும் உப அங்கீகார வணிகம் போன்று இரு மட்டத்தில் அங்கீகாரம் பெறுபவர்களைக் கொண்டதாகும். அதாவது அங்கீகாரம் பெறுபவர் அங்கீகாரம் வழங்குபவரால் பிரதேச பிரதி நிதியாக நியமிக்கப்படுவர். எனினும் உப அங்கீகார வணிகத்தில் காணப்படும் அங்கீகாரம் பெறுபவரை பார்க்கிலும் குறைவான அதிகாரம் உடையவர் அதாவது பிரதேச பிரதிநிதியாக தொழிற்படுவதன் மூலம் அங்கீகார வணிகங்களை உருவாக்கமுடியுமாயின் அந்த அங்கீகாரம் பெறுபவர்கள் தொடர்பான ஆட்சேர்ப்பு, ஏனைய நடவடிக்கைகள் போன்ற சகல நடவடிக்கைகள் தொடர்பாகவும் அங்கீகாரம் வழங்குபவரே முக்கிய பங்காற்றுவார்.

அங்கீகார வணிகமானது இன்றைய வணிகச் சூழலில் மிகவும் உலகப் பிரசித்தி பெற்ற வணிகமாகக் காணப்படுகின்ற போதும் அங்கீகாரம் பெறுபவருக்கும், வழங்குபவருக்கும், பாவனையாளர்களுக்கும் பல்வேறு அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தரப்பினர் | அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
|---|---|---|
| அங்கீகாரம் பெறுபவர் | ❖ சொந்த முயற்சியில் இயக்கமுடிதல்<br><br>பாரிய வணிகத்தில் உட்புக வாய்ப்பு கிடைப்பதுடன் ஆரம்பத்தில் இருந்தே இலாபத்தினை உழைக்க முடிதல்<br><br>❖ அங்கீகாரம் வழங்குபவரின் உதவியுடன் வணிகத்தினை விரிவுபடுத்த முடியும்.<br><br>❖ வணிகஇடர் ஓரளவு குறைவாகக்காணப்படும் விளம்பரப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளை அதிகளவில் மேற்க்கொள்ள வேண்டியதில்லை | ❖ அங்கீகாரம் வழங்குபவரின் கட்டுப்பாடுகள் அதிகமாகக் காணப்படுதல்.<br><br>❖ பூரண சுதந்திரமின்மை<br><br>❖ அங்கிகாரம் வழங்குபவரின் நன்மதிப்பில் முழுமையாக வணிகம் தங்கியிருத்தல்<br><br>❖ இலாபம் தொடர்பான நிச்சயமற்ற தன்மை காணப்படுதல். அங்கீகார வணிகத்தை பெற அதிக செலவுகளை ஏற்க வேண்டியிருத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் வழங்குபவர | ❖ வணிகம் விரிவடைந்து உலகப் பிரசித்தி பெறுதல்<br>❖ அதிக இறை வருமானத்தை உழைக்க முடிதல்<br>❖ அங்கீகாரம் பெற்றவரின் முதலீட்டின் ஊடாகவும் அதிக இலாபத்தை உழைக்கக் கூடியவாய்ப்பு உருவாகுதல்<br>❖ வியாபாரப் பெயரை விற்பனை செய்வதன் மூலமும் வருமானம் உழைக்க முடிதல் | ❖ அங்கீகாரம் பெறுபவர் விடும் தவறுகள் வணிகத்தின் நன்மதிப்பைப் பாதிக்கலாம்<br>❖ அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பைப் பயன்படுத்தி அங்கீகாரம் பெற்றவர் இலாபத்தை உழைத்தல். |
| பாவனையாளர்கள் | ❖ உலகப் பிரசித்தி பெற்ற பொருட்கள், சேவைகளை நுகர்வதற்கான வாய்ப்பு கிடைத்தல்<br>❖ வாழ்க்கைத்தரம் உயர்வடைதல் | ❖ தேவையற்ற நுகர்வுகளுக்கு அடிமையாதல்<br>❖ ஆடம்பரத் தேவைகள் அதிகரித்தல் |


உசாத்துணை நூல்கள்

Don Dosz Kowski, About . com

அறிவு தேடல் - வடிவேல் முருகன் தர்மதாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேந்தலைக் கிரயம் (OVER HEAD COST)

## ஓர் கண்ணோட்டம்

ஜெ.ஜெகஉசாந்தினி
2010 com A

உற்பத்தியுடன் நேரடித் தொடர்பு அற்ற கிரயங்கள் மேந்தலைக் கிரயங்கள் எனப்படும். அதாவது நேரில் பொருட்கிரயம், நேரில் கூலிக் கிரயம், நேரில் செலவுகள் என்பவற்றின் கூட்டுத் தொகை மேந்தலை கிரயம் எனப்படும்.

### மேந்தலைக்கிரயம் வகைப்படுத்தல்

1. தொழிற்பாட்டு அடிப்படையில்
   - ✓ உற்பத்தி மேந்தலைக் கிரயம்
   - ✓ நிர்வாக மேந்தலைக் கிரயம்
   - ✓ விற்பனை விநியோக மேந்தலைக் கிரயம்
2. பண்பு / நடத்தை அடிப்படையில்
   - ✓ நிலையான மேந்தலைக் கிரயம்
   - ✓ மாறும் மேந்தலைக் கிரயம்
   - ✓ பகுதியளவு மாறும் மேந்தலைக் கிரயம்
3. நிகழ்வின் அடிப்படையில்
   - ✓ சாதாரண மேந்தலைக் கிரயம்
   - ✓ அசாதாரண மேந்தலைக் கிரயம்

### கிரய நடைமுறைகள்/ மேந்தலைக்கிரயங்களை பங்கிடும் ஒழுங்கு முறைகள்

1. மேந்தலைக் கிரயத்தை திரட்டுதல்
2. மேந்தலைக் கிரயத்தை ஒதுக்குதல்
3. மேந்தலைக் கிரயத்தை பகிர்தல்
4. மேந்தலைக் கிரயத்தை உறிஞ்சுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேந்தலை கிரயத்தை திரட்டுதல்

உற்பத்தியின் போது ஏற்பட்ட மேந்தலைச் செலவுகளினை ஒன்று சேர்க்கின்ற நடவடிக்கை மேந்தலை கிரயத்தை திரட்டுதல் எனப்படும். இத் திரட்டுதல் கருமமானது மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

Eg:- பட்டியல்கள் - வாடகை, காப்புறுதி

## மேந்தலைக் கிரயத்தை ஒதுக்குதல்

மேந்தலைக் கிரய உருப்படிகளில் குறித்த கிரய நிலையத்துக்குரியதென தெளிவாக இனங்கான முடியுமானவற்றை அந்நிலையத்திற்கு சாட்டுதல் செய்தல் மேந்தலைக் கிரயத்தை ஒதுக்குதலாகும்.

Eg:- ஒவ்வொரு கிரய நிலையத்திற்குமென தனித்தனியான மின்சாரமாணி பொருத்தப்பட்டிருப்பின் மின்சாரக் கட்டணம் என்பது குறித்த கிரய நிலையத்திற்கென ஒதுக்கப்படலாம்.

## கிரய பகிர்வு

கிரய ஒதுக்கின் போது அதற்கென உரிய தனிச்செலவுகளை உரிய திணைக்களத்திற்கு ஒதுக்கலாம். ஆனால் அனைத்துக் கிரயங்களையும் இவ்வாறு ஒதுக்க முடியாது. இவற்றை நியாயமான அடிப்படையில் பகிர்வு செய்ய வேண்டும்.

## முதலாம் கட்டப் பகிர்வின் அடிப்படைகள்

| மேந்தலைக்கிரயம் | அடிப்படை |
|---|---|
| வாடகை, இறை, கட்டிடதேய்வு, வெளிச்ச மூட்டல். | இடப்பரப்பு |
| சிற்றுண்டிச் செலவு, தொழிலாளர் காப்புறுதிப் பங்களிப்பு, மேற்பார்வைச் செலவு | தொழிலாளர் எண்ணிக்கை |
| பொறி பராமரிப்பு, பொறி பெறுமானத்தேய்வு களஞ்சிய செலவு | பொறியின் பெறுமதி<br>பொருட்களின் வேண்டுகோள்களின் அளவு, பொருட்களின் நிறை, பொருட்களின் பெறுமதி |
| தரக் கட்டுப்பாடு | உற்பத்தி அலகுளின் எண்ணிக்கை |
| EPF | மொத்தக் கூலி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் கட்ட பகிர்வின் அடிப்படைகள்

| சேவைத்துறை | அடிப்படை |
|---|---|
| களஞ்சியத்துறை | பொருள் வேண்டுகோள்களின் எண்ணிக்கை, விநியோகிக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுத்துறை | கொள்வனவுக் கட்டளைகளின் எண்ணிக்கை பொருள் வேண்டுகோள் பத்திரத்தின் எண்ணிக்கை கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் அளவு |
| பராமரிப்புத்துறை | பராமரிப்பு மணித்தியாலங்கள் |
| உற்பத்தித் திட்டமிடல் | திட்டமிடல் மணித்தியாலங்கள் |
| ஆளணித்துறை, சிற்றுண்டிச்சாலை பாதுகாப்பு, மருத்துவ வசதி பொழுதுபோக்கு வசதி, நலத்துறை. | ஊழியர் எண்ணிக்கை ஊழியர் கூலி |

**Note:**

***ஒன்றுக்கு மேற்பட்ட சேவைத்துறை உள்ள போது இரண்டாம் கட்டப்பகிர்வு மேற்கொள்ளப்படும் முறைகள்***

1. நேரடி மறுபகிர்வு முறை
2. நீக்குதல் முறை
3. பரஸ்பர அடிப்படை முறை
   a. தொடர் பங்கீட்டு முறை
   b. ஒருங்கமை சமன்பாட்டு முறை

## மேந்தலை உறிஞ்சுதல் (Over head Absorbtion)

மேந்தலைக் கிரயத்தை ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில் கிரய அலகுகளுக்கிடையில் பகிர்வு செய்தல் ஆகும்.

கிரய அலகு ஒன்றின் மேந்தலைக் கிரயத்தினை சரியான முறையில் மதிப்பீட்டு அலகொன்றின் கிரயத்தை மதிப்பிடல் அதன் முக்கியத்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேந்தலை உறிஞ்சுதல் முறைகளும், அவற்றின் சமன்பாடுகளும்.**

1. உற்பத்தி அலகு முறை

   உற்பத்தி அலகு ஒன்றிற்கான மேந்தலை = $\frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட உற்பத்தி அலகு}}$

2. ஊழியமணி முறை

   ஒரு ஊழிய மணிக்கான மேந்தலை = $\frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட ஊழியமணி}}$

3. இயந்திர மணி முறை

   ஒரு இயந்திர மணிக்கான மேந்தலை = $\frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட இயந்திரமணி}}$

4. நேர்மூலப் பொருள் கிரய சதவீத முறை

   அலகுக்கான மேந்தலை நேர் மூலப்பொருள் கிரயத்தின் சதவீதமாக = $\frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை} \times 100}{\text{மதிப்பிடப்பட்ட நேர்மூலப்பொருள் கிரயம்}}$

5. நேர் கூலிக் கிரய சதவீத முறை

   அலகுக்கான மேந்தலை நேர் கூலிக் கிரயத்தின் சதவீதமாக = $\frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை} \times 100}{\text{மதிப்பிடப்பட்ட நேர்கூலிக் கிரயம்}}$

6. முதற்கிரய சதவீத முறை

   அலகுக்கான மேந்தலை முதற்கியத்தின் சதவீதமாக = $\frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை} \times 100}{\text{மதிப்பிடப்பட்ட முதற்கிரயம்}}$

Note:- குறை உறிஞ்சுதல் = உறிஞ்சுதல் விகித மேந்தலை $<$ உண்மை மேந்தலை

மிகை உறிஞ்சுதல் = உறிஞ்சுதல் விகித மேந்தலை $>$ உண்மை மேந்தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிகை உறிஞ்சுதல் / குறை உறிஞ்சுதல் ஏற்படக் காரணங்கள்**

1. மேந்தலைக்கிரய மதிப்பீடுகளில் ஏற்படும் தவறுகள்
2. உற்பத்தி வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பு / குறைவு
3. உற்பத்தி இயலளவில் ஏற்படும் எதிர்பாராத மாற்றங்கள்
4. பருவகால மாற்றங்கள்

என்பன உண்மையான உருப்படிகளும், பாதீட்டு உருப்படிகளும் வேறுபடுவதற்கான காரணங்களாகும்.

## Example

❖ வரையறுத்த சானு கம்பனியானது வானொலிப் பெட்டிகளை, தொலைபேசி பெட்டிகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. ஒவ்வொரு உற்பத்தி பொருட்களும் செய்யப்படுகின்றன. இக்கம்பனியில் களஞ்சியம், பராமரிப்பு என இரு சேவை நிலையங்கள் உள்ளன.

**மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மேந்தலைக் கிரயங்கள் வருமாறு:**

| விபரம் | உற்பத்திப்பகுதி | | சேவைப்பகுதி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | பொருத்துதல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் | பராமரிப்பு | |
| நேரில் கூலி | 8640 | 3120 | 660 | 1035 | 13455 |
| நேரில் மூலப்பொருள் | 450 | 375 | 150 | 300 | 1275 |
| தொழிற்சாலை வாடகை | | | | | 45 |
| பொறி இயந்திர பெறுமானத்தேய்வு | | | | | 300 |
| மின்சாரம் | | | | | 120 |
| வேலையாட்களுக்கான காப்புறுதி | | | | | 120 |
| | | | | | 15720 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புபட்ட ஏனைய தகவல்கள்

| விபரம் | பொருத்துதல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் | பராமரிப்பு |
|---|---|---|---|---|
| பரப்பளவு (சதுர m) | 150000 | 75000 | 75000 | 150000 |
| பொறி இயந்திர புத்தக பெறுமதி | 1500000 | 750000 | 300000 | 450000 |
| கிலோ வாற் | 4500 | 3000 | 3000 | 1500 |
| வேலையாட்களின் எண்ணிக்கை | 60 | 30 | 15 | 15 |
| பராமரிப்பு வேலையாட்களுக்கான வேண்டுதல்களின் எண்ணிக்கை | 75 | 60 | | 15 |
| களஞ்சிய வேண்டுதற் குறிப்புக்களின் எண்ணிக்கை | 1500 | 750 | | |
| நேர ஊழிய மணித்தியாலங்களினது எண்ணிக்கை | 5000 | 2000 | | |

வானொலிப்பெட்டியொன்றுக்கு 2 மணித்தியாலங்களும், தொலைபேசிப் பெட்டியொன்றுக்கு 8 மணித்தியாலங்களும், பொருத்துதல் பிரிவில் தேவைப்படுகின்றது. முடிவுறுத்தல் பகுதியில் வானொலிப் பெட்டி 2 மணி 30 நிமிடங்களையும், தொலைபேசிப் பெட்டி 4 மணி 30 நிமிடங்களையும் எடுக்கின்றன.

தேவைப்படுவது:

1. பகிர்வு அடிப்படையைத் தெளிவாகக் காட்டக்கூடியவாறு மேந்தலை பகிர்வு அட்டவணையைத் தயாரிக்குக.
2. மீள் பகிர்வு அட்டவணையைத் தெளிவாகக் காட்டக்கூடியவாறு சேவைப் பிரிவு மேந்தலைக் கிரயங்களை உற்பத்தி பிரிவுக்கு மீள் பகிர்தல்.
3. பொருத்துதல், முடிவுறுத்தல் பிரிவுகளுக்கான மேந்தலை உறிஞ்சுதல் வீதங்களை நேர் ஊழிய மணித்தியாலங்கள் அடிப்படையில் தனித்தனியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேந்தலை கிரய பகிர்வு கூற்று

| கிரய உருப்படி | பகிர்வின் அடிப்படை | மொத்தம் | உற்பத்திகிரய நிலையம் | | சேவைக்கிரய நிலையம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருத்துதல் | முடிவுறுத்தல் | பராமரிப்பு | களஞ்சியம் |
| 1. நேரில் கூலி | நேர் ஒதுக்கீடு | 13455 | 8640 | 3120 | 660 | 1035 |
| நேரில் மூலப்பொருள் | நேர் ஒதுக்கீடு | 1275 | 450 | 375 | 150 | 300 |
| தொழிற்சாலை வாடகை | பரப்பளவு | 450 | 150 | 75 | 75 | 150 |
| பொறி இயந்திர பெறுமானத் தேய்வு | பொறி பெறுமதி | 300 | 150 | 75 | 30 | 45 |
| மின்சாரம் | கிலோவாட் | 120 | 45 | 30 | 30 | 15 |
| வேலையாட்களுக்கான காப்புறுதி | வேலையாட்களின் எண்ணிக்கை | 120 | 60 | 30 | 15 | 15 |
| | | 15720 | 9495 | 3705 | 960 | 1560 |
| 2. மீள் பகிர்வு | | 15720 | 9495 | 3705 | 960 | 1560 |
| பராமரிப்பு நிலையம் | வேலையாட்களின் எண்ணிக்கை | | 480 | 384 | (960) | 96 |
| களஞ்சிய நிலையம் | வேண்டுதல் எண்ணிக்கை | | 1104 | 552 | | (1656) |
| | | 15720 | 11079 | 4641 | 00 | 00 |

3. பொருத்துதல் திணைக்களத்தினது மேந்தலை உறிஞ்சுதல் விதம் $= \dfrac{\text{மேந்தலை}}{\text{நேர் ஊழிய மணித்தியாலம்}}$

$= \dfrac{11079}{5000} = 2.21/=$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுறுத்தல் திணைக்களத்தினது மேந்தலை உறிஞ்சுதல் விதம் = $\frac{\text{மேந்தலை}}{\text{நேர் ஊழிய மணித்தியாலம்}}$

$= \frac{4641}{2000} = 2.32/=$

1. வானொலிப்பெட்டி ஒன்றினால் உறிஞ்சப்பட்ட மேந்தலை

| | | | |
|---|---|---|---|
| பொருத்துதல் | 2 X 2.21 | = | 4.42 |
| முடிவுறுத்தல் | 2 ½ X 2.32 | = | 5.8 |
| | | | 10.22/= |

தொலைபேசிப் பெட்டி ஒன்றினால் உறிஞ்சப்பட்ட மேந்தலை

| | | | |
|---|---|---|---|
| பொருத்துதல் | 8 X 2.21 | = | 17.68 |
| முடிவுறுத்தல் | 4 ½ X 2.32 | = | 10.44 |
| | | | 28.12/= |

உசாத்துணை:-

R.sukirthan

## கம்பியூட்டர் ஜோக்ஸ்

- குழந்தைகள் பேசும் மொழி பைனரி மொழின்னு ஏன் சொன்னே?
  எனக்கு தெரியாது சார்! மதர் போர்ட்டுக்கு (தாய்க்கு) மட்டும் தான் தெரியும்

- கம்பியூட்டருக்கு ∴பாதர் யார்?
  அட, ∴பாதரெல்லாம் கெடையாது சார்! வெறும் மதர்போர்டு மட்டும் தான்

- அந்த யுத்தத்தில் நமக்கு படு தோல்வி, என்ன பயிற்சி கொடுத்தீர் தளபதி?
  நீங்க தான் நவீன பயிற்சி கொடுக்கச் சொன்னீங்க மன்னா! அதான் எல்லா கமாண்டோக்களுக்கும் கம்பியூட்டரில் Duke 3D யில் பயிற்சி கொடுத்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகை உலுக்கி வரும் உணவுப் பற்றாக்குறை

ஜீ.தாக்ஷாயினி
2010 Arts B

மூன்றாம் உலகம் என்பது பொதுவாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளையே குறிக்கின்றது. 1990ம் ஆண்டில் வெளியிடப்பட்ட "உலக அபிவிருத்தி அறிக்கை" 610 அமெரிக்க டொலர்களுக்கு குறைவான தலாவருமானத்தை கொண்ட நாடுகளை "மிகக்குறைந்த வருமான நாடுகள்" எனவும் 610 தொடக்கம் 2465 அமெரிக்க டொலர்கள் வரை தலா வருமானத்தை கொண்ட நாடுகளை "நடுத்தர தாழ்வருமான நாடுகள்" எனவும் வரையறை செய்துள்ளது. இத்தகைய மிகக்குறைந்த வருமானம் பெறும் நாடுகள், நடுத்தர தாழ்வருமானம் பெறும் நாடுகள் என்பனவே மூன்றாம் உலக நாடுகள் என்பதனுள் அடங்குகின்றன. மூன்றாம் உலக நாடுகள் அதிகமாக ஆபிரிக்கா, ஆசியா, தென்அமெரிக்காக் கண்டங்களில் பரம்பியுள்ளன.

இத்தகைய மூன்றாம் உலக நாடுகளில் இன்று பிரதானமான பிரச்சினைகளில் ஒன்றாகத் தலைதூக்கி யிருப்பது "உணவுப் பற்றாக்குறை" ஆகும். உணவுப்பிரச்சினை, வறுமை என்பன இன்று ஒன்றுடன் ஒன்று இணைந்த பிரச்சனையாக உருவெடுத்துள்ளன. 1999ம் ஆண்டு உலகில் நிலவிய வறுமை மட்டத்தை 2015ஆம் ஆண்டளவில் அரைவாசியாக குறைப்பதையே நோக்கமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை "மிலேனியம் அபிவிருத்தி இலக்காக" கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இன்று உலகில் உணவுப் பிரச்சினையானது ஆபிரிக்கா, ஆசியா நாடுகளை அதிகம் ஆக்கிரமித்துள்ளது. ஆசியாவில் இந்தியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், போன்ற நாடுகளும் ஆபிரிக்காவில் சிம்பாவே, கென்யா, ருவாண்டா, உகண்டா, எதியோப்பியா, சோமாலியா, சூடான் போன்ற நாடுகளும் அதிகளவில் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன. உலக நாடுகளின் உணவுப் பற்றாக்குறையினைப் பின்வரும் கோணங்களில் நோக்கமுடிகின்றது.

1. உணவு தானியப் பொருட்களுக்கு ஏற்படும் பற்றாக்குறை.
2. போசாக்கான உணவுப் பொருட்களுக்கு ஏற்படும் பற்றாக்குறை.

ஆசிய நாடுகளைப் பொறுத்த வரையில் உள்நாட்டில் உணவு, தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும் உணவு தானியங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களால் நுகரப்படுகின்ற உணவுப் பொருட்கள் பல போசாக்குக் குறைந்தவையாகக் காணப்படுகின்றன. மேலும் உள்நாட்டில் நிலவும் வறுமை காரணமாக போசாக்கான உணவுப் பொருட்களை மக்களால் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் உருவாகியுள்ளன. மேலும் உணவுப் பொருட்களில் காணப்படுகின்ற போசனைகள் தொடர்பான அறிவும் மக்கள் மத்தியில் காணப்பட வில்லை.

ஆபிரிக்காவில் அன்றாடவேளை உணவுகளைப் பெற்றுக் கொள்வதிற்கூட சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆபிரிக்காவின் பல நாடுகளில் உள்நாட்டு தரைத்தோற்றம், காலநிலை போன்ற நிலைமைகள் உணவுற்பத்திக்கு சாதகமாக அமையவில்லை. குறிப்பிட்ட சில வறண்ட தானியங்கள் தவிர நெல், கோதுமை, பார்லி, போன்ற உயர்வகைத் தானியங்களை இந்த நாடுகளில் உற்பத்தி செய்துகொள்ள முடியாத நிலமை உருவாகியுள்ளது. ஒப்பீட்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது தாழ்ந்த மட்டத்தில் காணப்படுகின்ற ஆபிரிக்க நாடுகளால் வெளிநாடுகளிடம் இருந்து உணவு தானியங்களை அதிகமாக இறக்குமதி செய்து கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. இதன் காரணமாக இந்நாடுகளில் உணவு பற்றாக்குறையின் வீதம் அதிகரித்துச் செல்கின்றது.

உலக உணவுப் பற்றாக் குறைக்கான பிரதான காரணங்களை நோக்குகின்ற போது "மேலதிக உணவுப் பொருட்கள் சந்தைப்படுத்தப்படாமையைக் குறிப்பிடலாம். அதாவது கனடா, ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா போன்ற அபிவிருத்தி யடைந்த நாடுகள் கோதுமையை அதிகமாக உற்பத்தி செய்கின்றன. வெளிநாட்டு ஏற்றுமதியின் வருடாந்த அளவு தவிர மேலதிகமான கோதுமையை சந்தைப்படுத்த விரும்புவதில்லை. இதற்குப் பிரதான காரணம் தான் ஏற்றுமதி செய்யும் கோதுமையின் விலையினை உயர்வாக வைத்திருத்தலேயாகும்.

மேலும் "உணவு வீண்விரயம்" உலக உணவு நெருக்கடிக்கு மற்றுமோர் காரணமாகும். அதாவது அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் தாம் மேலதிகமாக உற்பத்தி செய்கின்ற கோதுமையை மீன்களுக்கு உணவாக்கும் வகையில் கடலிற் கொட்டுகின்றன. மேலும் சிலநாடுகள் கோதுமை, சோளம் போன்ற தானியங்களை விலங்குத் தீவன உற்பத்திக்குப் பயன்படுத்துகின்றன. மேலும் சில நாடுகள் மீன்கள் போன்ற கடலுணவுப் பொருட்களை விவசாய நடவடிக்கை களுக்கான பசளைத் தயாரிப்பிற்குப் பயன்படுத்துகின்றன. மேலும் பாரிய உணவுக் களஞ்சியங்களில் எலிகள், பூச்சிகள் என்பனவற்றால் மூடைகளில் உள்ள உணவுப் பொருட்கள் சிந்தப்படுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை வாகனங்களில் கொண்டு செல்லும் போது சிந்தப்படுதல் என்பனவும் உணவு வீண்விரயத்திற்கும் அதனால் ஏற்படும் உலக உணவு பற்றாக்குறைக்கும் காரணங்களாகும்.

மேலும் அனேகமான அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்நாட்டில் நடைபெறும் யுத்தங்கள் உணவு உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளன. இலங்கை, சூடான் போன்ற நாடுகளில் உள்நாட்டு யுத்த காரணமாக ஏராளமான விளைநிலங்கள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படாது காணப்படுகின்றன. மேலும் யுத்தததினால் விவசாயக் குடும்பங்களின் வெளிநாட்டு இடப்பெயர்வுகளும் உள்நாட்டு உணவு உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளன. மேலும் துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் சனத்தொகைக்கு ஏற்ப இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உணவு உற்பத்தி மேற்கொள்ள முடியவில்லை. இதனால் உலக உணவு நெருக்கடி தொடர்ந்தும் அதிகரிக்கின்றது. மேலும் பிறேசில் போன்ற நாடுகளில் கரும்பு போன்ற உணவுப் பொருட்கள் எரிபொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகின்றது.

உணவுப் பற்றாக்குறை, போசாக்கான உணவு இன்மை என்பனவற்றால் பாதிக்கப்படும் நாடுகளில் மரஸ்மஸ், குவாசியக்கோர், மந்தபுத்தி, உடல் வளர்ச்சியின்மை, பார்வைக் கோளாறு, திடீர் மரணம், ஆயுள் எதிர்பார்ப்புக் குறைவு போன்ற பிரச்சினைகள் தோன்றுகின்றன.

உலக உணவு பற்றாக்குறையைக் குறைக்க வேண்டுமாயின் உலக நாடுகளின் தானிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கு உலக உணவு விவசாயஸ்தாபனம், உலக உணவுத்திட்டம், உலகவங்கி போன்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்குதல் வேண்டும். மேலும் அதிக விளைவுதரக்கூடிய விதையினங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை விவசாயத்தில் பயன்படுத்துவதோடு பசுமைப் புரட்சிக்கு நாடுகள் முக்கியத்துவம் வழங்க வேண்டும். நீர் பற்றாக்குறையான பகுதிகளில் நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதோடு உணவு வீண்விரயத்தைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

உசாத்துணை நூல்கள்:-

மானிடபுவியியல் புத்தகம் (பாடத்திட்ட புத்தகம்)

மத்திய வங்கி ஆண்டறிக்கை 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் மயமாக்கலும் இலங்கையும்

அயந்தா.யோ
2010com[b]

## அறிமுகம்

1700 களின் இறுதிக்காலப் பகுதியில் இங்கிலாந்தில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சியால் அதன் பொருளாதாரத்தில் தோற்றுவிக்கப்பட்ட மாற்றங்கள் கைத்தொழில் மயமாக்குதலுக்கான ஓர் அடிப்படையை வகுத்தல் எனலாம். இதன் தாக்கங்கள் 1800 களின் ஆரம்பத்தில் ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளிலும் வட அமெரிக்க மாநிலங்களிலும் பரவ ஆரம்பித்தன. இவ்வகையில் உலகில் முதலாவதாக கைத்தொழில் மயமாகிய நாடாக ஐக்கிய இராச்சியம் விளங்குகின்றது. மேலும் ஐரோப்பாவிற்கு வெளியே முதலாவதாக கைத்தொழில் மயமாகிய நாடு என்ற அந்தஸ்தை ஐக்கிய அமெரிக்கா பெற்றுக் கொண்டது.

பிரதானமாக வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதாரமானது கைத்தொழில் துறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நிலையை நோக்கி தீவிரமாக எட்டியுள்ள ஓர் அபிவிருத்திக் கட்டமே கைத்தொழில் மயமாக்கல் எனப்படுகிறது. எனவே கைத்தொழில் மயமாக்கலின் போது ஒரு நாட்டின் கைத்தொழில் துறையில் தயாரிப்புத் துறை (Manu Facturing) மிக முக்கியமான தனி ஒரு அங்கமாக எழுச்சி அடையும் நிலை தெளிவாகக் காணப்படும். ஏனெனில் கைத்தொழில் புரட்சியின் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட பிரதான மாற்றம் மனித கரங்களைப் பயன்படுத்தி அதுவரை செய்யப்பட்டு வந்த பல வேலைகளை இயந்திரங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டமையும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு அங்கு இயந்திரங்களை இயக்குவதற்காக இயந்திரங்களுடன் தொழிலாளிகள் பிணைக்கப்பட்டமையும் ஆகும்.

## கைத்தொழில்துறை பொருளாதார வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் பங்களிப்புச் செய்துள்ள விதம்

❖ வேளாண்மை சேவை ஆகிய துறைகளுக்கு தேவையான இயந்திரங்களை வழங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் உற்பத்தியில் வினைத்திறன் அதிகரித்து அதனூடாக உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டமை. இவ் உற்பத்தி மட்ட அதிகரிப்பால் நுகர்வு மட்டம் அதிகரித்தமை. குறைந்த மனித உழைப்பைப் பயன்படுத்தி இயந்திரம் அதிகளவு உற்பத்தியை மேற்கொள்வதால் மனிதனுக்கு ஓய்வுக்கும் பொழுதுபோக்குக்குமான நேரம் கூடுகிறது. இயந்திர பாவனையால் ஏற்படுகின்ற துரித நெருக்கமானது வளர்ந்து வரும் மனித தேவைகளை இலகுவாக பூர்த்தி செய்ய வழி சமைத்துள்ளது.

- ❖ வேளாண்மை மற்றும் சேவைத்துறைகளது உள்ளீடுகளையும் வெளியீடுகளையும் உள்வாங்கிக் கொள்வதால் கைத்தொழில்துறை அத்துறைகளது வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்கிறது. கைத்தொழில் துறையின் வளர்ச்சியால் மக்களது வருமான மட்டம் அதிகரித்து பொழுது போக்கு உல்லாசப்பயணம் வங்கிச் சேமிப்பு காப்புறுதி போன்றவற்றிற்கு கேள்வி அதிகரிப்பதால் சேவைத்துறையும் வளர்ச்சியடையும்.
- ❖ வேளாண்மை மற்றும் சேவைத்துறைகளுக்கு தேவையான சந்தை வாய்ப்புக்களையும் கைத்தொழில்த்துறை உருவாக்கிக் கொடுக்கிறது. சந்தைகளில் சேவைத்துறையின் புதிய பல அங்கங்களின் தோற்றத்திற்கும் விரிவாக்கத்திற்கும் கைத்தொழில் துறை பங்களித்துள்ளது.
- ❖ பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் கைத்தொழில் துறையின் வளர்ச்சி துரிதப்படுத்துகின்றது.

விவசாயம் மற்றும் சேவையாகிய துறைகளுக்குத் தேவையான இயந்திரங்களை கைத்தொழில் துறை வழங்குவதாலும் அத்துறைகளது உள்ளீடுகளையும் வெளியீடுகளையும் உள்வாங்கிக் கொள்வதாலும் அத்துறைகளுக்குத் தேவையான சந்தை வாய்ப்புக்களை சிறப்பாக அமைத்துக் கொடுப்பதில் பங்களிப்புச் செய்வதாலும் பொருளாதாரத்தின் வளப் பயன்பாட்டு மட்டத்தை அதிகரிப்புச் செய்வதாலும் கைத்தொழில் துறையானது பொருளாதாரத்தின் ஒட்டு மொத்தமான வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை ஆற்றுகிறது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உயர்மட்ட உற்பத்தித் திறன் பேரளவு உற்பத்தி, அதிகளவு வருமானம், அதிக நுகர்வு, அதிக சேமிப்பு, அதிக முதலீடு என்பன பொருளாதாரத்தில் இடம் பெறுவதற்காக ஓர் உறுதியான அடிப்படையை கைத்தொழில் துறை உருவாக்குகிறது. இவற்றால் மக்களது வருமானம் அதிகரித்து வாழ்க்கைத்தர உயர்வு எட்டப்பட முடியும். இவ்வகையில் கைத்தொழில் துறையானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் அதனூடாக அபிவிருத்தியிலும் செயற்திறன் மிக்க பங்களிப்பை வழங்குகின்றது. எனவே வளர்ச்சியின் இயந்திரமாக கைத்தொழில் துறை விளங்குகின்றது

## உலகளாவிய கைத்தொழில் மயமாக்கலில் இலங்கை

உலக பொருளாதாரத்தை நோக்கும் போது அங்கே கைத்தொழில்மய நாடுகளது தெளிவான வகுதியொன்றையும் இதுவரையில் கைத்தொழில்மயமாகாத நாடுகளில் உள்ளடக்கிய மற்றும் ஒரு பெரிய தொகையையும் இனங்காட்டலாம். இன்றைய சர்வதேச அரங்கில் ஒரு நாடு கைத்தொழில் துறையில் கண்டுள்ள முன்னேற்றத்தின் தரம் அதன் பொருளாதார மற்றும் இராணுவ பலத்தை தீர்மானித்த ஒரு பிரதான சக்தியாக அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த வகையில் தற்போது காணப்படுகின்ற G8 எனப்படும் பிரதான கைத்தொழில் மயமாகிய அபிவிருத்தியடைந்த செல்வந்த நாடுகளது கூட்டானது உலகின் சக்தி மிக்க கூட்டமைப்பாக திகழ்கின்றது. இவ் அமைப்பில் ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி, கனடா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இலங்கை இத்தகைய உயர் கைத்தொழில்மய நாடு என்ற நிலையை அடைவது ஒரு புறமிருக்க அண்மைக்காலமாக பேசப்பட்டு வருகின்ற NICS என்னும் "புதிதாக கைத்தொழில் மய நாடுகள்" Newly Industrialized Countries என்ற வகுதியின் உள்ளும் இது வரை நுழையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கைத்தொழில்மய நாடு என்ற அந்தஸ்தை பெறுவதற்கான அடிப்படை நிபந்தனைகள்.

1. வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம் உயர்வாக காணப்படல் வேண்டும். (8%-10%)
2. தலா வருமானம் 2000 ஐக்கிய அமெரிக்க டொலருக்கும் கூடுதலாக இருத்தல் வேண்டும்.
3. கைத்தொழில் துறையில் துரித வளர்ச்சி காணப்படுதல் அத்தோடு தயாரிப்பு கைத்தொழில் உற்பத்தியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20% கூடுதலாக இருத்தல் வேண்டும்.
4. மொத்த ஏற்றுமதிகளில் கைத்தொழில் துறையின் பங்கு உயர்வாக உள்ளதோடு அதில் தயாரிப்பு கைத்தொழில் உற்பத்தி 20% க்கும் கூடுதலாய் இருத்தல்.
5. சேமிப்பு முதலீட்டு விகிதங்கள் 30% க்கும் மேலாக இருத்தல்.

இவற்றோடு வெளிநாட்டு முதலீடு ஒரு முக்கிய இடத்தை வகிப்பதும் திறந்த பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்படுவதும் இத்தகைய நாடுகளது பண்புகளாக உள்ளது.

Eg :- 1. கிழக்காசியா :- தாய்வான், சிங்கப்பூர், தென்கொரியா, மலேசியா, இந்தோனேசியா (இந்நாடுகள் "ஆசியாவின் வேங்கைகள்" Asian Tigers எனவும் அழைக்கப்படுகின்றன)

2. மேற்காசியா :- இஸ்ரேல்
3. மத்திய அமெரிக்கா :- மெக்சிக்கோ
4. ஐரோப்பா :- கிறீஸ், போர்த்துக்கல், ஸ்பெயின்

## இலங்கை NIC அந்தஸ்தை அடைவதில் எதிர் நோக்கும் சவால்கள்

1. பொருளாதார வளர்ச்சி வீதம் :-இலங்கையில் சராசரிப் பொருளாதார வளர்ச்சி NIC அந்தஸ்தை அடையும் வகையில் போதுமான வட்டத்தை இதுவரையில் எட்டவில்லை. இதனைப் பின்வரும் அட்டவணை ஊடாக விளக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | 1990 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொருளாதாரவளர்ச்சி வீதம் | 6.4 | 4.0 | 6.0 | 5.4 | 6.0 | 7.4 | 6.8 | 6.0 |

2. தலா வருமானம் :- NIC அந்தஸ்துக்கு தேவையான மட்டத்தை அடையவில்லை. பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

| ஆண்டு | 1990 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|
| தலா வருமானம் US டொலர் | 473 | 870 | 948 | 1030 | 1197 | 1355 |

3. கைத்தொழில் துறையில் தயாரிப்புத் துறை உற்பத்தி. இது இன்னும் எட்டப்படவில்லை. பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

| ஆண்டு | 1990 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கைத்தொழில்துறை | 19 | 26.6 | 26.5 | 26.4 | 27.0 | 27.0 | 28.5 | 28.4 |
| தயாரிப்புத்தொழில் | 9.4 | 16.6 | 16.4 | 16.3 | 16.3 | 16.0 | 17.7 | 17.5 |

4. சேமிப்பு முதலீட்டு விகிதங்கள் :-

இவை இன்னும் 30% எட்டவில்லை. மாறாக தளம்பல் அடைந்து காணப்படுகின்றன. பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

| ஆண்டு | 1990 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| சேமிப்பு வீதம் (மொ.உ.உ) | 14.3 | 14.4 | 15.9 | 15.9 | 17.3 | 17.1 | 23.3 | 18.2 |
| முதலீட்டு விகிதம் (மொ.உ.உ) | 22.2 | 21.2 | 22.1 | 25.0 | 26.5 | 28.7 | 28.2 | 27.5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொருளாதார வளர்ச்சியை 8% க்கு மேல் பேண வேண்டுமாயின் முதலீட்டை 30%க்கும் மேலாக உயர்த்த வேண்டும். முதலீட்டை உயர்த்த வேண்டுமாயின்

  1. உள்நாட்டு சேமிப்பு மட்டத்தை உயர்த்துதல்.
  2. வெளிநாட்டு முதலீட்டு உதவிகளை அதிகளவில் பெறல்

- நாட்டில் அரசியல் இஸ்திரத் தன்மையும் , பாதுகாப்பான முதலீட்டுச் சூழலும் காணப்பட வேண்டும்.

- கீழ்க் கட்டமைப்பு வசதிகளை நவீனமயமானதாக விஸ்தரிக்க வேண்டும்.

- ஊழியப்படையின் தரத்தை மேம்படுத்துதல்.


உசாத்துணை நூல்கள் :-

1. The World Book
2. இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கை 2008


**இலத்திரனியல் வணிகம் (e.business) என்றால் என்ன?**

**ஒரு அமைப்பு வினைத்திறன் மற்றும் பயனுறுதியுடன் இலக்கை அடைவதற்கு இலத்திரனியல் (இயைத்தின் அடிப்படையில்) மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் இலத்திரனியல் வணிகம் ஆகும்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்திரனியல் காசு கொடுப்பனவு முறை
# [ E-CASH ]

ப.ஜெயந்துஷா
Com[A]

இலத்திரனியல் காசுக் கொடுப்பனவு முறை உலக சந்தையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நிமிடத்திலும் ஒவ்வொரு நாளும் பல மில்லியன் கொடுப்பனவுகள் உலகெங்கிலும் நிகழ்கின்றன. இவ் உலகளாவிய கொடுப்பனவுச் சந்தையிலுள்ள

1. காசுக் கொடுப்பனவு
2. கடன் அட்டை உட்பட ஏனைய கொடுப்பனவு முறைகளும் உள்ளன. காசுக் கொடுப்பனவு முறை உலகளாவிய கொடுப்பனவு சந்தையில் பெரும் பங்கினை வகிக்கின்றது. ஏனெனில் இது
   i. உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
   ii. உடனடியாகவும் பதிவற்ற முறையிலும் பெறுமானத்தை இடம் மாற்றுவதுமாக உள்ளள ஒரே யொரு சாதனமாகும்.

## இலத்திரனியல் காசு

நுகர்வோர் சார்பான விடயங்கள் தொடர்பாக உலக தொழில் நுட்பம் வளர்ச்சியடையும் போது காசுக் கொடுப்பனவு முறையினையும் மாற்ற வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இலத்திரனியல் டிஜிற்றல் தொழில் நுட்பசாதனங்களின் உதவியுடன் கொடுப்பனவுகளை பரிமாற்ற உதவும் பிளாஸ்ரிக் அட்டைகள் இலத்திரனியல் பணமாகக் கருதப்படுகின்றது. தற்கால தகவல் தொழில்நுட்பம், டிஜிற்றல் தொழில்நுட்பம் என்பவற்றின் முன்னேற்றத்தால் உள்நாட்டு, வெளிநாட்டு கொடுக்கல் வாங்கலுக்கு பயன்படுத்தப்படுகின்ற கடன் அட்டைகள், வரவு அட்டைகள் மற்றும் மாஸ்டர் அட்டைகள் போன்ற காகிதமற்ற காசுகள் இலத்திரனியல் காசுக் கொடுப்பனவினால் மாற்றீடு செய்யப் பட்டுள்ளது.

பல நாடுகளில் நுகர்வோர் தங்கள் வசதிக்காக அட்டை அடிப்படையிலமைந்த காசுப் பதிவேடுகளைப் பின்பற்றுகின்றனர். கடன் அட்டைகள், காசு அட்டைகள், தொலைபேசி அட்டைகள் என்பன கொண்டு சுமப்பதற்கு இலகுவாகவும் பெருந் தொகையான சில்லறைக் காசுத் தொகைகளுக்கான தேவையினை நீக்குவதாகவும் கொடுக்கல் வாங்கல்களை வேகமாக்குவதற்காகவும் உள்ளது. இவ் இலத்திரனியல் காசானது பதிலீட்டுப் பணவகையை ஒத்ததாக காணப்படுகிறது.

இலத்திரனியல் காசு முறை செயற்படத் தொடங்கியதும் பின்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்கள் இலத்திரனியல் காசுக் கொடுப்பனவினால் பயன்படுத்துவோருக்கு கிடைக்கத்தக்கவையாக இருக்கும்.

1. உலக ரீதியில் ஏற்றுக்கொள்ளப் படுதல்
2. முன்சுமை ஏற்றிக் கொள்ளத்தக்க வசதி
3. பதிவு அற்ற ஏட்பு (ஏற்பு)
4. உடனடியான பண இடமாற்றம்
5. நபர் - நபருக்கான கொடுப்பனவு
6. பல நாணய முறைமை

**பின்வரும் மரபு ரீதியான காசினை முன்னேற்றும் அம்சங்கள் இலத்திரனியல் காசு கொடுப்பனவு முறையில் உள்ளடங்கியுள்ளது.**

1. தொலைபேசி மூலமே இலத்திரனியல் காசினை இடமாற்றுதல்
2. இலத்திரனியல் கூற்று / அறிக்கையினை பெறுவதற்கான வசதி
3. அதிகாரமளிக்கப்படாத அடைவுகளைத் தடுப்பதற்கு இலத்திரனியல் காசினை பூட்டி வைத்தலுக்கான திறன்.

**இலத்திரனியல் காசுக் கொடுப்பனவு முறையின் கீழ் பின்வரும் சாதனங்கள் ஒன்றாகத் தொழிற்படு கின்றன.**

1. வோல்ட் (பொக்கட் அளவான எலக்ரோனிக் பை)
2. மீதி வாசிப்பாளர் (திறப்பு வளைய அளவிலான அட்டை வாசிப்பாளர்.) வாசிக்கும் கருவி
3. தொலை பேசி (அட்டை வாசிப்பாளர் திரையுடன் கூடிய தொலைபேசி)
4. சில்லறை வியாபாரி கணனி மாற்றி (காசுவின் ஏற்பிக்கான அலகு) வாடிக்கையாளருக்கு ஏற்படும் நன்மைகள்

### ❖ வசதி

1. கொடுப்பனவுகளை விரைவாகவும் இலகுவாகவும் மேற்க்கொள்ளலாம்.
2. கடன் அட்டை போல் எவ்வித அங்கிகாரமோ / கையெழுத்தோ அவசியமில்லை.
3. அட்டைகள் ATM இலிருந்து தொலைபேசியில் மீள் நிரப்பப்படலாம்.

### ❖ நெகிழும் தன்மை

1. சிறிய மற்றும் பாரிய கொள்வனவிற்கு
2. கொள்வனவுகள் நபரிடமிருந்து இன்னொரு நபரிற்கு தொலைபேசி மூலம் தூரத்தில் இருந்து மேற்க்கொள்ளப் படலாம்.

### ❖ கட்டுப்பாடு

1. எந்தக் கொள்வனவுத் தொகைக்கும் சரியான கொடுப்பனவு
2. மீதிகள் பரிசோதிக்கப்படலாம்
3. கிடைக்கத்தக்கதாகவிருக்கும் கொடுக்கல் வாங்கலின் பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **பாதுகாப்பு**

1. "பூட்டி வைத்தல்" தொழிற்பாடு பணத்தை பாதுகாப்புடன் கொடுக்கல் வாங்கல்களையும் இரகசியமாக வைத்திருக்கவும் உதவுகின்றது
2. "பூட்டு குறியீட்டிலக்கம்" மாற்றப்படலாம்
4. முன்னைய கொடுக்கல் வாங்கல்களின் பதிவேடுகளை பரிசோதிக்க
5. ஒரே அட்டையில் பல்வேறு நாணயங்களைக் கொண்டு செல்ல
6. இலத்திரனியல் காசினை உலகெங்கிலும் அனுப்பலாம்

**சில்லறை வியாபாரிகளுக்கு ஏற்படும் நன்மை**

1. விற்பனைப் புள்ளியில் கூடிய விற்பனைத் திறன்
2. குறைந்த ஆரம்பச் செலவுகள்
3. சந்தைப்படுத்தல் வசதி
4. மேலதிக பாதுகாப்பு

**இலத்திரனியல் காசினை வைத்திருப்பவர்களுக்கு பின்வரும் வாய்ப்புக்கள் கிடைக்கும்**

1. இலத்திரனியல் காசினை ஒரு துப்பரவானதும், வசதியானதும் பிளாஸ்ரிக் அட்டையில் கொண்டு செல்ல
2. வீட்டில் இருந்தே வசதியாக இலத்திரனியல் காசினை உடனடியாகப் பெற்றுக்கொள்ள
3. மீதிகளை கணக்குப் பார்க்காமல் சரியான கொடுப்பனவுகளை உடனடியாக செலுத்த

**இலத்திரனியல் காசானது புதிய தொரு உலகளாவிய கொடுப்பனவு முறைக்கான உந்துதல்களாக அளிக்கின்றது இக் கொடுப்பனவு முறைகள்**

1. இலத்திரனியல் காசு அட்டைகள் வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் உடனடியாக கிடைக்கத்தக்கவையாகும்.
2. இலத்திரனியல் காசு வைத்திருப்போர் எந்த நேரத்திலும் எந்த இடத்திலுமிருந்து ATM இல் / வீட்டிலிருந்து தமது காசினை அனுப்பவும் பெறவும் முடியும்
3. தாள் காசு குற்றியும் தற்போது செய்வது போல் இலத்திரனியல் காசும் வாடிக்கையாளர், வங்கி, வியாபாரிகள் போன்றோரிடம் சாதாரணமாகப் புழங்கும்

உசாத்துணை நூல்

வணிக சஞ்சிகை – வெண்சங்கு 2005

வணிகக் கல்வி – B.S. பசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாக்கல்

## (GLOBALIZATION)

நி.கஜந்தி
2010 com A

### அறிமுகம்

இன்றைய நவீன உலகில் உலக நாடுகளிடையே உலக மயமாக்கல் அல்லது பூகோளமயமாதல் என்பது முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக்கருவாக விளங்குகின்றது. சென்ற முப்பதாண்டுகளுக்கு மேலாக பொருளாதார மற்றும் அரசியல், சமூக, கலாச்சார, தொடர்பில் தொழில்நுட்ப ரீதியாக உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அமைப்பு ரீதியான மாற்றங்கள் உலகமயமாதல் எனும் எண்ணக் கருவினூடாக அவதானிக்கப் படுகின்றது. அண்மைக் காலத்தில் பல வளர்ச்சியடைந்த நாடுகளும் வளர்முக நாடுகளும் வெளிநாட்டுத் தொடர்புகட்குப் பொருளா தாரத்தைத் திறந்து விட்டும், தனியார் மயமாக்கம் போன்ற கொள்கைகளை ஊக்குவித்தும் உலக மயமாக்கத்தில் ஈடுபடுகின்றன.

இவ்வகையில் உலகமயமாக் கலைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காட்ட முடியும்.

- பொருளாதார உலகமயமாதல்
- சமூக, கலாச்சார உலகமயமாதல்
- அரசியல் சார் உலகமயமாதல்
- தொடர்பாடல் உலகமயமாதல்
- தொழிநுட்ப உலகமயமாதல்

இங்கு "பொருளாதார உலகமய மாக்கல்" (Economics Globalization) முக்கியம் பெறுகின்றது.

### வரைவிலக்கணம்

"சர்வதேச நாடுகள் தமது நாடுகள் தமது தேசிய பொருளாதாரத்தினை உலக சந்தையில் விஸ்தரிக்கும் நோக்குடன் நாடுகளுக்கிடையே உற்பத்தி, வர்த்தகம், முதலீடு, திட்டமிடல், தொழிநுட்பப்பாய்ச்சல், மூலதனப்பாய்ச்சல், தொடர்பாடல் என்பன தொடர்பான தடைகளை அகற்றி அதிகளவு சுயாதீன தொடர்புகளையும் ஒருங் கிணைப்பையும் ஏற்படுத்தலே" பொருளாதார கோளமயமாதல் ஆகும். அதாவது தேசிய பொருளாதாரங்களை உலக சந்தைகளுடன் இணைக்கும் நடவடிக்கையால் உலக உற்பத்தி, உலக வர்த்தகம், உலக முதலீடு, உலகத் தொடர்பாடல் என்ற ரீதியில் உலகளாவிய பொருளாதார முறைமையொன்று உருவாகி வருதல் உலகமயமாக்கலாகும்.

### உலகமயமாக்கலுக்கான காரணங்கள் / காரணிகள்

- பொருளாதார மற்றும் அரசியல் கூட்டமைப்புக்களின் தோற்றமும், வளர்ச்சி.
  உதாரணம்:- EEC, ASEAN, MAFTA
- பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் or விரைவான வளர்ச்சி.
- பொருளாதார சிந்தனையிலேற்பட்ட மாற்றம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் குறிப்பாக சமவுடமை/ கலப்பு பொருளாதார பின்னடைவுகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயாதீன சந்தைப் பொருளாதார சிந்தனை வலுப் பெற்றது.

- ❖ அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளின் உற்பத்தி திறன் அதிகரித்தமை.
- ❖ போட்டிச் சந்தையின் நன்மைகள்
- ❖ ஐரோப்பிய பொருளாதார சமூகம் உருவாக்கப்பட்டமையும் யூரோ (EURO நாணயம் தோற்றுவிக்கப் பட்டமையும், இதனால் நாடுகள் ஒன்றிணைக்கப்பட்டன.
- ❖ நவீன தொழிநுட்பக் கண்டுபிடிப்பு
- ❖ சர்வதேச நிறுவனங்களின் (IBRD, IMF) மேலாதிக்கவாதக் கொள்கை.

## உலகமயமாக்கலுக்கு நாடுகள் மேற்கொள்ள வேண்டிய பொருளாதார செயற்பாடுகள்.

- ❖ தாராளமயமாக்கப்பட்ட கொள்கை யின்மை பின்பற்ற வேண்டும்.
- ❖ தனியார் மயமாக்கலுக்கு ஆவன செய்து பொருளாதார சீர்திருத்த மொன்றை உருவாக்கி நடைமுறைப் படுத்தல்.
- ❖ பொருளாதார முயற்சிகளில் அரச தலையீட்டை நீக்கி/ குறைத்து சந்தை மயமாக்கப்பட்ட சந்தையை சர்வதேச ரீதியாக ஒன்றிணைத்தல்.
- ❖ வரிகள், தீர்வைகள் என்பவற்றைக் குறைத்தலும் விலைக் கட்டுப்பாடு களை அகற்றுதலும்.
- ❖ ஊழிய அசைவு, அந்நிய செலாவணி, தொழிநுட்ப பரிமாற்றம், நிதிச்சந்தை, வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்குதல்

**Note:-** உலகமயமாக்கலை சர்வதேச நாணயநிதியம் (IMF) உலக வங்கி (IBRD/ WB) உலக வர்த்தக நிறுவனம் (WTO) போன்ற சர்வதேச நிறவனங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன. இதன் பொருட்டு “கட்டமைப்பு சார் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்களையும்” (S.A.P) நாடுகளில் மேற்கொள்கின்றன.

## உலகமயமாக்கலின் நன்மைகள் / முக்கியத்துவம். (ஆதரவான வாதங்கள்)

- ❖ நவீன தொழிநுட்பங்களை அதிகளவில் பெறமுடியும்
- ❖ வெளிநாட்டு வர்த்தகம் திறந்து விடப்படுவதால் நுகர்வோர் பரந்தடிப்படையினை பல்வகைப் பொருட்கள் சேவைகளைப் பெறமுடியும்.
- ❖ சர்வதேச போட்டித்தன்மையினால் உயர்தரமிக்க பொருள் உற்பத்தி இடம் பெறும்.
- ❖ நாடுகளின் முதலீடுகள் அதிகரித்து உற்பத்தி அதிகரிப்பதால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.
- ❖ ஏனைய நாடுகளிடமிருந்து மூலப் பொருட்கள் ஊழியம் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள முடிவதால் உற்பத்தி செலவுகளைக் குறைக்க முடிவதுடன் மலிவான விலையில் தரமானபொருட்கள் சேவை களையும் நுகரமுடியும்.
- ❖ இதனால் மக்களின் மெய்வருமானம், வாழ்க்கைத்தரம் என்பன உயர் வடையும்
- ❖ நாடுகட்கிடையில் ஒருங்கிணைப்பு ஏற்படுவதால் சகல நாடுகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான வளர்ச்சி அபிவிருத்தி என்பன ஏற்படும்.

- ❖ பொருளாதாரம் திறந்து விடப்படுவதால் சுதந்திரமாக ஏனைய நாடுகளில் குடியேற முடிவதுடன் புதிய கருத்துக்கள், புதிய கலாச்சாரங்கள், புதிய தொழிநுட்பம், கல்வியறிவு என்பவற்றையறிய முடியும்.
- ❖ உள்நாட்டில் தொழில்வாய்ப்பு அதிகரிப்பதால் வேலையின்மை குறைவடையும்.
- ❖ நாடுகட்கிடையில் குறைந்த வட்டியுடனான கடன்கள், வட்டியல்லாக் கடன்கள் (சலுகை) கிடைப்பதால் வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிக்கும்.
- ❖ சீரான உலகச் சந்தை நடத்தையை உருவாக்கல்.

**உலகமயமாக்கலின் தீமைகள்/ பிரதிகூலங்கள் (எதிரான வாதங்கள்)**

- ❖ உலகமயமாக்கலின் நன்மைகளைப் பங்கீடு செய்வதில் சமமின்மை ஏற்படும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை விட அபிவிருத்தி அடைந்த நாடுகள் அதிக நன்மை பெறும்.
- ❖ ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் தடைகள், குறுக்கீடுகள் ஏனைய நாடுகளின் பொருளாதாரங்களில் பாதிப்பினை ஏற்படுத்தும்.
- ❖ பல்தேசியக் கம்பனிகளின் மேலாதிக்க வாதத்திற்கு உட்பட வேண்டியிருத்தல்.
- ❖ நாடுகளின் இறைமை பாதிக்கப் படுவதன் காரணமாக உள்நாட்டு அரசின் பேரினப் பொருளியல் முகாமைத்துவம் சீர்குலைகிறது.
- ❖ வெளிநாட்டுப் போட்டி காரணமாக தொழில்வாய்ப்புக்கள் இழக்கப் படுவதுடன் கைத்தொழில் விரிவாக்கம் ஏற்படுவதால் உலகம் முழுவதும் சூழல் மாசடைதலும் ஏற்படும்.
- ❖ நாடுகளில் சர்வதேச எல்லைகள் விரிவுபடுத்தப்படுகின்றமையால் பயங்கரவாதம், போதைப் பொருட் கடத்தல், நோய்கள் பரவுதல், கலாச்சார பன்முகத்தன்மை வீழ்ச்சியடைதல் என்பன ஏற்படும்.
- ❖ நாடுகளுக்கு பொருத்தமற்ற தொழில்நுட்பங்களும் முதற் சொத்துக்களும் இறக்குமதி செய்யப்படல்.

**Note**:- உலகமயமாக்கல் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை அதிகளவில் பாதிக்கின்றன.

**உலகமயமாக்கலினால் அபிவிருத்தி அடைந்த நாடுகள் பெறும் நன்மைகள்.**

- ❖ அதிகரித்த மூலதனத்தை/ திரவத்தன்மையை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மூதலீடு செய்ய வாய்ப்பு ஏற்படும்.
- ❖ தமது நாடுகளின் மிகை உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு கிடைக்கும்.
- ❖ குறைந்த கூலியில் ஊழியத்தைப் பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ மீளப்பெறமுடியாத வளங்களை வளர்முக நாடுகளிலிருந்து சுரண்டுவதுடன் சூழலை மாசடைய செய்யும் உற்பத்திகளை அப்பொருளாதாரங்களில் மேற் கொள்ள முடியும்.
- ❖ சேமிப்பு/ முதலீட்டிற்கான உயர்ந்த வட்டியினை பெறமுடியும்.
- ❖ பாரிய உலகச்சந்தை வாய்ப்பு மூலம் அதிக உற்பத்திகளையும் வருமானங்களையும் பெறலாம்.

## உலகமயமாக்கலினால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெறுகின்ற நன்மைகள்.

- ❖ பிற நாட்டு முதலீடுகளைப் பெறமுடிகின்றது இதனால் மூலதனப் பற்றாக்குறை தவிர்க்கப்படும்.
- ❖ நாடுகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.
- ❖ தமது வளர்ச்சிக்கு ஏற்றுமதிகளில் தங்கியிருக்கின்ற போது அதிக நன்மையை பெறுகின்றது.
- ❖ வளர்ச்சியடைந்த, வளர்முக நாடுகளுக்கிடையிலான ஒருங் கிணைப்புக்கள் மூலம் வெளிநாட்டுக் கடன்கள் வெளிநாட்டு நன்கொடை என்பவற்றை பெறமுடியும்.
- ❖ பல்தேசிய கம்பனிகளின் வருகையால் தொழில்நுட்ப முகாமைத்துவ பரிமாற்றங்களாலும், நவீன தொழில்நுட்ப முகாமைத்துவ பயன்பாடுகளாலும் புதுப் பொருளாக்கம் (நவோற்பாதனம்) அதிகரிக்கும்.
- ❖ சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைய ஏற்றுமதிக் கைத்தொழில் வளர்ச்சியடைவதுடன் குறைந்த விலையில் தரமான பொருட்களை பெறமுடியும்.
- ❖ வளப்பயன்பாடு, வேலைவாய்ப்புகள் உற்பத்தி என்பன அதிகரிப்பதால் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி, வாழ்க்கைத்தர அதிகரிப்பு என்பன ஏற்படும்.

## உலகமயமாக்கலினால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

- ❖ பல்தேசிய கம்பனிகளின் ஆதிக்கத்தினால் இந்நாடுகளின் அபிவிருத்தி பாதிக்கப்படும்.
- ❖ உள்நாட்டு வளரும் பிள்ளைப் பருவக் கைத்தொழில் பாதிக்கப்படும்.
- ❖ விரைவான உலகமயமாக்கலுக்குள் சேர்ந்து இயங்குவதும் அதிலிருந்து விலகிக் கொள்வதும் கடினமானதாக காணப்படும்.
- ❖ சர்வதேச நிதிச்சந்தைகளின் நிச்சயமற்ற தன்மையினால் நாடுகளின் ஆபத்தின் தன்மை அதிகரிக்கும்.
- ❖ தனிப்பட்ட தேசிய அரசுகளின் வறுமை, வருமானச் சமமின்மை என்பன அதிகரிக்கும்.
- ❖ பொருளாதாரங்கள் ஒன்றிலொன்று தங்கியிருப்பதனால் ஏற்படும் பலவீனங்கள்.
- ❖ கிடைப்பனவுக்காக அருமையான, அழிவடைந்து செல்லும் மூலவளங் களும் இழக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேலை வாய்ப்புக்களில் இழக்கப் பட்டமையால் வேலையின்மை அதிகரிப்பதுடன், ஊழியச் சுரண்டலும் அதிகரிக்கும்.
- பணவீக்கம் அதிகரித்து பொருளாதாரம் உறுதியற்ற நிலையை அடையும்.
- வளர்முக நாடுகளில் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களை பெருக்கி சென்மதி நிலுவைப் பிரச்சனை ஏற்படும் (நீடித்த பற்றாக்குறை)

**உலகமயமாக்கத்தினால் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்.**

- தாராள மயமாக்கல் கொள்கையும் தனியார் மயமாக்கல் கொள்கையும் பிறக்கலிடப்பட்ட நாணய மாற்றுவீத முறையும் பின்பற்றப் படுகின்றமை.
- பல்தேசிய கம்பனிகளின் முதலீட்டு வருகைகள் ஊக்குவிக்கபடல்
- வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு பரிமாற்றம், வெளிநாட்டு முதலீடு, தொழில்நுட்பம் போன்றவற்றில் ஒருங்கிணைப்புக்களை உருவாக்கல்.
- சந்தைப்பொருளாதாரக் கொள்கையை நோக்கி நகர்வதுடன் சந்தை விலையை ஊக்குவித்தல்
- அரச தனியுரிமையை ஒழித்து போட்டித்தன்மை உருவாக்கியமை
- வளர்ச்சியடைந்த நாடுகளுடானான தொடர்புகளும் வெளிநாட்டு உதவியும் அதிகரித்தமை.


**உலக மயமாக்கல் நன்மைகளை அதிகரிப்பதற்கு வளர்முக நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்.**

- அரசாங்கம் வினைத்திறமையான இறைக்கொள்கையை நடைமுறைப் படுத்தல்.
- நிதி தன்மையினை அதிகரித்தலும் நிர்வாக ஒழுங்கீனங்களை நீக்குதலும்
- உள்நாட்டு இளம்பருவத் தொழில்களை பாதுகாப்பதற்குப் பல்வேறு பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளல்.
- அரசாங்கம் சர்வதேச நிதி நிறுவனங்களில் தங்கியிருக்கும் நிலையை நீக்குதல்.

உசாத்துணை நூல்

பொருளியல் நடைமுறைகளும் முக்கிய குறிப்புகளும்.

எழுத்தாளர்:- M.C. Suthakaran






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப்படுத்தல் போட்டியின்போது பின்பற்ற வேண்டிய "மைக்கல் போட்டரின்" பொதுவான தந்திரோபாயங்கள்

இ.சௌம்யா
2010com "B"

இன்றைய வர்த்தக உலகில் ஒவ்வொரு துறையிலும் போட்டி என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி வருகின்றது. எனவே எந்தவொரு நிறுவனமும் தன்னை சந்தையில் தக்கவைப்பதற்கு பலதரப்பட்ட தந்திரோபாயங்களை கைக்கொண்டு தன்னைப்பலப்படுத்த வேண்டியுள்ளதுடன் போட்டி நிறுவனங்களை மிகவும் தந்திரோபாயமாக தாக்கவேண்டியுள்ளது. இதற்குப் பலதரப்பட்ட அறிஞர்கள் பலதரப்பட்ட தந்திரோபாயங்களை அறிமுகப்படுத்தியிருந்தாலும் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைவது "மைக்கல் போட்டர்" அறிமுகப்படுத்திய பொதுவான தந்திரோபாயங்களாகும்.

இவரது தந்திரோபாயமானது முழுச்செலவுத்தலைமைத்துவம் (Overall cost leadership), வேறுபடுத்தல், (Differentiation), மற்றும் குவித்தல் (Focus) ஆகிய மூன்று தந்திரோபாயங்களை உள்ளடக்குகின்றது. அத்துடன் இத்தந்திரோபாயங்களைக் கையாள்வோர் மிகவும் நுணுக்கமான முறையில் சரியான விதத்தில் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்த தவறின் நிறுவனமானது நடுத்தெருவிற்கு வந்துவிடும் என்பதில் ஐயமில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தந்திரோபாய அணுகுமுறைகளைப்பின்பற்றும்போது நிறுவனமானது பின்வரும் 5 முக்கியமான காரணிகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

1. வழங்குனரின் (Supplier) பேரம்பேசும் சக்தி
2. வாடிக்கையாளரின் பேரம்பேசும் சக்தி
3. புதிய நிறுவனங்களின் வருகையால் ஏற்படும் அச்சுறுத்தல்கள்.
4. பிரதியீட்டுப் பொருட்களால்/சேவைகளால் ஏற்படும் அச்சுறுத்தல்கள்.
5. தற்போதுள்ள போட்டியாளர்களுக்கிடையிலான போட்டி.

மேற்குறிப்பிட்டவற்றை ஆராய்வதன் மூலம் எமது தொழிலின்/சந்தையின் போட்டித்தன்மையையும்,போட்டியின் செறிவையும் அறிந்துகொள்ளலாம். அதன்பின் மூன்று தந்திரோபாயங்களை உரிய முறையில் பயன்படுத்தலாம்.

## 1. முழுமையான செலவுத் தலைமைத்துவம்

இத்தந்திரோபாயத்தின் படி,

நிறுவனமானது அதிகளவில் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் உற்பத்தி, விநியோகச்செலவுகளை குறைத்து அளவுத்திட்ட சிக்கனத்தை அடைவதில் கவனம் செலுத்துகிறது. இதன் காரணமாக பொருட்களுக்கு தனது போட்டியாளர்களை விடக் குறைந்த விலைகளை நிர்ணயிக்கக்கூடிய ஆற்றலை பெறுகின்றது. இச்செலவுத்தலைமைத்துவமானது நிறுவனத்தின் இயந்திரப்பகுதி, கொள்வனவு, உற்பத்தி, விநியோகம் ஆகிய எல்லாப்பகுதிகளையும் மிக இறுக்கமாகவும், நிலையாகவும் கட்டுப்படுத்துவதன் மூலமே அடையப்படமுடியும். இதன் மூலம் பின்வரும் நன்மைகள் கிடைக்கின்றன,

1. நிறுவனம் போட்டியாளர்களை விஞ்சி செயற்படக்கூடிய ஆற்றல்.
2. குறைந்த விலையில் வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்து, புதிய நிறுவகங்கள் சந்தையில் உட்புகத்தடைகளை ஏற்படுத்தும்.
3. சந்தையில் காணப்படும் மேற்குறிப்பிட்ட ஐந்து தடைகளையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. குவித்தல்.

நிறுவனம் தனது முழுக்கவனத்தையும் முழுச்சந்தையிலும் செலுத்தாது குறிப்பிட்ட ஒரு பகுதியில் (Segment) மட்டும் குவிப்பதன் மூலம் (மாணவர் தமது கவனத்தை படிப்பில் மட்டும் செலுத்துவதுபோல்) இலகுவாக சந்தையில் நிலைத்திருக்க முடியும். இதன் மூலம் நிறுவனம் குறிப்பிட்ட சந்தைத்துண்டம் பற்றிய (Segment) பூரண அறிவைப்பெற்றுக்கொள்வதுடன் அங்கு பெற்ற நற்பெயர் மற்றும் விசுவாசமான வாடிக்கையாளர்கள் மூலம் புதிய நிறுவனங்களிற்கு தடைகளை ஏற்படுத்தும் ஆற்றலை பெறுகிறது. ஆனால் இது சிறியளவிலான நிறுவனங்களிற்கே பொருத்தமாக அமையும். ஏனெனில் சிறிய நிறுவனங்களே பெரும்பாலும் சிறு சந்தைத்துண்டங்களை இலக்காகக் கொள்வதுடன் அச்சிறுதுண்டங்களிலுள்ள வாடிக்கையாளரது சிறப்புத்தேவைகளை மிக விரைவாகத்தீர்க்கும் ஆற்றலை கொண்டுள்ளமையே ஆகும். இதன் மூலம் நிறுவனமானது,

1. குறிப்பிட்ட சந்தைத்துண்டத்தை விரிவாக விளங்கிக்கொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றது.
2. நிறுவனத்தின் நற்பெயரின் மூலம் புதிய நிறுவனங்களின் நுழைவுக்கு தடை ஏற்படுத்த முடியும்
3. தனது முயற்சிகளில் கவனம் செலுத்தக்கூடிய ஆற்றலை அதிகரிக்க முடியும்.

## 3. வேறுபடுத்தல்

நிறுவனம் கீழ் வரும் 4 துண்டங்களில் வாடிக்கையாளர் முக்கியமானதாகக் கருதும் துண்டங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் தனது பொருட்களை போட்டியாளர்களிடமிருந்து ஏதோவொரு விதத்தில் வேறுபடுத்தி வாடிக்கையாளரை கவர முடியும்.

1. Product - உற்பத்தி
2. Price - விலை
3. Place - இடம்
4. Promotion - மேம்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்து "போட்டி நன்மையை" அடைந்து கொள்ள முடியும்.இதன் மூலம் நிறுவனம் தரத்திலும், தொழிநுட்பத்திலும் மற்றும் சந்தைப்படுத்தல், சேவைத்துறையிலும் முன்னணியில் திகழ முடியும்.

உ+ம் :- கொக்கோலா தனது சுவையிலும், வடிவமைப்பிலும் மற்றையவற்றை விட வேறுபடுத்திக் காட்டுவதன் மூலம் இன்னமும் முன்னணியில் திகழ்கிறது. (coca cola Wikipedia).

இதன் மூலம் நிறுவனமானது,

1. சந்தையில் மற்றைய நிறுவனங்களிலிருந்து வேறுபட்டு நிற்கக்கூடிய தன்மையைப் பெறுகின்றது.
2. பாரிய போட்டி நன்மைகளை உருவாக்குகின்றது. (Competetive-advantage).
3. நெகிழக்கூடிய தன்மை.

அதாவது நிறுவனம் தனது செலவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பொருளுக்கான விலையைக் குறைக்கலாம், பின்னர் குறிப்பிட்ட சந்தைத்துண்டத்தை தெரிவுசெய்து அத்துடன் அங்குள்ள போட்டியாளர்களின் பொருட்களைவிட தமது பொருட்களை வேறுபடுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களை தமது நிறுவனத்தின் விசுவாசமிக்க வாடிக்கையாளர்களாக மாற்றலாம். இதன் மூலம் நிறுவனம் சந்தையில் முன்னணி வகிக்க முடியும்.

ஆகவே நிறுவனங்கள் இம் மூன்று தந்திரோபாயங்களையும் அளவோடு பயன்படுத்துமிடத்தே நிச்சயம் சந்தைப்போட்டியினை நிலையாக எதிர்கொள்ள முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

4 Ps எனப்படுவது தமிழில் 4 P(4Ps) க்கள் என அழைக்கப்படுவதே சரியானதாகும். மாறாக 4 P (pieces) துண்டங்கள் எனப்படுவது தவறானதாகும். துண்டங்கள் எனப்படுவது "Segments" எனப்படும் சந்தைப் பகுதிகளைக் குறிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சந்தைக் காரணிகள் | செலவுத் தலைமைத்துவம் | வேறுபடுத்தல் | குவித்தல் |
|---|---|---|---|
| புதிய நிறுவனங்களின் வருகையைத் தடை செய்தல் | விலையைக் குறைப்பதன் மூலம் வாடிக்கையாளரை விசுவாசமாக்கலாம். இதன் மூலம் புதிய நிறுவனங்களின் உட்புகுதலைத் தடுக்கலாம் | பொருட்களை வேறுபடுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் எளிதாக இனங்கண்டு கொள்வர் | குறித்த துண்டத்தில் கவனத்தை செலுத்தி அதில் வினைத்திறன் அடைவதன் மூலம் புதிய நிறுவனங்களின் ஊடுருவலைத்தடுக்கலாம் |
| வாடிக்கையாளரின் பேரம் பேசும் திறன் | குறைந்த விலையில் பொருட்களை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளரைக் கவரலாம் | பொருட்களை வேறுபடுத்துவதனூடு பிரதியீட்டுப் பொருட்களை இல்லாது செய்யலாம்.இதனால் வாடிக்கையானர் தாமாகவே பொருட்களை வாங்குவர் | குறித்த சந்தைத் துண்டத்தில் குறைந்தளவு பிரதியீடுகள் காணப்படுவதால் வாடிக்கையாளரின் பேரம் பேசும் சக்தி குறையும். |
| வழங்குனரின் பேரம் பேசும் சக்தி | அதிகளவு உற்பத்தியினூடு அதிகளவு உள்ளீடுகளை வாங்கும் போது உள்ளீட்டிற்கான விலை குறையும். | வேறுபடுத்துவதனூடு பிரதியீடுகளைக்குறைக்கலம் இதனால் இப்பொருள் தானாகவே பொருளின் உள்ளீட்டிற்கான தனித்துவத்தை பெறுவதனால் வழங்குனரின் பேரம் பேசும் சக்தி குறைவடைகின்றது | குறித்த சந்தையில் கவனம் செலுத்துவதனூடு பேரம் பேசும் சக்தியை இன்னும் குறைக்கலாம். |
| பிரதியீட்டுப் பொருட்களின் அச்சுறுத்தல் | குறைந்த விலையினூடு பிரதியீட்டுப் பொருட்களை தோற்கடிக்கலாம். | வேறுபடுத்துவதனூடு வாடிக்கையாளர்களை தன்வசப்படுத்துவதனூடு பிரதியீட்டுப் பொருட்களின் அச்சுறுத்தலைக் குறைக்கலாம். | குறித்த சந்தையில் கசனத்தைன் குவித்தலூடு பிரதியீட்டுப் பொருட்களின் தொகையைக் குறைக்கலாம். |
| தற்போதைய போட்டி | விலைக்குறைப்பினூடு வெல்ல முடியும் | பண்ட வகை(Brand) மீது விசுவாசத்தை அதிகரிப்பதனூடு தற்போதைய போட்டியில் வெல்ல முடியும். | குறிப்பிட்ட சந்தையில் பொருளை வேறுபடுத்துவதன் மூலம் இலகுவாக போட்டியாளரைச் சமாளிக்க முடியும். |

## உசாத்துணை நூல்கள்


- திருமதி சாந்தகுமாரி மகேந்திரன் அலோசியஸ்,தந்திரோபாய சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்-பகுதி 1-2003
- Richard Ms Wilson and colin Gillian, Strategic marketing management(New delhi:Viva Books Private ltd,1999)
- Porter generic strategies –Wikipedia, the free encyclopedia.htm





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர முகாமைத்துவம்

சி.கீர்த்திகா
2011com^B

முகாமைத்துவம் ஒரு முக்கியமான துறையாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. திட்டமிடுதல் (lanning), ஒழுங்கமைத்தல் (Organazing), வழிநடத்தல் (Leading), கட்டுப்படுத்தல் (Controlling) ஆகிய கருமங்களை உள்ளடக்கிய செயன்முறை முகாமைத்துவமாகும். முகாமைத்துவ செயற்பாடுகளை எங்கும், எதிலும் காணக்கூடியதாக உள்ளது. உலகில் பலராலும் பேசப்பட்ட விடயங்களில் ஒன்று நேரத்தை எப்படி முகாமை செய்து கொள்ளலாம் என்பது பற்றியதாகும். இதைத் தொடர்ந்து நேரமுகாமைத்துவம் பற்றிய எண்ணக்கரு முன்வைக்கப்பட்டது. குறிப்பிட்டு ஒதுக்கப்பட்ட நேரத்தில், நேரத்தை வீணடிக்காமல் எவ்வாறு கருமத்தைச் செய்து முடிக்கலாம் என்று நெறிப்படுத்துவது நேரமுகாமைத்துவமாகும். இது நேரத்தை திறமையாகப் பயன்படுத்தல் என்பதாகக் கொள்ளப்படும். எக்கரும மாயினும் குறித்து ஒதுக்கிய நேரத்தில், சிறப்பான முறையில் அக்கருமத்தைச் செய்து முடிப்பது பற்றியதே நேரமுகாமைத் துவமாகும். இதன் மூலம் நேரப் பயன்பாட்டின் உச்சஅளவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

நமது அன்றாட வாழ்வில் பல்வேறு கருமங்களை ஆற்றுகின்றோம். ஆற்றப்படும் கருமங்களில் நேரமுகாமைத்துவத்தை சரியான முறையில் பின்பற்றினால் வேலைகளை சிறப்பாக செய்து முடிக்கலாம்.

## நேரமுகாமைத்துவப் படிமுறைகள் பின்வருவனவாகும்.

### 1. திட்டமிடுதல் :-

நாளாந்த வாழ்வில் செய்யவேண்டிய வேலைகளுக்கான நேரத்தை முன்கூட்டியே தீர்மானித்தல் நேரத்திட்டமிடலாகும். திட்டமிடலின்போது செய்யவேண்டிய வேலைகளுக்கான குறித்த நேரமானது வேலையைச் செய்து முடிக்கத் தேவையான ஆகக்குறைந்த நேரமாக இருக்க வேண்டும்.

### 2. ஒழுங்கமைத்தல் :-

திட்டமிட்ட பல்வேறு வேலைகளில் முக்கியத்துவ வரிசைப்படி வேலையைப் பட்டியல்படுத்தலாம். அவற்றுக்கு அமைய நேரத்தை ஒதுக்குவதாக இருக்க வேண்டும்.

### 3. வழிநடத்தல் :-

திட்டமிட்ட ஒழுங்கமைத்த வேலைகளை உரிய நுட்பங்களைப் பயன்படுத்திக் கருமத்தை ஆற்றுவதைக் குறிக்கும். நேரம் எம்மை ஆளவிடாது நாம் நேரத்தை ஆட்சிசெய்வதாக இது இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கட்டுப்படுத்தல் :-

செய்து முடிக்கப்பட்ட கருமங்கள் திட்டமிட்ட நேர அடிப்படையில் அமைந் துள்ளதா எனப்பின்னூட்டல் செய்வதைக் குறிக்கும். இம்முறைகளுக்கமைய ஆற்றப்பட்ட வேலையில் நேரமுகாமைத்துவம் பின்பற்றப்பட்டிருக்கும் எனலாம்.

இன்றைய உலகில் ஜப்பானிய முகாமைத்துவம் (Japanes Management) மிகவும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. இது அமெரிக்க முகாமைத்துவத்தை விடச் சிறப்பானது என முகாமைத்துவ நிபுணர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். ஜப்பானிய முகாமைத்துவ அணுகு முறையில் "உரிய நேரத்தந்தி ரோபாயம்" (Just In Time) எனும் நுட்பம்முக்கிய இடம்பெறுகின்றது. நடைமுறை சந்தை நிலைமைகளை கருத்திற்கொண்டு ஜப்பானிய நிறுவனங்கள் விற்பனைக்குத் தேவையான அளவு பொருட்களையே உற்பத்தி செய்கிறது. உற்பத்திக்கு தேவையான அளவு மூலப்பொருட்களையே கொள்வனவு செய்கின்றது. இச்செயற்பாடு ஜப்பானிய அற்புதம் (Miracle Of Japanes) எனவும் வர்ணிக்கப்படுகின்றது. ஜப்பானிய நிறுவனங்களில் உற்பத்தி, கொள்வனவு, விற்பனை தொடர்பான தீர்மானங்கள் ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. ஊழியர்கள் அனைவரும் நேர முகாமைத்துவத்தில் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர்.

ஊழியர் தலைவர்கள், சாதனை யாளர்கள், வரலாற்று நாயகர்கள் யாவரும் நேரத்தை சரியான முறையில் முகாமை செய்தமையினாலேயே இவர்களது உயர்வு மேலோங்கக் காரணமாகின்றது, பணத்தை வழங்கவோ அல்லது இழக்கவோ தயாராக இருக்கும் இவர்கள் நேரத்தை இழக்க முன்வரமாட்டார்கள். "நேரம் உயிரானது" என்றே கருதுகின்றார்கள்.

எனவே நேரத்தை சரியான முறையில் முகாமை செய்தும், வளங்களை முகாமை செய்தும் ஒரு நிறுவனத்தின் வெற்றியை உயர்வுப் பாதையில் கொண்டுசெல்லலாம். இதன்காரணமாக விளங்கி எதிர்காலத்தில் சிறந்த ஓர் எதிர் காலத்தை கட்டியெழுப்பலாம் என்பது கண்கூடு.

உசாத்துணைநூல்கள்:-

சஞ்சிகைகள் 1999, 2000 ஆண்டு பத்திரிகைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலப்பொருள் விலையிடல்

செ.நிவேதிதா
Com"b"

களஞ்சியத்தில் இருந்து உற்பத்திக்கு வழங்கப்படுகின்ற மூலப்பொருளுக்கு விலையிட்டுக்கொள்வதை குறித்து நிற்பது மூலப்பொருள் விலையிடல் ஆகும்

## மூலப்பொருள் விலையிடுவதன் நோக்கம் / அவசியம்

1. உற்பத்திக்கு வழங்கப்படுகின்ற மூலப்பொருட்களுக்கான செலவுப்பெறுமதியை கண்டறிந்து அதை உற்பத்திக்கு சாட்டுதல் செய்தல்
2. உற்பத்திக்கு வழங்கப்படாமல் இருப்பாக உள்ள மூலப்பொருள்களின் இறுதியிருப்பு பெறுமதியை கண்டறிதல்
3. இறுதியிருப்பு பெறுமதியை கண்டறிந்து மூலப்பொருள் இருப்பு தொடர்பான மறுதரம் கட்டளையிடும் காலத்தை தீர்மானித்துக்கொள்ளல்

## மூலப்பொருளுக்கு விலையிடுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

1. மூலப்பொருளுக்கான விலைகள் விரைவாக மாற்றமடைதல்
2. மூலப்பொருட்கள் வெவ்வேறுபட்ட காலத்தில் வெவ்வேறுபட்ட விலைப்பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருத்தல்
3. மூலப்பொருட்களுக்கு பல்வேறுபட்ட முறையில் விலையிட்டுக்கொள்ளலாம் என்பதால் பின்பற்றும் விலையிடல் முறையை பொறுத்து மூலப்பொருள் செலவுப்பெறுமதி வேறுபட்டு இருப்பதால் நிறுவன இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்துதல்
4. களஞ்சியப்பேரேட்டில் இருப்பாக உள்ள மூலப்பொருளின் பெறுமதியில் இருந்து இருப்பு கொள்வனவு செய்யப்பட்ட காலங்களை கண்டறிவது கடினமாக காணப்படல்

## மூலப்பொருள் விலையிடல் முறைகள்

மூலப்பொருட்களுக்கு பல்வேறுபட்ட முறைகளின் மூலம் விலையிட்டு கொள்ளமுடியும் என்றாலும் இங்கு பின்வரும் மூன்று முறைகள் முக்கியமான முறைகளாக கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. முதல் வந்தது முதல் வெளியே முறை (LIFO)
2. கடைசியாக வந்தது முதல் வெளியே முறை (FIFO)

## முதல் வந்தது முதல் வெளியே முறையில் மூலப்பொருளுக்கு விலையிடல்

முதலில் கொள்வனவு செய்யப்பட்டு முதலில் களஞ்சியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ள பொருட்களை முதலில் உற்பத்திக்கென வெளியனுப்புகின்ற ஓர் விலையிடல் முறையை குறித்து நிற்பது இதுவாகும்

## முதல் வந்தது முதல் வெளியே முறையில் விலையிடலின் அனுகூலங்கள்

1. எளிமையானதும் சுலபமாக விளங்கிக்கொள்ளக்கூடிய முறையாக காணப்படல்
2. மற்றைய விலையிடல் முறைகளுடன் ஒப்பிடும் போது இம்முறையில் களஞ்சியப்பேரேட்டுக்கணக்கினை பராமரிப்பது மிகவும் இலகுவானதாக காணப்படல்
3. உண்மை விலையிடல் பொருட்கள் உற்பத்திக்கு வழங்குவதால் இலாபநட்டம் ஏற்படாது
4. பழுதடையக்கூடிய பொருட்களுக்கு இவ்விலையிடல் மிகவும் சிறந்ததாக காணப்படல்
5. கடைசியாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் இருப்பாக இருப்பதனால் இறுதி இருப்பின் பெறுமதி ஓரளவு நடைமுறை சந்தை விலையை ஒத்ததாக காணப்படல்

## முதல் வந்தது முதல் வெளியே முறையில் விலையிடலின் பிரதிகூலங்கள்

1. பழைய விலையிடல் பொருட்கள் உற்பத்திக்கு வழங்கப்படுவதால் பொருளின் உற்பத்திச்செலவு பெறுமதியானது நடைமுறைசந்தை விலையை ஒத்ததாக காணப்படமாட்டாது
2. ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறுபட்ட விலையில் பொருட்கள் உற்பத்திக்கு வழங்கப்படுவதால் பல்வேறுபட்ட வேலைகளுக்கான செலவுப்பெறுமதியை ஒப்பிட்டுப்பார்க்க முடியாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருளின் விலைமட்டானது தொடர்ச்சியாக குறைவடைந்து வருவதாக கருதிக்கொண்டால் பொருளின் உற்பத்திச்லெவு உயர்வாக காணப்படும்

## கடைசியாக வந்தது முதல் வெளியே முறையில் மூலப்பொருளுக்கு விலையிடல்

கடைசியாக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலைக்கு கொண்டு வரப்பட்டபொருட்கள் முதலில் உற்பத்திக்கென வெளியனுப்பும் ஓர் விலையிடல் முறையினை குறித்து நிற்பது இதுவாகும்.

## கடைசியாக வந்தது முதல் வெளியே முறையில் விலையிடலின் அனுகூலங்கள்

1. கடைசியாக கொள்வனவு செய்யப்பட்ட பொருளே உற்பத்திக்கு வெளியனுப்பப்படுவதனால் பொருளின் உற்பத்திச்செலவு பெறுமதி ஓரளவு நடைமுறை சந்தை விலையை ஒத்ததாக இருக்கும்.
2. நடைமுறைவிலையில் பொருட்கள் உற்பத்திக்கு வழங்குவதனால் இலாபநட்டம் ஏற்படாது.
3. பொருளின் விலைமட்டம் தொடர்ச்சியாக குறைவடைந்து வருவதாக காணப்பட்டால் பொருளின் உற்பத்திச்செலவு குறைவடைந்து காணப்படும்.

## கடைசியாக வந்தது முதல் வெளியே முறையில் விலையிடலின் பிரதிகூலங்கள்

1. முதலில் கொள்வனவுசெய்யப்பட்ட பொருளே இருப்பாக காணப்படுவதால் இறுதியிருப்பின் பெறுமதி நடைமுறைசந்தை விலையை ஒத்திராது.
2. பழுதடையக்கூடிய பொருளுக்கு இவ்விலையிடல் உகந்ததாக காணப்படாது
3. ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறுபட்ட விலையில் பொருட்கள் உற்பத்திக்கு வழங்குவதால் பல்வேறுபட்ட வேலைகளுக்கிடையிலான செலவுப்பெறுமதியை ஒப்பிட்டு பாரக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எளிய சராசரி முறையில் மூலப்பொருட்களுக்கு விலையிடல்

உற்பத்திக்கு வழங்கப்படவுள்ள மூலப்பொருட்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விலைகளின் மொத்த கூட்டுத்தொனகயை விலைகளின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் சராசரி விலையில் உற்பத்திக்கு வழங்கப்படும் மூலப்பொருளுக்கு விலையிடுவதனை குறிக்கும்.

$$\frac{\text{உற்பத்திக்கு வழங்கப்படவுள்ள}}{\text{மூலப்பொருளின் சராசரிவிலை}} = \frac{\text{விலைகளின் கூட்டுத்தொகை}}{\text{விலைகளின் எண்ணிக்கை}}$$

## எளிய சராசரி முறையில் விலையிடலின் அனுகூலங்கள்

1. இலகுவில் நடைமுறைப்படுத்தக்கூடிய விலையிடலாக காணப்படல்
2. விலைமட்டம் அதிகளவு தளம்பல் அடையாத போது ஓர் ஏற்றுக்கொள்ளக்கூடிய விலையிடலாக காணப்படல்

## எளிய சராசரி முறையில் விலையிடலின் பிரதிகூலங்கள்

1. உற்பத்திக்கு வழங்கப்படுகின்ற பொருளுக்கு அளிக்கப்படும் சராசரி விலையானது எந்தவொரு கொள்வனவுவிலையையும் ஒத்திராது
2. சராசரிவிலையானது உண்மை விலையிலிருந்து வேறுபட்டு காணப்படுவதனால் இலாபநட்டம் ஏற்படல்
3. களஞ்சிய பேரேட்டின் மூலம் கிடைக்கும் இறுதிஇருப்புத்தொகைக்கும் தனித்தனி அலகுரீதியாக கிடைக்கும் இறுதிஇருப்புத்தொகைக்கும் இடையே வேறுபாடு காணப்படல்.

## வினா

பின்வரும் தரவுகள் உற்பத்தி நிறுவனமொன்றிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்

2008-01-01 பெறுவனவு 1000 அலகுகள் அலகொன்றின் விலை 2.00

2008-01-10 பெறுவனவு 260 அலகுகள் அலகொன்றின் விலை 2.10

2008-01-20 வழங்கியது 700 அலகுகள்

2008-02-04 பெறுவனவு 400 அலகுகள் அலகொன்றின் விலை2.30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008-02-21 பெறுவனவு 300 அலகுகள் அலகொன்றின் விலை 2.50

2008-03-16 வழங்கியது 620 அலகுகள்

2008-04-12 வழங்கியது 240 அலகுகள்

2008-05-10 பெறுவனவு 500 அலகுகள் அலகொன்றின் விலை 2.20

2008-05-25 வழங்கியது 380 அலகுகள்

| பெறுவனவு | | | வழங்கியது | | | இருப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அலகு | அலகு விலை | பெறுமதி | அலகு | அலகு விலை | | அலகு | அலகு விலை | பெறுமதி |
| 1000 | 2 | 2000 | — | — | — | 1000 | 2 | 2000 |
| 260 | 2.10 | 546 | — | — | — | 1260 | — | 2546 |
| — | — | — | 700 | 2.05 | 1435 | 560 | — | 1111 |
| 400 | 2.30 | 920 | — | — | — | 960 | — | 2031 |
| 300 | 2.50 | 750 | — | — | — | 1260 | — | 2781 |
| — | — | — | 620 | 2.22 | 1380 | 640 | — | 1401 |
| — | — | — | 240 | 2.40 | 576 | 400 | — | 825 |
| 500 | 2.20 | 1100 | — | — | — | 900 | — | 1925 |
| — | — | — | 380 | 2.33 | 887 | 520 | — | 1038 |


உசாத்துணை

T.Lucey .Costing

C.I.M.A Study Tex

L.W.J.Owler and J.L Brown Cost Accounting





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயக்கொள்கை, அதன் நோக்கங்கள் மற்றும் நாணய கொள்கை கருவிகள்.

இ.கிருசாந்தி
2010com[B]

நாணயக் கொள்கை என்பது ஒரு அரசாங்கத்தினால் ஒரு நாணய ஆளுகை நிறுவனத்தினால் பணவீக்கம் அல்லது பணச்சுருக்கம் என்ற நோக்கங்களின் கீழ் செலாவணி வீதங்களைப் பேணிவருதல் தொழில் நிலை மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடையப்பெறுதல் ஆகிய விசேட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பொருளாதாரத்தின் பண நிரம்பலை நிர்வகிப்பதாகும். பொதுவாக குறிப்பிடுவதெனின் உறுதியான விலை மட்டங்களின் ஊடாக பொருளாதார வளர்ச்சியினை உருவாக்கி கொள்வதே நாணயக் கொள்கையின் நோக்கமாகும். ஏதேனும் ஒரு பொருளாதாரத்தினுள் நேரடியாக அல்லது மறைமுகமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஊடாக இறுதிக் கடன் கொடுப்போராகச் செயலாற்றுவதன் மூலம் அல்லது வெளிநாட்டு செலாவணிச் சந்தை விற்பனைகளின் ஊடாக அப்போதைக்குள்ள வட்டி வீதங்ளை மாற்றியமைத்து நாணய கொள்கையில் பொருளாதார தொழிற் பாடுகளில் தலையிட முடியுமாக உள்ளது.

பொருளாதாரத்தில் வட்டி வீதங்கள் நாணயக் கொள்கையுடன் எப்போதும் பிணைந்திருக்கும். வட்டி வீதம் என்பது பணத்தின் விலையாகும் வேறு விதத்தில் கூறுவதெனில் பணத்தைப் பெறுகின்ற போது செலுத்த வேண்டிய விலையை வட்டிவீதம் எனக்குறிப்பிடுகிறோம் பணநிரம்பலை அல்லது வட்டி வீதங்களை நிருவகிக்கும் பொருட்டு நாணயக்கொள்கையால் பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய கருவிகளின் ஊடாக பொருளாதார வளர்ச்சி பணவீக்கம் செலாவணி வீதம் மற்றும் தொழிலின்மை ஆகியவற்றில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தலாம். பணம் வெளியிடுகின்ற ஏகபோக உரிமை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் பொருளாதாரத்தில் பணமட்டத்தினை மாற்றுகின்ற ஆற்றலையும் அதனூடாகப் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றி கொள்ளும் பொருட்டு வட்டி வீதங்களில் தாக்கத்தை ஏற்படுத்த கூடிய ஆற்றலையும் மத்திய வங்கி கொண்டுள்ளது.

## நாணயக் கொள்கையின் நோக்கம்

பல்வேறு பொருளாதார நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்படுகின்ற நாணயக் கொள்கைக் கருவிகள் பல உள்ளன. வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கு தீர்மானித்தல் பொருளாதாரத்தின் நாணயத்தளத்தினைக் (Money Base) குறைத்தல் மற்றும் ஒதுக்கு வீதங்களை அதிகரித்தல் பண நிரம்பலில் சுருக்க ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதோடு வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு தீர்மானித்தல் பொருளாதாரத்தின் நாணயத்தளத்தினை அதிகரித்தல் மற்றும் நியதிச் சட்ட ஒதுக்குகளைக் குறைத்தல் ஆகியன பண நிரம்பல் விரிவடைவதில் தாக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும். நாணயக் கொள்கைக்கும் அரச நிதிக் கொள்கைக்கும் இடையில் எதிர்மாறான ஒரு தொடர்பு நிலவுகின்றது. கடந்த 150 வருட காலத்தில் நாணயக் கொள்கை முன்னேற்றம் அடைந்துள்ளதோடு குறிப்பாக கடந்த 50 வருட காலத்தினுள் இதில் பெரும் முன்னேற்றம் காணக்கூடிய தாயிருந்தது. சனத்தொகை வளர்ச்சிக்கும் பொருளாதார தொழிற்பாடுகளுக்கும் இடையே பண நிரம்பலின் பேணிவரப் படத்தக்க போதியளவிலான அதிகரிப்பு எவ்வளவாக இருத்தல் வேண்டும் என்ற தர்க்கத்தின் அடிப்படையில் நாணயக் கொள்கையின் படிப்படியான வளர்ச்சி நடைபெற்றது.

இன்றைய நாணயக்கொள்கை தயாரிக்கப்படுகின்ற போது பல்வேறுபட்ட காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டி நேரிடுகின்றது.

- ❖ குறுகிய வட்டி வீதம்
- ❖ நீண்டகால வட்டி வீதம்
- ❖ பொருளாதாரத்தினுள் நாணயசுற்றோட்டத்தின் வேகம்
- ❖ செலாவணி வீதம்
- ❖ பொருளாதாரத்தில் நிலவும் கடன் சுமையின் இயல்பு
- ❖ முறிகள் மற்றும் பங்குகள் (ஒன்றினைந்த உரிமையும் கடனும்)
- ❖ அரசுக்கு எதிரான தனியார் துறையின் செலவுகளும் சேமிப்பும்
- ❖ பாரிய அளவிலான சர்வதேச நிதிப் போக்குகள்
- ❖ நிதிப் பிறப்பாக்கக் கருவிகள்.

## மத்திய வங்கி முறையின் போக்குகள்

சுற்றோட்டத்தில் உள்ள நாணயம் மற்றும் மத்திய வங்கியில் வைப்பிலிடப் பட்டுள்ள வர்த்தக வங்கி ஒதுக்குகளுடன் கூடிய நாணய தளத்தினை விரிவாக்குதல் அல்லது மட்டுப்படுத்துவதன் ஊடாக மத்திய வங்கியினால் வட்டி வீதங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. மத்திய வங்கியினால் ஒரு நாட்டின் நாணயத் தளத்தில்

- ❖ திறந்த சந்தை தொழிற்பாடுகளின் ஊடாக
- ❖ அரசகடன் பிணையங்களை விற்பனை செய்தல் அல்லது கொள்வனவு செய்தல் ஊடாக
- ❖ ஒதுக்கு வீதங்களை மாற்றுவதன் ஊடாக தாக்கத்தை ஏற்படுத்த முடிகிறது.

மத்திய வங்கி பொருளாதாரத்தினுள் குறைந்த வட்டி வீத மட்டத்தினைப் பேணிவருவதற்கு விரும்புவதாயிருப்பின் அரச கடன் பிணையங்களை கொள்வனவு செய்வதன் ஊடாக பொருளாதாரத்தினுள் சுற்றோட்டத்திலுள்ள பணத்தொகையை அதிகரிக்க செய்யும் இன்றேல் வர்த்தக வங்கிகளுக்கு கடன் வழங்குவதன் மூலம் (பிணையங்களை பிணையாக வைத்து) பொருளாதாரத்தின் திரவத்தன்மை மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் அத்தகைய நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் போது வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்க அளவு கீழ் மட்டத்தில் இருப்பின் வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து பணத்தைக் கடனாக பெறுவதன் மூலம் உருவாகின்ற மேலதிகத் திரவத்தன்மை பொருளாதாரத்தினுள் கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறக்கூடிய ஆற்றலை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் நியதிச் சட்ட ஒதுக்கு வீதத்தை வீழ்ச்சியடையச் செய்வதன் மூலமும் இதற்கு சமமான பெறுபேற்றை எதிர்பார்க்கலாம் என்பதோடு இதன் காரணமாக விடுவிக்கப்படுகின்ற நிதியங்களை பயன்படுத்தி வங்கிகளால் தமது கடன் வழங்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கு அல்லது இலாபகரமான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருக்கும்.

## நாணய கொள்கை கருவிகள் நாணய தளம். (Money Base)

நாணயத் தளத்தின் அளவினை மாற்றுவதன் மூலம் நாணயக் கொள்கையை அமுலாக்க முடியுமாகவுள்ளது. இது நேரடியாக பொருளாதாரத்தினுள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத் தொகையை மாற்றமடையச் செய்கின்றது. மத்திய வங்கிக்கு நாணயத் தளத்தை மாற்றும் பொருட்டு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை பயன்படுத்த முடியுமாயுள்ளது. மத்திய வங்கி அரச பிணையங்களை விற்பனை செய்தல் மற்றும் கொள்வனவு செய்வதன் ஊடாக பொருளாதாரத்தில் உள்ள பணத்தை (திரவதன்மையை) உள்ளீர்த்துக் கொள்கின்றது அல்லது விரிவடைய செய்கின்றது இச்செயற்பாட்டின் ஊடாக அந்நாட்டின் நாணயதளம் மாற்றமடையும்.

## ஒதுக்கு தேவைகள் (Statutory Reserve Requirements)

ஒரு நாட்டின் நிதியாள்கை நிறுவனம் அந்நாட்டின் வர்த்தக வங்கிகளை ஒழுங்காக நிருவகிக்கின்றது மேற்படி வர்த்தக வங்கிகள் தமது சொத்துக்களின் மூலம் மத்திய வங்கியில் ஒதுக்க மொன்றாகப் பேணி வர வேண்டிய தொகையை மாற்றுவதன் ஊடாக நாணயக் கொள்கையை அமுலாக்கலாம். ஒதுக்குத் தேவையாக வர்த்தக ஒதுக்கமாகப் பேணி வரவேண்டிய தொகை சிறியதொரு தொகையாக இருப்பின் எஞ்சிய சொத்துக்களை திரவத்தன்மை குறைந்த சொத்துக்களில் (Illiquid Assets) முதலீடு செய்யலாம். இவ்விதம் கடன் வழங்கக் கூடிய நிதியத் தொகை (Loanable Funds) வளர்ச்சியடைதல் பணநிரம்பலின் மாற்ற மொன்றாக செயற்படும்.

## நேர்மாற்று மீள்கொள்வனவு அல்லது கொள்வனவு கருமபீடம். (Revers Repo and Repo windows)

வங்கிகள் அல்லது ஏனைய நிதி நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்கான அதிகாரம் மத்திய வங்கிக்கு உள்ளது அத்தகைய கடன் வழங்கப்படுவதன் ஊடாக பொருளாதாரத்திற்கு மேலதிகத் திரவத்தன்மை வழங்கப்படுவதோடு மேலதிக திரவதன்மை பொருளாதாரத்தினுள் இருப்பின் அதனை மத்திய வங்கி உள்ளீர்த்து கொள்வதன் ஊடாக மத்திய வங்கியால் நேரடியாக பணநிரம்பலில் தாக்கம் செலுத்த முடியுமாக உள்ளது.

உசாத்துனை :-

macro economic

orley M.AMOS ,JR

கு. பிரதீபன் 2009 கருத்தரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாயிரம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோள் or மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்

சா.பராஸ்கனி
2010 arts B

2000ம் ஆண்டு September இல் ஐக்கிய நாடுகளின் புத்தாயிரமாம் ஆண்டு உச்சி மகாநாட்டில் உலகதலைவர்கள் வறுமை, பட்டினி, நோய், எழுத்தறிவின்மை, சூழல்சீரழிவு, பெண்களிற்கு எதிரான பாரபட்சம் போன்றவற்றை இல்லாதொழிப்பதற்கான கால வரையறை வகுக்கப்பட்டதுடன் அளவிடத்தக்கதுமான குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைய இணங்கிக் கொண்டனர். இவற்றிற்கு புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோள் என பெயரிட்ப்பட்டது.

இதன் கீழ் எட்டுக் குறிக்கோள்களும் அவற்றின் கீழ் 18 இலக்குகளும் உள்ளன. 2015ம் ஆண்டில் இக்குறிக்கோள்கள் அடையப்படலாமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இக்குறிக்கோள்களில் முதல் 7 குறிக்கோள்களும் வறுமை ஒழிப்பிற்கு சார்பான கொள்கையை கடைப்பிடிக்கும் வகையில் உள்ளது. 8வது குறிக்கோளானது செல்வந்த நாடுகள் பற்றியும் அவை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற்கு உதவி செய்ய வேண்டும் என்ற அர்ப்பணிப்பையும் குறிப்பிடுகின்றது.

## புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்திக்குறிக்கோள்கள்

1. மோசமான வறுமையையும் பட்டினியையும் இல்லாதொழித்தல்.
2. உலகளாவிய ஆரம்பக்கல்வியை அடையப்பெறல்
3. பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தலும் பெண்களை வலுப்படுத்தலும்
4. குழந்தைக்ள இறப்புவீதத்தைக் குறைத்தல்
5. மகப்பேற்று சுகாதாரத்தை முன்னேற்றுதல்
6. HIV / எயிட்ஸ், மலேரியா மற்றும் ஏனைய நோய்களிற்கு எதிராகப் போராடுதல்
7. சுற்றாடல் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தல்
8. அபிவிருத்திக்கான உலகளாவிய பங்குடமையை அபிவிருத்தி செய்தல்.

## புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோளும் இலங்கையும்.

UNO இன் அங்கத்துவ நாடான S.L MDGS ஐ நிறைவேற்று கடைப்பாட்டினை கொண்டுள்ளது. S. L இல் 1930இன் நடுப்பகுதியில் இருந்து இலவசக் கல்வி, சுகாதார நலனோம்பு வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றமையினால் ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் இடத்து மனிதவிருத்திக்கான இலக்குகளை அடைவதில் S.L மிகவும் உயர்ந்த மட்டத்தில் உள்ளது. இருப்பினும் வறுமை மட்டங்கள் நாட்டில் இடத்திற்கிடம் வேறுபடுவதுடன் சில இடங்களில் மோசமான நிலையில் உள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள மிக வறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெறாமை நிதிமனிதவளப் பற்றாக்குறை வினைத்திறனின்மை என்பன MDGS ஐ அடைவதில் இலங்கைக்குப் பெரும் சவாலாக உள்ளது. S.L இல் MDGS நிகழ்ச்சித்திட்டத்தினை கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கம் அமைச்சு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியுடன் கண்காணித்து வருகிறது.

## புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளும் இலங்கையின் நிலையும்

| புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளும் | இலங்கையின் நிலை |
|---|---|
| 1990–2015 கால கட்டத்தில் நாளொன்றிற்கு 1டொலருக்குக் குறைவான வருமானம் பெறும் மக்களின் வீதத்தை பாதியாகக் குறைத்தல். | 1990இல் 4% ஆகவும் 2005இல் 6.6% ஆகவும் இருந்தது. |
| 1990-2015 இற்கிடையில் பட்டினியால் வாழும் மக்கள் வீதத்ததை பாதியாகக் குறைத்தல் | வறிய மக்கள் தொகை 1990இல் 21.8% இலிருந்து 2006-2007இல் 15.2% ஆக குறைவடைந்துள்ளது. |
| 2015ம் ஆண்டளவில் சகல இடங்களிலுமுள்ள ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் ஆரம்பப் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்யக்கூடியதாக விருப்பதை உறுதிப்படுத்தும். | தேறிய ஆரம்பக்கல்வி அனுமதி 97.5% ஆகும். கல்வி அறிவு வீதம் 94%ஆகும். 14 வயது வரை கட்டாயக்கல்வி சட்டக்கட்டுப்பாடு உள்ளது. |
| 2005ம் ஆண்டிற்கும முன்னர் ஆரம்ப, 2ம் நிலைக்கல்வி மட்டத்திலும் 2015 இற்று முன்னர் சகல மட்டக்கல்வியிலும் பால் நிலை வேறுபாட்டை இல்லாதொழித்தல். | சமத்துவம் ஏற்கனவே அடையப்பட்டு விட்டது. 15-24 வயதிற்கிடையிலான எழுத்தறிவுள்ள ஆண், பெண் விகிதாசாரம் சமமாக உள்ளது. |
| 1990-2015 காலகட்டத்தில் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பை 2/3 பங்கால் குறைத்தல். | 1990இல் 1000 : 23 ஆகவிருந்து 2005இல் 1000 : 11 ஆக குறைவடைந்துள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள்.

1. **கமநெகும திட்டம்**

   ❖ இத்திட்டமானது 6000 கிராமங்களை அபிவிருத்தி செய்கின்றது.

   ❖ கமநெகும திட்டமானது மொனராகல மாவட்டத்தில் சயமபலாண்டுவ பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

   ❖ கமநெகும திட்டத்துடன் ஜாதிகசவிஸ் என்ற திட்டமும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2. **தருண அருண திட்டம்**

   இலங்கை அரசாங்கத்தால் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் திட்டமாகும்.

3. **ஆயிரம் அறிவகங்கள் திட்டம்**

   ❖ ஆயிரம் அறிவகங்கள் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 2005 கதிர்காமம் கிரிவிகாரையில் ஆகும்.

   ❖ ஆயிரம் அறிவகங்கள் திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது மொத்தம் 23 மாவட்டங்களில் ஆகும்.

   ❖ இத்திட்டம் நெனசலதிட்டம் எனப்படும்.

4. **சிசு திரிய புலமை பரிசில் திட்டம்.**

   ❖ தரம் 12 மாணவர்களுக்கு ஒவ்வொரு கல்வி வலயத்தில் இருந்தும் 80 வறிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வருடாந்தம் 5000/= ரூபா வழங்கப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி அளிக்கின்றது. மகிந்தசிந்தனையில் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

5. **நெக்பெக்திட்டம்**

   ❖ வடக்கு கிழக்கிற்கான கரையோரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. வடக்கின் வசந்தம்

- ❖ வடக்கில் உள்ள சகல மாவட்டங்களில் கைத்தொழில் அபிவிருத்தி துறைமுக அபிவிருத்தி வீடமைப்பு, புகையிரதம் போன்றவற்றினை செயற்படுத்துவதற்கு உண்டாக்கப்படும் திட்டம் இதுவாகும்.

## 7. வடக்கின் நண்பன் திட்டம்

- ❖ யாழ்ப்பாணம் கொழும்புக்கான புகையிரத சேவையை துரிதப்படுத்த மேற்கொள்ளும் திட்டம் வடக்கின் நண்பன் திட்டம் ஆகும். 2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 180 நாட்களுக்குள் முடித்து வைக்கப்படும்.

## 8. கிழக்கின் உதயம் (2007 – 20010)

- ❖ மூன்றாண்டு கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டம்
- ❖ இத்திட்டமானது அடுத்த மூன்று (2007 – 2010) ஆண்டுகளில் பொருளாதாரக் கட்டமைப்பு மனித வளம் மற்றும் இயற்கை மூலவளங்களை அபிவிருத்தி செய்வதனூடாக வேளாண்மை, மீன்பிடிக் கைத்தொழில், சுற்றுலாத்துறை என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

உசாத்துணை நூல

பொதுஅறிவு 2010 நூல் By. P. Kamalthasan

கடந்தகால வினாத்தாள்கள்

மத்தியவங்கி ஆண்டறிக்கை 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடை அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ் ஊழியர்களதும் தொழில் வழங்குனர்களதும் உரித்துக்கள், கடப்பாடுகள், பொறுப்புகள்

து.மயூரி
2010 com A

தொழில் சட்டங்களில் முக்கியமானதாக கருதப்படும் கடை, அலுவலக (தொழில் ஊதியம் ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1954ம் ஆண்டின் 19ம் இலக்கச் சட்டமாக அமுலுக்கு வந்தது. இதனையடுத்து 1938ம் ஆண்டில் 66ம் இலக்க சால்புகட்டளைச் சட்டம் இரத்தானது. இச்சட்டமானது இது வரை ஏறக்குறைய 10 திருத்தச்சட்டங் களாலும், 3 கட்டளைகளாலும், வர்த்தக மானி ஒழுங்குவிதிகளாலும் திருத்தப்பட்டுத் தற்போது நடைமுறையிலுள்ளது.

## சட்டத்தின் நோக்கம்

கடை அலுவலகம் என்பவற்றில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களுக்குச் சேவை நியதி நிபந்தனைகளை வரையறுத்தல், வேலை நேரம், சம்பளங்களை நிர்ணயித்தல், சேவை வசதிகளை அளித்தல், மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கல், சுகாதார நலனோம்பு வசதிகள் அளித்தல் மற்றும் பெண் ஊழியர்களுக்கான (மகப்பேற்று) பிரசவ நன்மைகள் அளித்தல் என்பவற்றுக் கான ஏற்பாடுகளை உள்ளடக்கி யுள்ளன.

இச்சட்டத்தின் 68ம் பிரிவில் கடை அலுவலகம் என கணிக்கப்படும் இடங்கள் பற்றி வரைவிலக்கணம் கொடுக்கப் பட்டுள்ளது. இவ்விடங்களில் வேலை செய்யும் சகல தனியார் ஊழியர்களும் கடை அலுவலக ஊழியர் சட்டத்திற்கு உட்பட்டவர்களாவர்.

## வேலையில் அமர்த்தப்படுவதற்கான குறைந்த வயது

14 வயதுக்கு குறைந்த எவரும் கடை அல்லது அலுவலகம் அல்லது தொழில் ஒன்றில் சேவையில் அமர்த்தப்படுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. தொழில் தருநர் என்ற வகையில் அரச அலுவலகங்களை இச்சட்டம் உள்ளடக்காது. இச்சட்டமானது தனியார் துறை ஊழியர்களுக்கும், தொழில் தருநர்களுக்கும் மட்டும் பொருத்தமானது. மேலும் விளையாட்டு, பொழுதுபோக்கு ஒத்த நோக்கங்களுக்காக இலாபநோக்கம், அல்லாத சங்கங்களின் ஊழியர்கள் இச்சட்டத்திற்கு உட்படமாட்டார்கள்.

## ஊழியர்களின் உரித்துக்கள்

**1. பொதுவான (சாதாரண) வேலை நேரங்கள் :-**

வாரநாள் ஒன்றில் (1 மணிநேர உணவு ஓய்வுக்கான இடைவேளை தவிர) எட்டு (8) மணித்தியாலங்கள் ஆகும். வாரத்தில் ஒரு அரைநாளில் (உணவு / ஓய்வு நேரம் தவிர) ஐந்து (5) மணித்தியாலங் களாகும். வாரமொன்றில் வேலை செய்யக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தகாலப்பகுதி 45 மணித்தியாலங்களாகும். (மேற்படி இரண்டும் சேர்த்த காலப்பகுதி)

**2. மேலதிக நேர வேலையும் கொடுப்பனவும் :-**

வாரமொன்றில் 45 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட வேலை நேரப்பகுதி மேலதிக நேர வேலையாக கருதப்படல் வேண்டும். இக்காலப்பகுதிக்கு 1 ½ மடங்கு ஊதியம் வழங்கப்படல் வேண்டும். (சாதாரண மணித்தியால வேலை நேரத்துக்கான கொடுப்பனவைவிட ½ மடங்கு கூடியது) மாதாந்த வேதனத்தை 24 ஆல் பிரித்து அதனை 50% த்தால் அதிகரிப்பதன் மூலம் கணிக்கப்படும். மேலதிக நேர வேலை வாரமொன்றிற்கு ஆகக்கூடியது 12 மணித்தியாலங்களுக்கு மேற்படலாகாது.

**3. இடைவேளையும் ஓய்வும் :-**

ஊழியர் ஒவ்வொருவருக்கும் அவர் தொடர்ச்சியாக வேலை செய்த 4 மணித்தியாலங்களை கொண்ட காலப் பகுதிமுடிவில் ஓய்வுக்காக அல்லது உணவுக்காக ½ மணி நேர இடைவேளை தவிர வேலை நேரங்கள் தடைப்படாமல் தொடர்ச்சியாக இருத்தல் வேண்டும்.

**4. விடுமுறையும் லீவும்**

## ❋ அமையலீவு

ஒரு முழுவருடத்திற்கான அமையலீவு 7 நாட்களாகும். இது சம்பளத்துடன் கூடியதாகும். வேலையில் சேர்ந்த வருடத்தில் இரண்டு (2) மாதங்களுக்கு 1 நாள் லீவு வீதம் வழங்கப்படலாம். அவசிய தேவை சுகயீனம் காரணமாக இந்த லீவு வழங்கப்படலாம்.

## ❋ வாராந்த விடுமுறை

வாரமொன்றில் மேலதிக நேரவேலை தவிர்ந்த 28 மணித்தியால நேரத்துக்கு குறையாத நேரம் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் சம்பளத்துடன் கூடிய (1 ½) ஒன்றரை நாள் விடுமுறைக்கு அதே வாரத்தில் அல்லது அடுததுவரும் வாரத்தில் பெற உரிததுடையவராவார். வாரம் என்பது சனிக்கிழமை நள்ளிரவிலிருந்து அடுத்த சனிக்கிழமை நள்ளிரவு வரையுள்ள காலப்பகுதியாகும்.

இவ்விடுமுறை நாளில் வேலை செய்யும் ஊழியர் அடுத்த வாரஇறுதிக்குள் 1½ நாள் பதில்லீவுக்கு உரித்துடைய வராவார். அத்துடன் அவ்வாரத்தில் வேலை செய்யும் மேலதிக மணித்தியாலங் களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும்.

## ❋ வருடாந்த விடுமுறை

முழுச்சம்பளத்துடன் ஆண்டொன்றுக்கு 14 நாட்கள் வருடாந்த விடுமுறைக்கு ஊழியர்கள் உரித்துடையவர்கள் சேவைக்குச் சேர்ந்த முதல் ஆண்டில் அதற்கான உரித்து இல்லையெனினும் அவ்வாண்டில் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் சேர்ந்திருந்தால் 14 நாட்களுக்கும், யூலை 1ம் திகதிக்கு முன்னர் சேர்ந்திருந்தால் 10 நாட்களுக்கும் ஒக்டோபர் 1ம் திகதிக்கு பின்னர் எனின் 4 நாட்களுக்கும் இரண்டாம் ஆண்டில் உரித்துடையவராவர். அதன் பின் ஒவ்வொரு ஆண்டிலும் 14 நாட்கள் விடுமுறைக்கு உரித்துண்டு சேவையில் இருந்து விலகும் போது இவ்விடுமுறை கடந்த ஆண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்துடைய விடுமுறைகளில் பயன் படுத்தப்படாத மீதி விடுமுறை நாட்கள் இருப்பின் அவையும், சேவையில் இருந்து விலகும் ஆண்டில் 10 மாதங்களுக்கு குறைவாக சேவையாற்றி யிருப்பின் மாதமொன்றிற்கு 1 நாள் விதமும் 10 மாதங்களுக்கு மேல் எனின் 14 நாட்களுக்கும் உரித்துண்டு. ஏதாவது வகையில் விடுமுறை கிடைக்காவிட்டால் அதற்கான பணக் கொடுப்பனவு பெற உரித்துண்டு.

### ❋ பகிரங்க விடுமுறை

அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப் பட்ட பகிரங்க வர்த்தக விடுமுறைத்தினங்கள் பகிரங்க விடுமுறை நாட்களாகும். ஆவையாவன.

i. தைப் பொங்கல்
ii. தேசிய தினம் (பெப்ரவரி 4)
iii. சிங்கள – தமிழ் புத்தாண்டிற்கு முந்தியதினம்.
iv. சிங்கள – தமிழ் புத்தாண்டு தினம்
v. மேதினம்
vi. விசாக முழு நோன்மதி தினத்திற்கு அடுத்த தினம்
vii. நபிகள் நாயகம் அவர்களின் பிறந்த தினம்
viii. நத்தார்தினம்

இந்த 8 நாட்களும் சம்பளத்துடனான விடுமுறைதினங்களாகும். இந்நாட்களில் வேலைக்கமர்த்த வேண்டுமாயின் தொழில் ஆணையாளரின் அங்கிகாரம் பெறப்படல் வேண்டும். இந்நாட்களில் ஊழியர் வேலைக்கமர்த்தப்படின் அந்த விடுமுறை நாளிற்கு பதிலாக சம்பளத்துடனான பதில் விடுமுறைநாளினை அவ்வருட டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு முன் வழங்குதல் வேண்டும் அல்லது வேலைசெய்யும் விடுமுறை நாளுக்கு இருமடங்கு சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

வர்த்த விடுமுறை நாளொன்று வாராந்த விடுமுறை நாள் ஒன்றில் வருமிடத்தில் வர்த்தக விடுமுறை முன்னால் இடம் பெறும் அதாவது வர்த்தக விடுமுறை தினத்திற்கான உரித்து மேற்படி பாதிக்கமைய அன்றைய தினம் வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் வாராந்த விடுமுறைக்கான உரித்து அதே வாரத்தில் வழங்கப்படலும் வேண்டும். அத்துடன் வாராந்த விடுமுறை (முழு அல்லது அரை) அதே வாரத்தில் அல்லது அடுத்து வரும் வாரத்தில் புறம்பாக கொடுக்கப்படல் வேண்டும்.

### ❋ நோன்மதி (போயா) விடுமுறை

இத்தினம் சம்பளத்துடன் கூடிய விடுமுறைதினமாகும். போயாதினம் வார விடுமுறை நாளொன்றில் அல்லது பகிரங்க விடுமுறை நாளொன்றில் வருமாயின் அதற்குப் பதிலாக மேலதிக விடுமுறைத் தினம் வழங்கப்படமாட்டாது. இவ்விடுமுறை தினத்தில் ஊழியரை வேலைக்கமர்த்தினால் 1½ மடங்கு சம்பளம் வழங்கப்படல் வேண்டும். (மேலதிக நேர கொடுப்பனவு அடிப்படையில்) அதாவது 50% மேலதிக சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

### ❋ பிரசவ விடுமுறை

கடை, அலுவலகங்களில் வேலைக் கமர்த்தப்படும் ஒவ்வொரு பெண் ஊழியருக்கும் உயிருடன் பிறக்கும் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு குழந்தைகளுக்காக சம்பளத்துடன் கூடிய 84 வேலை நாட்கள் விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பின் பிறக்கும் குழந்தைகளுக்காக சம்பளத்துடனான 42 வேலை நாட்கள் மட்டுமே விடுமுறை வழங்கப்படலாம். உயிரின்றி குழந்தை பிறந்த போதிலும் கரு உருவத்துடன் முண்டமாக பிறந்தால் பொதுவான பிரசவத்தை போன்று 42 நாட்களுக்கு பிரசவ விடுமுறை பெற உரித்துடையவர். பிரசவ விடுமுறை நாட்கள் கணிக்கப்படுகையில் ஏனைய விடுமுறை நாட்கள் உள்ளடக்கப்படலாகாது.

**தொழில் வழங்குனரின் பொறுப்புக்கள்**

**I. சம்பளம் வழங்கல்**

கடை, அலுவலக ஊழியர்களுக்கு தொழில் வழங்குனர், ஊழியர் என்போரின் இணக்கத்தின் பெயரில் சம்பளம் நிர்ணயிக்கப்படும். ஊழியரின் சம்பளம் அங்கீகரிக்கப்பட்ட பணத்தினால் அனுமதிக்கப்பட்ட கழிவுகளுடன் மட்டும் வழங்கப்படுதல் வேண்டும். ஊழியரின் விருப்பப்படியான கழிவுகள் 60% க்கு மேற்படலாகாது.

**II. சம்பளம் வழங்கும் கால எல்லை**

சம்பளம் வழங்குதல் வாரத்திற்கு ஒரு முறையெனின் அவ்வாரம் கழிந்து 3 நாட்களுக்குள்ளும், இரு வாரங்களிற்கு ஒருமுறையெனின் அவ்வாரம் கழிந்து 3 நாட்களுக்குள்ளும் ஒருமுறையெனின் இரு வாரங்கள் முடிந்து 5 நாட்களுக்குள்ளும் மாதத்திற்கு ஒருமுறையெனின் மாதம் முடிவடைந்த 10 நாட்களுக்குள்ளும் வழங்குதல் வேண்டும். சேவை முடிவுறுத்தும் சந்தர்ப்பங்களில் முடிவுறுத்தப்பட்ட திகதியிலிருந்து. இரண்டு வேலை நாட்களுக்குள் உழைத்த சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

**III. பதிவேடுகள் பேணலும் பராமரித்தலும்.**

சகல தொழில் கொள்வோரும் பின்வரும் பதிவேடுகளை பேணிபராமரித்தல் வேண்டும்.

1. ஒவ்வொரு ஊழியர் சம்பந்தமான சேவைப் பதிவேடு இதற்காக படிவம் CFI பாவிக்கப்படல் வேண்டும்
2. ஒவ்வொரு ஊழியரும் வேலை செய்த மணித்தியாலயங்கள் எண்ணிக்கை அவருக்கு வழங்கப்பட்ட விடுமுறை நாட்களின் எண்ணிக்கை என்பவற்றை உள்ளடக்கிய நேரப்பதிவேடு (வரவு இடாப்பு) குறிக்கப்பட்ட "ஈ" (E) படிவத்தில் பேணி பராமரித்தல் வேண்டும்.
3. சகல ஊழியர்களைப் பொறுத்த வரையிலும் கொடுப்பனவு செய்யப்படும் சம்பள விபரங்கள் அடங்கிய சம்பள பதிவேடு.
4. சகல ஊழியர்களுக்கும் சேவை நியதி நிபந்தனைகள் அடங்கிய நியமனக்கடிதம் வழங்கி அவர்களின் ஒப்புதலை பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய பதிவேடுகள் 6 ஆண்டுகளுக்குத் தொழில் தருநரால் பரிசோதனைக்காக பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.

**IV. நியமன கடிதம் வழங்கல்**

இது தொழில் நிபந்தனைகள் அடங்கிய ஒரு உடன் படிக்கையாகும் நியமனக் கடிதம் வழங்குவதன் மூலம் ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடுசட்டத்தினால் உறுதிப்படுத்தப் படுகிறது. இதில் இடம் பெறவேண்டிய அம்சங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஊழியரின் பெயர், பதவி, அந்தஸ்து
2. நியமனத்திகதி
3. நியமிக்கப்படும் தரம்
4. ஆரம்ப சம்பளமும், ஏற்றங்கள், உச்ச எல்லைகளும்
5. சம்பளம் வழங்கப்படும் விதமும், கால எல்லையும்
6. படிகள்
7. சோதனைகாலம், பயிற்சிக்காலம் ஏதுமிருப்பின் அவைசம்பந்தமான விபரங்கள்
8. வேலைநீக்கமும் காரணங்களும்
9. வழமையான வேலை நேரங்கள்
10. கிடைக்க கூடிய விடுமுறைகள், லீவுகள், மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு
11. வைத்திய பரீட்சை, வினைத்திறமைக்கான பரீட்சை என்பன
12. ஒழுக்காற்று நடவடிக்கைகள்
13. கழிவுகள்
14. சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கான உதவுத் தொகைகள், அறவீடு
15. பதவி உயர்வுகள் மற்றும் வசதிகள்
16. நியமனக்கடிதம் இரு பிரதிகளில் ஊழியருக்கு வழங்கப்பட்டு அதன் ஒரு பிரதி ஊழியரால் ஏற்றுக் கொண்டமையை உறித்துப்படுத்தும் அவரின் ஒப்பம் பெறப்பட்டு தொழில் வழங்குனரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

**V. மற்றும் நலனோம்பு வசதிகள்**

ஊழியர்களின் சுகாதார உடல் நல வசதிகளை கருத்தில் கொண்டு விசேட சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆண் / பெண் இருபாலாருக்கும் வேறான மலசலகூட வசதிகள், கழுவும் இட வசதிகள் வெளிச்சம் காற்றோட்டம் தொடர்பின் வசதிகள் பெண் ஊழியர்களுக்கான ஆசன வசதிகள் என்பன இவற்றுள் அடங்கும்.

## ஒரே பார்வையில் தொழில் வழங்குனர், தொழிலாளர்களின் பொறுப்புக்களும் கடமைகளும்

**தொழிலாளர்களின் பொறுப்புக்களும் கடமைகளும்.**

1. சேவை ஒப்பந்தத்திற்கு (நியமனக் கடிதத்திற்கு) இணங்க நடந்து கொள்ளுதல் வேண்டும்.
2. பொதுவாக நிலவுகின்ற சட்டப் பிரமாணங்களுக்கு இணங்க நடந்து கொள்ளுதல் வேண்டும்.
3. அனுமதிக்கப்பட்ட விடுமுறை தவிர தினந்தோறும் தொழிலுக்கு சமூகமளிக்கவேண்டும்.
4. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே தொழிலுக்கு சமூகமளித்தல் வேண்டும்.
5. மிகவும் உற்சாகமான கவனத்துடன் கடமைகளில் ஈடுபடுதல் வேண்டும்.
6. உற்சாகத்துடனும் பொறுப்புடனும் கடமைகளில் ஈடுபடுதல் வேண்டும்.
7. தொழில் வழங்குனரின் அல்லது அவரின் பிரதிநிதியின் பணிப்புக்களுக்கமைய நடந்து கொள்ளுதல் வேண்டும்.
8. தொழில் வழங்குனரின் சொத்துக்களை திருடக் கூடாது
9. தொழில் வழங்குனருக்கு நேர்மையான வீதத்தில் சேவை செய்தல் வேண்டும்.
10. சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேலையில் சேவை நிலையத்தினுள் மது போதையில் இருக்ககூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அறிந்து கொண்டு வேண்டுமென்றே ஒழுங்கு தவறி நடத்தல் கூடாது.

12. நுகர்வோருடன் அல்லது வாடிக்கை யாளருடன் ஒழுங்கினமாக நடந்து கொள்ளக் கூடாது.

13. தாபனத்துக்க அல்லது உரிமை யாளருக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிடுதலோ அல்லது நடந்து கொள்ளுதலோ கூடாது

14. தொழில் தருனருக்கு வஞ்சனை எண்ணத்துடன் விபரங்களை சமர்ப்பிக்காது விடுதல் கூடாது.

15. தொழில் வழங்குனரின் அனுமதியைப் பெற்றுகொள்ளாது தாபனத்தின் பிரசுரங்களை வெளியிடுதல் கூடாது.

16. வேலைத்தளத்தின் சுகாதாரம், சுத்தத்தினை பேணுவதற்குதவறக் கூடாது.

17. தாபனத்தில் அமைதியை பேணுவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

18. புகைத்தல் தடைசெய்யப்பட்டிருப்பின் அவ்விடத்தில் அதற்கு ஏற்ற விதமாக நடந்து கொள்ள வேண்டும்.

19. தாபனத்தின் உற்பத்திக்கு அல்லது சேவைக்கு ஊறுவிளைவிக்கும் வண்ணம் or குறையும் வண்ணம் நடந்து கொள்ளுதல் கூடாது.

20. தொழில் வழங்குநரால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உபகரணங்களை தொழிலாளர் எல்லோரும் பயன்படுத்தல் வேண்டும்.

21. சட்டத்திற்கு முரணான விதத்தில் வேலை நிறுத்தங்களை ஒழுங்கு செய்தலே உற்சாகமூட்டுதலோ அல்லது நடத்துதலோ கூடாது.

22. தொழில் நியாய சபைகளின் தீர்ப்புக்கள் கைத்தொழில் மன்றங்களின் தீர்ப்புக்கள் என்பவற்றை மாற்றுமாறு கோரி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

23. விசுவாசமாகவும், திறமையாகவும் சேவைகளை வழங்க வேண்டும்.

24. தொழிற் பிணக்குகள் ஏற்படுமிடத்துத் தொழிற் திணைக்களத்தை நாடி உரிய ஆலோசனைகளை பெற்று கொள்ளுதல் வேண்டும்.

## தொழில் வழங்குனரின் பொறுப் புக்களும் கடமைகளும்.

1. ஊழியருக்கு நியமனக்கடிதத்தை வழங்குதல் வேண்டும். (கடை, அலுவலக ஊழியர் சட்டத்திற்கிணங்க)

2. சம்பளப்பதிவேடு, சேவைப்பதிவேடு என்பன பேணுதல் வேண்டும்.

3. வரவுப்பதிவேட்டினைப் பேணுதல் வேண்டும்.

4. சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு லீவுகள், வாரவிடுமுறைகள், ஆண்டு விடுமுறைகள், போயா விடுமுறைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

5. குறித்த சம்பளத்திற்குக் குறையாதளவு சம்பளத்தை வழங்குதல் வேண்டும்.

6. குறிப்பிட்ட காலம் கடப்பதற்கு முன்னர் சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.

7. ஊழியர் சேமலாப, ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான உதவுதொகைகளை செலுத்துதல் வேண்டும்.

8. சேவை முடிவுறுத்தப்படும் போது பணிக் கொடைகள் கொடுப்பணவுச் சட்டத்திதற்கிணங்கப் பணிக்கொடைகள் வழங்குதல் வேண்டும்.

9. பிரசவநலன்கள் சட்டத்திற்கமையச் சம்பளத்துடனான லீவு வழங்கி அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமான அறிக்கையினைப் பேணுதல் வேண்டும்.

10. பிரசவ விடுமுறை பெற்றுக் கொண்ட காலத்தின் பொருட்டு விடுமுறையைப் பெற்றுகொடுத்தல் வேண்டும்.

11. கர்ப்ப முற்றுள்ள பெண்களின் சுகாதாரத்திற்கும் கருவுக்கும் தீங்கு ஏற்படாதவாறு அவர்களை சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

12. சட்டத்திற்கிணங்க பிரசவ நலன்களை வழங்குதல் வேண்டும்.

13. பிரசவத்தின் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் விடுமுறையை நீக்கி பெண் தொழிலாளிக்குரிய ஏனைய விடுமுறைகளில் பாதிப்பினை உண்டு பண்ணுதல் கூடாது.

14. 14 வயதுக்குக் குறைந்த எவரையும் சேவைக்கு அமர்த்துதல் கூடாது

15. தொழில் ஆணையாளர் அல்லது அவருடைய பிரதிநிதி தாபனத்தை பரீட்சியதற்காகச் சமூகமளிக்குமிடத்து அவருக்கு இடையூறு செய்யக் கூடாது.

16. தொழில் ஆணையாளர் தாபனத்தைப் பரீட்சிப்பதற்காக சமூகமளித்து புத்தகங்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பிக்குமாறு கேட்குமிடத்து அவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

17. ஊழியர் சேமலாபநிதிக்கும், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கும் உதவி தொகை செலுத்தப்படாமை தொடர்பான குறிப்பிட்ட அறிக்கைகளை மாதந்தோறும் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

18. யாதோனும் தொழில் ரீதியான விபத்து ஏற்படும் இடத்து அது பற்றி உடனே தொழில் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

19. யாரேனும் ஊழியர் ஒருவர் தொழிற் திணைக்கள அதிகாரி ஒருவருக்கு விபரங்களை தெரிவித்தார் என்ற காரணத்திற்காக அவருக்கு தண்டனை ஏதும் வழங்க கூடாது.

20. ஊழியர்களில் 40% வீதத்துக்கு மேல் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்சங்கம் ஒன்றை ஏற்று கொள்ளுதல் வேண்டும். பேரம் பேச்சு வார்த்தையின் போது பங்கு பற்ற அனுமதித்தல் வேண்டும்.

21. ஊழியர் ஒருவர் சம்பளச்சபை ஒன்றில் தொழிற்சங்கம் ஒன்றில் அங்கத்தவராக இருத்தல் அல்லது அதில் பங்குபற்றுதல் காரணமாக அவருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுத்தல் கூடாது.

22. ஊழியர் ஒருவருக்கு அல்லது ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம் தொழில் நியாயசபைகளினால் வழங்கப்படும் தீர்ப்புக்களை கைத்தொழல் நீதிமன்றத்தால் தீர்ப்புக்களை மாற்றுமாறு கோரி அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

23. தொழிற் சட்ட ஏற்பாடுகளைப்பற்றி பூரண விளக்கங்களை தொழிற் திணைக்கள அதிகாரிகளிடம் பெற்று கொள்ளலாம். சட்டஏற்பாடுகள் பற்றிய அறிவின்மையை காரணம் காட்டி நிவாரணம் கோரமுடியாது.

உசாத்துணைகள் :-

பத்திரிகைகள்,


வணிகம் பகுதி 2 ஜகத்பண்டார நாயக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்து

யோ.சரண்யா
2010 com[B]




## இடமிருந்து வலம்

1. கோல்டன் கீ கிறிடிட்காட் கம்பனியின் முறிவுகாரணமாக இலங்கை வங்கியின் கீழ் செயற்பாடுகளை கொண்டுவரப்பட்ட வங்கி இதுவாகும்.
2. கிரயம் வருமானம் உழைக்கப் பயன்படுததும் போது இவ்வாறழைக்கப்படும்.
3. இயற்கை தேசச்சூழலில் கலாச்சாரத்திற்கு என புவி மாநாட்டுக்குரிய அங்கத்துவ நாடுகளினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை
4. வருமானம் ஒன்று எப்போது கிடைக்கப் பெற்றதோ அன்றே அது ஈட்டப்பட்டதாக கருதிக் கணக்குகளில் பதிவு செய்ய வலியுறுத்தும் எண்ணக்கரு (தலைகீழாக)
5. எந்நாட்டின் பிரதமர் தற்போதைய சார்க் அமைப்பின் தலைவர்.
6. சூழலுக்கு மாசு ஏற்படாதவாறு வழங்கப்படும் உற்பத்திக்கு வழங்கும் பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கிடைச் சேர்க்கை முறையில் உருவாக்கப்பட்ட மத்திய கிழக்காசிய நாடுகளின் மையம்.

12. உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற கூரியர் சேவை இதுவாகும்

13. தனிநபர் வருமானங்கள் மீதும் சொத்துக்கள் மீதும் வருமான வரித்திணைக்களம் நேரடியாக அறவிடும் வரி இதுவாகும்.

## மேலிருந்து கீழ்

1. அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை ஆகியன பொதுவாக லங்கா.......... முறைமை என அழைக்கப்படும்.

2. காப்புறுதி செய்தவர்களை பாதுகாப்பதற்கான நிதியம் ஒன்றை நிறுவுவதற்காக காப்புறுதி கம்பனிகளின் ஆண்டுக்குரிய வருமானம் மீது விதிக்கப்பமும் வரி (தலைகீழாக)

3. விலைக்கும் கேள்விக்கும் இடையே நேர்கணிய தொடர்புடைய பண்டம் (தலைகீழாக)

6. உற்பத்தியாளர் தமது பண்டங்களை போட்டிப் பண்டங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பயன்படும் அளவீடு.

7. சுனாமியால் பாதிக்கப்பட்ட பேரளவு முயற்சிகளுக்கு உதவுவதற்காக இலங்கை மத்திய வங்கியால் ஆரம்பித்திருக்கும் கடன் திட்டம்

9. பொருளியலில் மூலாதாரப் பிரச்சனையாக குறிப்பிடப்படுவது (தலைகீழாக)

10. நுகர்வோர் தேவை விருப்பங்களை திருப்திப்படுத்துவதற்கான உற்பத்தியின் ஆற்றல் தொடர்பான நுகர்வோர் மதிப்பீடு ........... ஆகும். (தலைகீழாக)

11. பட்டியல் படுத்தப்பட்ட கம்பனியின் பெயரில் பயன்படுத்தப்படும் பதம்

12. முற்கூட்டியே இலகுவாக நிச்சயிக்க முடியாத வேகமாக மாற்றமடையும் ஒரே விதமானதும் பகுதிக் கட்டமைப்பு தீர்மானம் எடுப்பதற்கு பயன்படும் தகவல் முறைமை (தலைகீழாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 செ | லா | ன் | ■ | ■ | ஸ் | ■ | ■ |
| க் | ■ | ப | ■ | ■ | 2 செ | ல | வு |
| கு | ■ | 3 கி | யோ | ட் | டோ | ■ | ■ |
| ய | றி | 4 தே | ■ | 5 இ | ந் | தி | யா |
| ர் | ■ | 6 ப | 7 சு | மை | ■ | ம | ■ |
| ■ | ■ | ண் | சா | ரு | S | று | ■ |
| ■ | ■ | ட | ன | 9 அ | S | 10 பெ | 11 P |
| 8 ஒ | பெ | க் | ■ | ■ | 12 D | H | L |
| ■ | ■ | கு | ■ | ■ | ■ | ■ | C |
| ■ | ■ | றி | ■ | ■ | 13 நே | ர் | ■ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பீடப்பட்ட உடன்படிக்கையும் எண்ணெய் விலையும்.

## Hedging Agreement and Oil Price

பூ. பிரியந்திரி
2010 Com[A]

அண்மைக்காலமாக உலகளாவிய ரீதியில் பொருளாதாரத்துறையானது பாரிய நெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றது. இவற்றுள் சர்வதேச நிதி நெருக்கடியும் அதன் தாக்கங்களும் மற்றும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பும் அதில் ஏற்ப்பட்ட மாற்றங்கள், உணவு நெருக் கடிகள் என பல்வேறுபட்ட நெருக் கடிகளுக்கு தீர்வுகாண வேண்டிய தேவை உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கென பல்வேறு ஆராய்ச்சிகள், மகாநாடுகள் மற்றும் உடன்படிக்கைகள் என நாடுகளுக்கிடையே, பல்வேறு நிறுவனங் களிற்கு இடையே ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதற்கமைய வாஷிங்டனில் "G – 20" (G 20) உச்சிமாநாடு 2008ல் நடைபெற்ற பொழுது அதில் பங்கேற்ற தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய முக்கியத்துவம் குறித்தும், ஏற்படுத்த வேண்டிய ஒப்பந்தம் குறித்தும் ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வாறே உணவு நெருக்கடியினை போக்குவதற்கு உணவு இருப்பினை அதிகரித்துக் கொள்வதற்கும் பல்வேறு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் தொடக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்கான காரணங்களையும் தெளிவாக அறிந்து கொள்வதும் முக்கியமானதாகவுள்ளது. அண்மைக்காலங்களாக ஆசியப் பிராந்தியத்தில் உள்ள முக்கிய நாடுகளாகக் கொள்ளக்கூடிய சீனா மற்றும் இந்தியாவானது துரிதமாகப் பொருளா தாரத்திலும் மற்றும் இதர துறைகளிலும் ஒரு உந்துதலான அதீத போக்கான வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. இவை அதிக சனத்தொகையைக் கொண்ட நாடுகள் ஆகும். இம்மக்கள் தற்பொழுது நல்லதொரு பொருளாதார முன்னேற்றத்தால் பொருளாதார சுபீட்சத்தை அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். இதனால் குறிப்பாக மத்திய தர வர்க்கத்தினது நுகர்வு நடத்தையில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது தரமான போஷாக்கான உணவுக்கான கேள்வியினை ஏற்படுத்துகின்ற பொழுது உணவுக்கான மொத்தக் கேள்வியில் ஓர் அதிகரிப்பினை உணரமுடிந்துள்ளது. அது மாத்திரமின்றி உலக சந்தையில் எண்ணெய்விலையானது அதிகரித்தபடியினால் புதிய தீர்வுத் திட்டத்தினை காண விளைகின்ற பொழுது (Bio Gas) உயிரியல் வாயுக்கான தேவை முக்கியத்துவம் உணரப்பட்டது.

எனவே அதிகளவு உயிரியல் வாயு உற்பத்திக்காக உணவுப்பயிர்கள் எரிபொருள் உற்பத்திகள் நோக்கிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் உணவு நெருக்கடியும் பிரதான காரணிகளில் ஒன்றாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மாத்திரமின்றி மாறிவரும் காலநிலைகள் இயற்கை அனர்த்தங்களான சூறாவளி, வரட்சி, தீயழிவு, சுனாமி, அதிகரித்து வரும் உள்நாட்டு வெளிநாட்டு யுத்தம், இனக்கலவரங்களால் அதிகளவு பெறுமதி வாய்ந்த வளங்கள் நாசமாக்கப்படுவதும் பெருமளவு விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்தப்படாமை போன்றவையும் உணவு நெருக்கடிக்கான காரணிகளில் முக்கியம் வாய்ந்தவையாக குறிப்பிடப்படுகின்றது.

## எரிபொருள் விலை அதிகரிப்பினால் ஏற்படும் பொருளாதார விளைவுகள்.

எரிபொருளின் விலைகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது பொருளாதாரத்தின் சகல துறைகளையும் பாதிப்படையச் செய்கின்றது. எவ்வாறெனில் எரிபொருள் விலை அதிகரிக்கின்ற போது நேடியாக போக்குவரத்து செலவு அதிகரிக்கின்றது. இது மக்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தைச் செலுத்துகின்றது. அத்துடன் வாழ்க்கைச் செலவினை அதிகரிக்கச் செய்வதுடன் பொருட்களது காவுகைச் செலவு அதிகரிக்கின்ற பொழுது அவற்றினது விலைகளும் அதிகரிக்கும் பொருட்கள் சேவைகளின் உற்பத்திச் செலவும் அதிகரிக்கின்றது. மேலும் உற்பத்தி, கைத்தொழில்துறைகளிலும் மற்றும் மின் கட்டணங்கள், சமையல், எரிவாயுக்களின் விலைகள், உணவுப் பண்டங்களின் விலைகள் விமானசீட்டுக்களின் கட்டணம், மற்றும் சுற்றுலாத்துறைகளான ஹோட்டல்களின் தங்குமிட அறைகளுக்கான கட்டணம் விவசாயம், தைத்தொழில் , சேவைத் துறைகள் என ஒட்டு மொத்த பொருளாதாரத்திலும் பெருமளவான பாதிப்பை ஏற்படுத்துவதாக காணப்படும்.

இவை அனைத்திற்கும் மூல காரணமாய் அமைவது உலக சந்தையில் எரிபொருட்களின் விலைத் தளம்பல்கள் ஆகும். எண்ணெய் வள நாடுகள் தமது எண்ணெய் விலையை உயர்வாகப் பேணுவதற்கு தமது OPEC அமைப்பின் ஊடாக செயற்கையாக நிரம்பலைக் கட்டுப்படுத்தி உலக சந்தையில் செயற்கைத் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தி எண்ணெய் விலையினை உயர்ந்த விலையில் பேணுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

## ஷெட்ஜிங் உடன்படிக்கையின் விளக்கம்

இலங்கையில் இதற்கு மேலாக அரசியல், பொருளாதாரங்களில் செல்வாக்குப் பெற்று பலராலும் பேசப்பட்டு வருவதும் அரசியல் வாதி முதல் சாதாரண தொழிலாளி வரை முக்கியம் பெற்றிருப்பதுடன் இலங்கை மக்களில் பெரும்பாலானோரினால் சரியாக விளங்கிக் கொள்ளப்படாத உடன்படிக்கை தான் ஷெட்ஜிங் உடன்படிக்கை அல்லது (Hedging Agreement) அல்லது காப்பிடப்பட்ட உடன்படிக்கை என்பதாகும். இலங்கையில் காப்பிடப்பட்ட எண்ணெய் கொள்வனவு உடன்படிக்கையானது 2007ம் ஆண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் வங்கிக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டது. இவ் உடன்படிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது கனடா நாட்டுப் பொருளாதார அனுபவத்திலிருந்து தோற்றம் பெற்ற எண்ணக் கருவின் அடிப்படையில் இது இலங்கையில் மேற்க்கொள்ளப்பட்டது.

காப்பிடப்பட்ட உடன் படிக்கை யானது பொதுவாக காப்புறுதிக் கொள்கையை ஒத்தது எனக் குறிப்பிடலாம். எவ்வாறெனில் ஒருவர் தமக்கு எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய நட்டத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நிகழ்காலத்தில் காப்புறுதி தவணைப்பணம் செலுத்துவதைப் போலவே தான்.

ஷெட்ஜிங் உடன்படிக்கையிலும் உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துச் செல்வதனால் அதன் விலை அதிகரிப்பால் அதிகளவு அன்னியச் செலாவணி விரையமும் நாட்டில் பணவீக்கமும் ஏற்படுகிறது. இவ்வாறான விலைத்தளம்பலை இலங்கையால் தடுத்து நிறுத்த முடியாது. எனவே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நிலையான விலையில் தொடர்ச்சியாகப் பெற்றோலை கொள்வனவு செய்வதற்காக வங்கியுடன் ஒரு இணக்கப்பாட்டால் ஓர் பொதுவான விலையினை எதிர்கால நிலமைகளினையும் அனுபவங்களையும் கருத்தில் கொண்டு தீர்மானித்தது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையில் எரிபொருளைக் கொள்வனவு செய்து கொள்வதற்கு வங்கி உத்தரவாதம் வழங்கியது. எனவே உலக சந்தை விலையில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை வங்கி பொறுபேற்றுக் கொண்டு தீர்மானிக்கப்பட்ட அல்லது முற்கணிப்பு செய்யப்பட்ட விலையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எண்ணெய்க் கொள்வனவில் ஈடுபட்டு வந்தது.

இங்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 140$ எனும் அடிப்படையில் ஒரு பரல் எண்ணெய்க் கொள்வனவு செய்வதாக உடன்பட்டுள்ளது எனில் சந்தை விலை 140ஐ விட உயர்வடைகின்றதெனில் வங்கியானது நட்டத்தினை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்படும். மாறாக எண்ணெய் விலை பரல் ஒன்று 100$ ஆக வீழ்ச்சி அடைந்தால் வங்கி இலாபத்தினை அனுபவிக்கும் இதுவே இவ் உடன்படிக்கையின் உட்கிடக்கையான கருத்தாகும்.

இன்றைய உலக பொருளா தாரத்தில் ஒரு நாடானது தனித்து தனது பொருளாதார, அரசியல் கொள்கையினைத் தீர்மானிக்க முடியாதுள்ளது. எனவே உலகமயமாக்கல் மூலம் உலகின் ஒரு பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கமானது ஏனைய பொருளாதாரத்தினை பாதிக்கவே செய்யும். இதனைத் தடுப்பதென்பது கடினமானதொரு சவால் மிகுந்ததாகவே காணப்படுகிறது. இவை அனைத்தும் ஏற்படக் காரணமாய் அமைந்திருப்பது காரணிகளது கிடைப்பனவு நாடுகளுக் கிடையே வேறுபட்டுக் காணப்படுவதாகும்.

உசாத்துணை நூல்கள் :-
உதயன் பத்திரிகை (கல்விச்சுடர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கியின் வைப்புக்களும் அவை தொடர்பான நடைமுறை விதியும் ஹற்றன் நஷனல் வங்கி (HNB)

இ.ஜீவகி
2010 com^A

➢ **HNB இல் நிலையான வைப்புக் கணக்கு, சேமிப்பு வைப்புக் கணக்கு போன்ற கணக்குகள் பேணப்படுகின்றன.**

➢ **HNB யில் வைப்புக் கணக்கு ஒன்றைத் திறப்பதற்கு பராயமடையாதோர் ஆளுகின்ற விதிகள்.**

1. பராயமடையாத ஒருவருக்கான சேமிப்புக் கணக்கு ஒன்று வங்கியால் ஊற்கத் தகுந்த ஒருவரினால் திறக்கப் படலாம்.

2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பராயமடையாதோரின் கூட்டுப் பெயர்களில் அல்லது பராயமடையாத வரையும், வயது வந்தவரையும் உள்ளடக்கும் வகையில் கணக்குகள் திறக்கப்படமாட்டா

3. ஏதேனுமொரு பெயரில் ஒன்றுக்கு மேற்படாத சேமிப்புக் கணக்கென்று வழமையாகத் திறக்கப்படலாம்.

4. கணக்கொன்றைத் திறப்பதற்கான ஆகக் குறைந்த ஆரம்ப வைப்பு 50/=க்கு குறையாது இருத்தல் வேண்டும். அத்துடன் அடுத்துப் பின்வரும் ஒவ்வொரு வைப்பும் 05/= வுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.

5. திறக்கப்படும் ஒவ்வொரு கணக்கிற்கும் கட்டணமின்றி சேமிப்புப் புத்தகமொன்று வழங்கப்படும். அத்துடன் மூலச் சேமிப்புப் புத்தகத்தின் தொடர்ச்சியாக வழங்கப்படும் ஏதேனும் புத்தகத்துக்குக் கட்டணமெதுவும் அறவிடப்படமாட்டாது.

➢ **HNB இல் நிலையான வைப்புக்கணக்கொன்றைத் திறப்பதற்குப் பயன்படுத்த வேண்டிய விதிகளும், நிபந்தனைகளும்.**

1. வைப்பின் நடப்புக்காலத்தின் போது ஆரம்பத்தில் இடப்பட்ட வைப்பாயிருந்தாலும் அல்லது பின்னர் இடப்பட்ட வைப்பாயிருந்தாலும் இடப்பட்ட வைப்பாய் இருந்தாலும் அவ்வைப்புத் தொகையினையோ அல்லது அதன் ஏதேனும் பகுதியையோ விடுவிப்பதற்கு வங்கியின் தரப்பில் எதுவிதக் கடமைப்பாடும் கிடையாது என்பதனை விளங்கிக் கொள்ளப்படுகிறது. அழைப்பு வைப்புக்கள் மீளப் பெறுவதற்குக் குறைந்தபட்சம் 07 நாட்கள் முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

2. வைப்புத்தொகை முதிர்வடையும் திகதிக்குப் பின்னர் வட்டி எதுவும் சேர்க்கப்படமாட்டது.

➢ HNB இல் சிறந்த அடகு வைக்கும் வசதி வழங்கப்படுகின்றது. அடகு வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க நகைகளுக்கு ஆகக் கூடிய கடன் மற்றும் கை நிறைய வெகுமதிகள வழங்கப்படுகின்றன. இதற்காக HNB இல் 24 கரட தங்க நகைகளுக்கு ரூ2700/= உம் 22 கரட் தங்கநகைகளுக்கு ரூ 18750/= உம் வழங்கப்படுகின்றது. இதற்காக HNB இல் ஆகக் குறைந்த மாத வட்டிவீதம் 1.58% ஆகும்.

➢ HNB இல் Money Gram (Internationl Money Transfer) மிகப் பெரும் சேவையை ஆற்றுகின்றது. இந்த Money Gram இன் மூலம் அனுப்பப்படும் பணத்தை வாடிக்கையாளர்கள் இலகு வாகப் பெற்றுக் கொள்ளலாம். இரு சிறப்பான பணப் பரிமாற்றலுக்கு உதவுகின்றது.

➢ HNB இன் Pathm Vimana நாளாந்த பணச் சீட்டிழுப்பின் மூலம் வாடிக்கை யாளர்கள் சிறப்பான பணப் பரிசிலகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

## தேசிய சேமிப்பு வங்கி (NSB)

➢ NSB இல் நிலையான் வைப்புக் கணக்கு, சேமிப்புவைப்புக் கணக்குகள் போன்றன பேணப்படுகின்றன.

➢ NSB இன் 3 மற்றும் 5 வருட நிலையான வைப்புக் கணக்குகள் பற்றிய விபரங்கள்.

1. அதிக வட்டியைத் தரும் நீண்டகால வைப்புக்கணக்கு
2. முதிர்வின் பின்னர் வைப்புப்பணமும், வட்டியும் உங்களின் கையில் கிடைக்கப் பெறும்.
3. வைப்புக்கும், வட்டிக்கும் 100% அரச உத்திரவாதம்
4. சேமிப்புத் தொகைக்கேற்ப உடனடிகடன் வசதி
5. நியமனந்தா் ஒரு வரை நியமிக்கும் வசதி.
6. சா்வதேச /பிச்ரேட்டிங் AAA (lk) தரப்படுத்தலைத் தொடா்ச்சியாக 6வது தடவையாகவும் பெற்றுள்ள ஒரேயொரு தேசிய வங்கி என்ற பெருமை.

➢ **NSB இன் Happy Savings முறை/ கணக்குப் பற்றிய விபரங்கள்**

1. வைப்புக்களுக்கு அதி கூடிய வட்டி
2. ரூ 1000000/= பெறுதியான ஆயுள் காப்புறுதி
3. நிதி ஸ்திர தன்மைக்கு AAA (lka) தரச்சிறப்பை தொடா்ச்சியாக 6முறையும் பெற்ற இலங்கையின் ஒரே வங்கி
4. சுய தேவைக்கடன்கள் மற்றும் வைப்புக்களுக்கு எதிரான கடன் வசதிகள்
5. பணவைப்புப் புத்தகங்களுக்குப் பதிலாக கணக்குக் கூற்றுகள்
6. இலவசமான ATM அட்டை
7. கட்டுப்பாடற்ற மீளப்பெறல்கள்
8. குறைந்த பட்ச வைப்பாக ரூ1000/+ உடன் இக்கணக்கினை ஆரம்பிக்க முடியும்.

➢ **NSB** இல் உருவாக்கப்பட்ட புஞ்சி ஹப்பன் சிறுவர் சேமிப்புக் கணக்கு சிறுவர்களுக்கு உகந்ததாகக் காணப்படுகின்றது. இக்கணக்கை ஆரம்பிக்கும் வழிமுறை

1. 7 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கான கணக்கை அப்பிள்ளையின்தாய் அல் லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பன் ஆரம்பிக்க முடியும். அவர்களால் ஆரம்பிக்க முடியாத பட்சத்தில் பாட்டா, பாட்டியோ இல்லது சட்டபூர்வ பாதுகாவலரோ இக்கணக்கை ஆரம்பிக்க முடியும்.

2. 7 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் தாமாகவே இக்கணக்கை ஆரம்பிக்கமுடியும், எனினும் அவர்கள் அவ்வாறு செய்ய விரும்பாவிடின் புஞ்சி ஹப்பன் கணக்கிற்கான வழிமுறையைப் போல தாய், தகப்பனோ, பாட்டா, பாட்டியோ அல்லது சட்டபூர்வ பாதுகாவலரோ அவர்கள் சார்பில் கணக்கை ஆரம்பிக்கலாம்.

3. கணக்கு பாதுகாவலர் மூலம் ஆரம்பிக்கப்படுமாயின் கணக்கின் உரிமையாளரான பிள்ளைக்கு 16 வயதாகும் வரை பாதுகாவலர் கணக்கைச் செயற்படுத்த வேண்டும்.

4. ஹப்பன் கணக்கைத் தாமாகவே ஆரம்பிக்கும் பிள்ளைகள் அக்கணக்குச் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களைத் தாமாகவே மேற்கொள்ளமுடியும்.

### ➢ NSBயினூடாக சம்பளக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள்

தங்கள் ஊழியர்களது வேதனக் கொடுப்பனவை NSB இன் வங்கிக் கிளையினூடாக மேற்கொள்வதன் மூலம் ஊழியர்கள் தமது தேவைக்கேற்ற வகையிற் பணத்தைப பெற்றுக் கொள்ள முடிவதுடன் அவர்களுடைய சேமிப்புப் பழக்கமும் ஊக்குவிக்கப்படுகின்றது.

அத்துடன் தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்படுகின்ற பின்வரும் சலுகைகளையும் பெற்றுக்கொள்ள உரித்துடைய வராகின்றனர்.

1. சேமிப்புக் கணக்குகளுக்குத் தன்னியக்க இலத்திரனியல் இயந்திர அட்டைகள் (ATM Card) வழங்கப்படும் போது எவ்விதமான கட்டணமும் அறவிடப்படுவதில்லை.

2. ATM அட்டையின் ஊடாக பணம் மீள எடுத்தல்களை மேற்கொள்ளும் போது எவ்விதக் கட்டணமும் அறவிடப்படுவதில்லை.

3. ATM அட்டையின் ஊடாக ஒரு சந்தர்ப்பத்தில் 40000/- வரை பெற்றுக் கொள்ளமுடியும்.

4. வங்கி விடுமுறை நாட்களிலும் கூட ATM அட்டையினூடாகச் சேமிப்புக்கணக்குகளுக்கு வைப்புக்களை மேற் கொள்ள முடியும்.

5. ஊழியர்களது ஊழியக் கொடுப்பனவுகள் எமது வங்கிக் கிளைக்கு மாற்றப்படுவதன் மூலம் தனிநபர் கடன்களை (personal Loan) இலகுவாகப்பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை அவர்கள் பெறுகின்றனர்.

6. தேசிய சேமிப்பு வங்கியில் ஆரம்பிக்கப்படும் கணக்குகள் 100% அரசாங்க உத்தரவாதம் உடையவை.

**உசாத்துணை நூல்கள்**

வங்கிகளுக்கு நேரடியாகச் சென்று நேர்காணல் முறை மூலம் வங்கிகளின் வைப்புக்கள் தொடர்பான விபரங்களை அறிந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வரவு செலவுத் திட்டம் 2009
# ஒரு கண்ணோட்டம்

வ.சோபா
13 Com[B]

குறித்த ஒரு பொருளாதாரம் எதிர் வரும் ஆண்டில் தனக்கு கிடைக்குமென எதிர்பார்க்கின்ற வருமானத்தையும் அதற்கான வழிமுறைகளையும் முற்கணிப்புச் செய்து நிதி அமைச்சரால் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நடைமுறைக்குட்படுத்தப்படும் ஓர் அறிக்கையே அரச வரவு செலவுத் திட்டம் என்பர்.

## வரவு செலவுத் திட்டத்தின் குறிக்கோள்கள்

➢ அரசாங்கம் பொதுப்பண்டங்களினை உற்பத்தி செய்து வழங்குதல் வேண்டும். பொதுப் பண்டம் என்பது பொதுவாகத் தனியார் துறையினரால் உற்பத்தி செய்து வழங்கப்படாத பண்டங்களை உற்பத்தி செய்து வழங்குதல் வேண்டும்.

Eg:- பாலம் அமைத்தல்
வீதி அமைத்தல்
சூழல் பாதுகாப்பு

- மேன்மைப் பண்டங்களான ( Merid Goods ) கல்வி, சுகாதாரம், போஷாக்கு வசதிகளை இலவசமாக வழங்குதல் வேண்டும்.
- பேரினப் பொருளாதார உறுதி நிலையை ஏற்படுத்தல் வேண்டும். அதாவது விலை உறுதிப்பாட்டை மேற்க்கொளவதுடன் சென்மதி நிலுவைச் சமனிலையை ஏற்படுத்தி நாணய மாற்று வீதத்தை உறுதியாக வைத்திருத்தல் வேண்டும்.
- பொருளாதார சமமின்மை or வருமான ஏற்றத் தாழ்வை இயன்றவரை குறைத்து வருமான சமனிலையை ஏற்படுத்தல்.
- அரசாங்கம் தனியார் துறையினரை ஊக்குவிப்பதுடன் உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல் வேண்டும்.
- பொருளாதாரத்தில் வேலையின்மையைக் குறைத்து வளங்களின் பயன்பாட்டை அதிகரித்து நிறை தொழில் மட்டத்தை ஏற்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொருளாதாரத்துக்கு இன்றியமையாத போக்குவரத்து, தொடர்பாடல், மின்சாரம், நீர்வழங்கல், துறைமுகம், விமான நிலையம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.
- பொருளாதாரத்தில் மொத்த உற்பத்தி வருமானம் என்பவற்றை அதிகரிக்கச் செய்வதுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கச் செய்து பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தியை ஏற்படுத்துதல் வேண்டும்.
- மேற்கூறிய இலக்குகளைக் கொண்டமைந்த அரச வரவு செலவுத் திட்டமானது நாட்டு மக்களுக்கும் பொருளாதாரத்திற்கும் சுபீட்சத்தை ஏற்படுத்தும் விதமாக அமையும்.

## இலங்கையின் வருமானக் கட்டமைப்பு

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம்

| | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|
| வரி அரசிறை | 14.6 | 14.2 | 14.7 | 14.8 |
| பெறுமதி சேர் வரி | 5.6 | 5.2 | 5.2 | 5.2 |
| காலால் தீர்வை | 3.2 | 2.7 | 2.5 | 2.4 |
| இறக்குமதித் தீர்வை | 1.8 | 2.0 | 2.3 | 2.3 |
| ஏனைய வரிகள் | 1.3 | 1.7 | 1.6 | 1.7 |
| வரியல்லா அரசிறை | 1.7 | 1.6 | 1.5 | 1.5 |
| மொத்த அரசிறை | 16.3 | 15.8 | 16.1 | 16.3 |

அரசின் இறைக்கொள்கையை அவதானிக்கும் பொழுது வரி அரசிறையானது கடந்த ஆண்டுகளை விடச் சிறிய அளவிலான அதிகரிப்பினையே காட்டுகின்றது. அதாவது மொத்த அரசிறையினது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.3% ஆக 2009ம் ஆண்டு காணப்படலாம் என எதிர்வு கூறப்பட்டது. இப்பங்களிப்பு 2006 தொடக்கம் 2008 வரையும் ஏறத்தாழ 16% மாகவே காணப்பட்டது. இவ்வாறு வரி அரசிறையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 14 -15% மாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வரி வருமானத்தில் நேரில் வரியின் பங்களிப்பானது முதன்மை வாய்ந்ததாகவும் ஒப்பீட்டு ரீதியில் வருமான வரியின் பங்களிப்பு மிகக் குறைவாகவுமே காணப்படுகின்றது. எனவே மறைமுக வரிகளானவை நாட்டில் பணவீக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரவு செலவுத்திட்ட செலவு மீதிகள்

| | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|
| நடைமுறைச் செலவீனம் | 18.6 | 17.4 | 17.4 | 16.0 |
| மொத்தச் செலவு | 24.3 | 23.5 | 23.0 | 22.8 |
| வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை | 8.0 | 7.7 | 7.0 | 6.7 |

2009ம் ஆண்டு திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.7% ஆக அமையுமென முன்மொழியப்பட்டது. இது 2006ம் ஆண்டு 8%தாலும் 2007ம் ஆண்டு 7.7% தாலும் குறைவானதாலும் அரசிறைச் சேமிப்பினை உயர்த்துவதன் மூலமும் நடைமுறைச் செலவு மூலதனச் செலவினை ஓரளவு கட்டுப்படுத்துவதன் மூலமும் அடையலாம். பாதீட்டின் தொடர்ச்சியான பற்றாக்குறை நாட்டின் விலை மட்டம், கடன் சுமை, முதலீடு போன்றவற்றில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்.

## பொருளாதார வளர்ச்சி வீதம்

| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | -1.5 | 4.0 | 5.9 | 5.4 | 6.2 | 7.7 | 6.8 | 6.5 | 6.5 |

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியினை அவதானிக்கும் பொழுது இவ்வளர்ச்சியானது ஒவ்வொரு ஆண்டுகளிலும் வேறுபட்ட சவால்களுக்கு உள்ளாக்கப்பட்டு அடையப்பட்டவையாகும். எனினும் 2001ம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது என்றும் இல்லாதவாறு - 1.5 என்ற எதிர்க் கணியப் பெறுமதியை வெளிப்படுத்தியது. இவ் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமான நிலையை அடைந்ததற்கு பிரதான காரணம் நாட்டில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் ஆகும். பின்னர் 2002ல் இருந்து 2005 வரை பொருளாதாரம் 4% திலிருந்து 5.9%மாக வளர்ச்சியடைய மீண்டும் 2004ம் ஆண்டு நிலவிய கடும் வரட்சியினால் பொருளாதாரம் 5.4% என சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்தது. ஆனால் 2005 காலப்பகுதியில் வெளிநாட்டு உதவிகள், கடன்கள் என இலங்கைக்கு அன்னியச் செலாவணி பெறப்பட்டதால் இலங்கை நாணயமானது மதிப்பேற்றம் பெற்றது.

2005 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் உலக சந்தையில் ஒரு பொருட்களின் விலைகளின் சடுதியான அதிகரிப்பால் இலங்கையின் இறக்குமதிச் செலவு மற்றும் உற்பத்தியைத் தொடர்ந்து பொருளாதாரத்தின் விலை மட்டம் உயர்வடைந்து செல்லும் வேகம் தூண்டப்பட்டது. இக்காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி வீதம் சராசரியாக 6-7.7% மாக வளர்ச்சியைப் புலப்படுத்தியது.

ஒரு பொருள் விலை அதிகரிப்பு 2008 யூலை மாதமளவில் பீப்பாய் ஒன்று 147 ஐக்கிய அமெரிக்க டொலராக இருந்தது. இது மீன்பிடி, போக்குவரத்து, உற்பத்தி, சேவைத்துறை என சகல துறையினரையும் அதிகளவு பாதித்தது எனலாம்.

## அரசின் வருமான முன்மொழிவுகள் - 2009

| முன் மொழிவுகள் | மில்லியன் ரூபா |
|---|---|
| பொருளாதாரச் சேவைக் கட்டணம் | 1000 |
| தனியார் வருமான வரி | (500) |
| பெறுமதி சேர் வரி | (45351) |
| உற்பத்தித் தீர்வை | 7000 |
| தேசக் கட்டுமான வரி | 15000 |
| துறைமுக விமான நிலைய அறவீடு | 24000 |
| இறக்குமதித் தீர்வை மற்றும் செஸ்வரி | 25000 |
| தொலைபேசி அறவீடு | 2500 |
| விசேட வியாபாரப் பொருள் அறவீடு | 1500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009ம் ஆண்டுக்கான வருமான வரியில் ஏற்படுத்தப்பட்ட முக்கியமான மாற்றங்கள் வருமாறு

○ வருமான வரி விதிப்பிற்கான வருமான எல்லையின் ஆகக் குறைந்த வருமான மட்டம் ஆண்டுக்கு 300,000 ரூபாவிலிருந்து 400,000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே வருமான வரி எல்லைகள் உயர்த்தப்பட்டமையானது பொதுவாக மக்களது செலவிடத்தக்க வருமானத்தை அதிகரித்துக் கொள்வதாக அமையும். எனவே முன்னரை விட அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரியின் அளவு குறைவடையும். ஆனால் அரசுவருமான வரி செலுத்துவோரின் அளவினை அதிகரிக்கச் செய்யும் என எதிர்பார்க்கின்றது. இதனால் தனிநபர் வருமான வரிச் சுமை நூற்றுக்கு சுமார் 5% த்தால் குறைவடையும்.

| 2009ம் ஆண்டுக்கான பாதீட்டின் புதிய வருமான வரி எல்லை | வரி வீதம் | நடைமுறையில் உள்ளது |
|---|---|---|
| 1வது 400000 | | 1வது 300000 |
| 2வது 400000 | | 2வது 200000 |
| 3வது 400000 | | 3வது 200000 |
| 4வது 500000 | | 4வது 200000 |
| 5வது 500000 | | 5வது 200000 |
| 6வது 500000 | | 6வது 500000 |
| மீதி | | மீதி |

- ○ செஸ் வரி அறிமுகம்
- ○ கோதுமை தானியம் இறக்குமதி வரி 6% - 10% வரை அதிகரிப்பு
- ○ தேயிலை, இறப்பர் இறக்குமதி மீது செஸ் வரியினை விதித்தல்.
- ○ கையடக்கத் தொலைபேசிக்கான 10% வரியினது நிலையான தொலைபேசிகளுக்கும் விஸ்த்தரிக்கப்படும்.
- ○ கடதாசி இறக்குமதிக்கு 5% செஸ் வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறக்குமதியாகும் விலங்கு,உணவுப் பண்டங்கள், மரக்கறி வகைகளுக்கு செஸ் வரியை அதிகரித்தல்.
- இறக்குமதியாகும் உப்புக்கு (Salt) 10% செஸ் வரி
- ஈ கிராமங்கள் உருவாக்கம் (E – Villege) அத்துடன் 2009ம் ஆண்டை நவீன தகவல் தொழில் நுட்ப விருத்தியாக்கல் ஆண்டாக முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

பொதுவாக வரவு செலவுத் திட்டத்தை நோக்குகின்ற பொழுது பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டிருப்பதுடன் பொது மக்களுக்கு வரிச் சலுகை, வரி விலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 337 மில்லியன் ரூபாவாக அல்லது தேசிய வருமானத்தில் 6.5%மாகப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பணவீக்கமானது எதிர் வரும் காலங்களில் குறைந்த மட்டத்தில் பேணப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொருளாதார வளர்ச்சியும் 6.5% என்ற வளர்ச்சி மட்டத்தை அடைவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

எரிபொருள், போக்குவரத்து, மின்சாரம், நீர் என்பவற்றுக்கான கட்டணங்கள் மற்றும் பெறுமதி சேர் வரி, வருமான வரிச் சலுகை, அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் என்பவற்றால் பொதுமக்கள் நன்மையடைவார்கள் எனவும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விடயங்கள் | 2007 | 2008 திருத்தப்பட்டது | 2009 |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 565.05 | 709.35 | 855.0 |
| வரி வருமானம் | 508.95 | 643.48 | 779.14 |
| வருமான வரி | 107.17 | 138.29 | 166.70 |
| பொருட்கள் சேவைகள் மீதான வரி | 328.60 | 346.74 | 464.78 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி | 73.17 | 108.44 | 147.66 |
| வரியல்லா வருமானம் | 56.10 | 65.87 | 75.86 |
| மொத்த செலவீனம் | 841.60 | 1016.70 | 1991.62 |
| ------ | 622.76 | 743.39 | 823.51 |
| ஆளுக்குரிய வேதநாதிகள் | 214.16 | 243.89 | 268.36 |
| வட்டி | 182.68 | 215.93 | 250.44 |
| உதவு தொகைகளும் மாற்றல்களும் | 147.45 | 170.41 | 196.02 |
| ஏனைய பொருட்களும் சேவைகளும் | 78.47 | 113.16 | 108.70 |
| அரச முதலீடுகள் | 229.27 | 278.19 | 370.77 |
| ஏனையவை | (10.43) | (4.88) | (2.61) |
| வருமான மிகை (+)/ குறை (-) | (57.17) | (34.04) | 31.49 |
| வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை | 276.55 | 307.35 | 366.67 |
| மொத்த நிதியிடல் | 276.55 | 307.35 | 336.67 |
| மொத்த வெளிநாட்டு நிதியிடல் | 131.41 | 127.78 | 153.55 |
| தேறிய வெளிநாட்டு கடன்பாடுகள் | 100.91 | 97.73 | 123.02 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 165.02 | 189.04 | 222.52 |
| படுகடன் மீள் கொடுப்பனவுகள் | 64.12 | 91.32 | 99.50 |
| வெளிநாட்டுக் கொடைகள் | 30.51 | 25.06 | 30.53 |
| மொத்த உள்நாட்டு நிதியிடல் | 145.14 | 184.57 | 183.13 |
| தேறிய வங்கியல்லாக் கடன்பாடுகள் | 111.31 | 158.57 | 165.63 |
| தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் | | | |
| உள்நாட்டுக் கடன்பாடுகள் | 3.40 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தேறிய வங்கிக் கடன்பாடுகள் | 12.37 | | |
| ஏனையவை | 18.06 | 25.70 | 17.50 |
| அரசிறை / மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் | 15.8 | 16.00 | 16.40 |
| வரி,அரசிறை மொத்த உ.உ % | 14.2 | 14.60 | 14.90 |
| செலவீனம் % மொத்த உ.உ % | 23.5 | 23.00 | 22.80 |
| நடைமுறைச் செலவீனம் மொ.உ.உ % | 17.4 | 16.80 | 15.80 |
| அரச முதலீடு மொத்த உ.உ % | 6.4 | 6.30 | 7.10 |
| வருமானப் பற்றாக்குறை (-) மிகை (+) | 1.6 | (0.8) | 0.60 |
| மொத்த உ.உ % | | | |
| வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை / மொத்த உ.உ % | 7.7 | 7.0 | 6.50 |

உசாத்துணை :-

உதயன் பத்திரிகை

**இலத்திரனியல் சந்தை (Electronic Market) என்றால் என்ன?**

கொள்வனவாளரும் விற்பனையாளரும் கணனியையும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தையும் நடுவராக கொண்டு தகவல்களை பரிமாற்றி அவற்றின் அடிப்படையில் இடம்பெறுகின்ற பரிமாற்ற நடவடிக்கைகள் அடங்கியது இலத்திரனியல் சந்தை ஆகும். இச்சந்தைக்கென இடம் ஒன்று இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியம்
## International Monetary Fund

து.நிசாந்தி
2010 com A

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து சர்வதேச சமூகத்தினுள் சக வாழ்வை வளர்த்தல் மற்றும் உலகப் பொருளாதார மீளுயிர்ப்பைக் கட்டியெழுப்புதல் ஆகிய வற்றின் பொருட்டு கலந்துரை யாடல்கள் நடைபெற்றன. 1944 ஜூலை மாதத்தில் ஐக்கிய அமெரிக்காவின் நியூஹெம்ப்ஷயர் மாநிலத்தின் பிரிட்டன்வூட் நகரத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் நாணய மற்றும் நிதியியல் தொழிற்பாடுகள் மாநாடு இவற்றில் முக்கியத்துவம் வகிக்கிறது. இங்கு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு போன்ற நிறுவனங்கள் உருவாகுவதற்கு அத்திவார மிடப்பட்டது. இதில் உலக வர்த்தக அமைப்பு தவிர்ந்த ஏனைய இரண்டு நிறுவனங்களையும் 1945ம் ஆண்டினுள் உருவாக்குவதற்கு இயலுமாயிருந்தமை இம் மாநாட்டின் வெற்றியை சிறப்பாக எடுத்துக் காட்டுவதாயுள்ளது. இதனால் பிரிட்டன் வூட் மாநாட்டின் மூலம் உருவாகிய நிறுவனங்களை "பிரிட்டன் வூட்" நிறுவனங்கள் என அழைப்பதற்குச் சிலர் முன்வந்தனர்.

1945 டிசெம்பர் மாதம் 27ம் திகதி 29 அங்கத்தவர்களுடன் சர்வதேச நாணய நிதியம் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் அதன் தொழிற்பாடுகள் 1947 மார்ச் மாதம் 01ம் திகதியே ஆரம்பமாகியது. அங்கத்துவ நாடுகளின் மூலமே மூலதனம் பெறப்படுகின்றது. இதனை அங்கத்துவ நாடுகளின் "அனுமதிப் பங்கு" எனக் குறிப்பிடுகின்றோம். அனுமதிப் பங்கின் அளவினைப் பொறுத்து அங்கத்துவ நாட்டிற்கான வாக்களிப்புரிமை தீர்மானிக்கப்படுகின்றது. அனுமதிப் பங்கானது இதன் அங்கத்துவ நாட்டின் பொருளாதார மட்டத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. இதற்கு குறிப்பிட்ட அங்கத்துவ நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி நடைமுறைக் கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் நாட்டின் அலுவல் சார் ஒதுக்குகள் என்பவையே கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

2003ம் ஆண்டின் படி சர்வதேச நாணய நிதியத்தின் அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை 184 ஆகும். இவற்றில் மிகப்பெரிய அனுமதிப்பங்கு ஐக்கிய அமெரிக்காவுக்கே உள்ளது. இது சி.எ.உ. (SDR) 37149.3 மில்லியன் ஆகும். மிகச் சிறிய அனுமதிப் பங்கு பலாவு (Palau) என்ற பிலிப்பைன் தீவுக்குப் பக்கத்திலுள்ள சிறியதொரு நாட்டுக்கே உரித்தாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சி.எ.உ 3.1 மில்லியனாகும். இலங்கையின் அனுமதிப் பங்கு சி.எ.உ. 413.4 மில்லியனாகும். (ஐ.அ.டொலர் 567மில்லியன்) ஒவ்வொரு அங்கத்துவ நாட்டிற்கும் 250 வாக்குகள் உரித்தாகுகின்றன. ஆயினும் இதற்கு மேலதிகமாகவுள்ள தனது அனுமதிப் பங்கிலுள்ள ஒவ்வொரு சி.எ.உ 100000க்கும் மேலுமொரு வாக்குரிமை கிடைக்கின்றது. இதன்படி ஐக்கிய அமெரிக்காவுக்கு உரித்தாயுள்ள வாக்குகளின் எண்ணிக்கை 37174 ஆகும். பலாவு நாட்டுக்கு உரித்தாயுள்ள வாக்குகளின் 281 ஆகும். இலங்கைக்கு உரித்தாயுள்ள வாக்குரிமை 4384 ஆகும். இப் புள்ளி விபரங்கள் 2003 ஜனவரி மாத இறுதியிலிருந்த நிலமையாய் இருந்நதோடு அத்தருணத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் மொத்த அனுமதிப் பங்கு சி.எ.உ 213 பில்லியனாகும். இது ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர்களில் 293 பில்லியனாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேரவை ஆளுநர்கள் சபை (Board of Governors) என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு தடைவ கூடுகின்ற இச் சபையில், குறிப்பிட்ட அங்கத்துவ நாடுகளின் நிதி அமைச்சர்கள் அல்லது மத்திய வங்கி ஆளுநர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். இதற்கு கீழால் சர்வதேச நாணய மற்றும் நிதித் தொழிற்பாடுகளுக்கான குழு (International Monetaty and Financial Committee) என மேலுமொரு சபை உள்ளது. ஆயினும் நிதியத்தின் நாளாந்த தொழிற்பாடுகள் தொடர்பான பொறுப்பை 24 பேர்களைக் கொண்ட நிறைவேற்றுச் சபையே ஏற்றுள்ளது. பொதுவாக இவர்கள் வாரத்திற்கு மூன்று நாட்கள் அமர்வுகளை நடத்துவார்கள். 140 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் ஏறத்தாழ 2650 பணியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்தில் பணிபுரிகின்றனர்.

## நோக்கங்கள்

சர்வதேச நாணய நிதியம் உருவாக்கப்பட்ட யாப்பை உடன்படிக்கை வாசகங்கள் (Articks of Agreement) என அழைக்கிறோம். முதலாவது வாசகத்தில் அதன் நோக்கங்கள் காணப்படுகின்றன. அவையாவன:-

1. சர்வதேச நாணயத் தொழிற்பாடுகளின் போது மதியுரைச் சேவைகளையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்ற நிலையான தொரு நிறுவனமாக இருந்து சர்வதேச நாணயத் தொடர்புகளை வளர்த்தல்.
2. சர்வதேச வர்த்தகத் தொழிற்பாடுகளை சமநிலையுடன் விஸ்தரிப்பதற்கான வசதிகளை வழங்குவதன் மூலம் தொழில் நிலையையும் உண்மை வருமானத்தையும் மேம்படுத்துதலும் உயர் மட்டத்தில் பேணி வருதலும் இதன்படி தனது பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோள் களாக அனைத்து அங்கத்துவர்களினதும் உற்பதி வளங்களை மேம்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஒழுங்கான விதத்தில் செலாவணிப் பரிமாற்றத்தொழிற்பாடுகளைப் பேணி வருதலும் போட்டி நிலையிலான வெளிநாட்டுச் செலாவணித் தேய்மானத்தை நீக்குவதன் மூலம் செலாவணி நிலைத்திருக்கும் தன்மையை வளர்ச்சி யடையச் செய்தலும்.

4. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் நடைபெறுகின்ற நடைமுறைப் பரிமாற்றங்களின் போது பல்துறைக் கொடுப்பனவு முறையை நிறுவுவதற்கு உதவியளித்தலும் உலக வர்த்தகத் தொழிற்பாடுகளுக்கு தடையாயுள்ள வெளிநாட்டு நாணய பரி மாற்றங்களுக்கான இடையூறுகளை நீக்குதலும்.

5. சர்வதேச சுபீட்சத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாத நடவடிக்கைகளை மேற்கொள் வதன் மூலம் தனது சென்மதி நிலுவையின் குறைச் சீராக்கங்களைத் திருத்தி கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு தனது அங்கத்துவ நாடுகளுக்குத் தற்காலிகமாகத் தேவைப்படுகின்ற நிதியங்களைப் போதிய பாதுகாப்பின் கீழ் வழங்குதல்.

6. மேற்குறிப்பிட்டவாறு அங்கத்துவ நாடுகளுக்கிடையே உருவாகின்ற சர்வதேச சென்மதி நிலுவைச் சமமின்மைகளை மிகக் குறுகிய காலத்தினுள் குறைத்துக் கொள்வதற்காகச் செயலாற்றுதல்.

## பணிகள்

மேற்படி குறிக்கோள்களுக்கு ஏற்ப தொழிற்படுவதன் மூலம் முடியுமான அளவு இலகுவாக உலக பொருளாதாரத்தைப் பேணி வருதலும், பொருளாதார மற்றும் நிதியியல் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதும், அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது தனது அங்கத்துவ நாடுகளுக்கு உதவியளித்தலும் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் நடைபெறுகின்றது. இதன்படி அதன் தொழிற்பாடுகள் பின்வரும் துறைகளின் ஊடாக நிறைவேற்றப் படுகின்றன.

- ➢ ஏதேனுமொரு அபாய நிலையைக் காணக் கூடியதாக இருப்பின் தேசிய பொருளாதாரத்தையும் சர்வதேச பொருளாதாரத்தையும் உரிய விதத்தில் பேணி வரும் பொருட்டு அவசியமான மதியுரைகளை வழங்குதல்.
- ➢ நிறுவனத்தின் 50 வருடகால அனுபவத்தைப் பயன்படுத்தி தனது அங்கத்துவ நாடுகளின் பொருளாதார கொள்கைகளைத் தயாரித்துக் கொள்வதற்கும் அவற்றின் தரத்தைப் பேணி வருவதற்குமான மதியுரைகளை வழங்குதல்.
- ➢ சிறந்த பண்புகளைக் கொண்டதாக வங்கி மற்றும் நிதியியல் தொழிற்பாடு களுக்கான சட்ட ஒழுங்குமுறைகளைப் பேணி வருவதற்கு மதியுரைகளை வழங்குதல்.
- ➢ திடீர் நிதியியல் பிரச்சினைகளின் போது தற்காலிக கடன் வசதிகளை அங்கத்துவ நாடுகளுக்கு வழங்குதலும் நீண்டகாலப் பொருளாதாரப் பிரச்சினைகளின் போது நிதியியல் வசதிகளை வழங்குதலும், பொருளாதாரச் சீர்திருத்தகங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்வதன் மூலம் தீர்வுகளைக் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தலும்.

➢ தனது அங்கத்துவ நாடுகளுக்குத் தொழில் நுட்ப ஒத்துழைப்பை வழங்குதலும் அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளித்தலும்.

➢ அங்கத்துவ நாடுகளுக்கிடையே அரச நிதி, வெளிநாட்டு நிதி, தேசிய கணக்குகள் போன்ற துறைகள் தொடர்பாக தர நியமங்களைத் தயாரித்தலும், அதற்கேற்ப தகவல்களை வெளியிடுதல் மூலம் பரஸ்பர புரிந்துணர்வையும் கல்வியையும் நாடுகளுக்கிடையே பகிர்ந்தளித்தலும்.

இன்று உலகின் பலம் பொருந்திய பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் உட்பட அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியமானது உலக பொருளாதாரத்தில் கூடுதலான செல்வாக்கைச் செலுத்தக் கூடியதாகவுள்ள ஒரு நிறுவனமாகும் என குறிப்பிடலாம். குறிப்பாகப் பொருளாதார ரீதியில் பலம் பொருந்தியதாயிராத நாடுகள் மீது செலுத்தக் கூடிய செல்வாக்கு அதிகமாகும். உலகை ஊடறுத்துச் செல்கின்ற பலவேறான அரசியல் சூறாவளிகளுக்குத் தாக்குப்பிடிக்கும் ஆற்றலும் அதற்கு உள்ள தென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 2008ம் ஆண்டறிக்கையின் படி வங்கியானது இலங்கை அரசின் முகவராகத் தொழிற்படுவதனைக் காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றது. 2008ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின் படி பன்னாட்டு நிதியத்துடனான அனுமதிப்பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப்பங்கிற்காக பன்நாட்டு நாணய நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகின்றது. பன்னாட்டு நாணய நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாக கணிக்கப்படுகின்றன. பன்நாட்டு நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு ஐந்தொகைத் திகதியாலுள்ள செலாவணி வீதத்தைப் பிரயோகித்து பன்நாட்டு நாணய நிதிய சொத்துக்களினதும், பொறுப்புகளினதும் மீள் பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான நிலுவைகள் ஏனைய அனைத்து கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன. 2008ம் ஆண்டின் படி இலங்கையின் சிறப்பு எடுப்பனவு உரிமை 171. 2440 ஆகும்.

உசாத்துணை நூல்கள்
2003 ஜீலை குறிப்பேடு
2008ம் ஆண்டு மத்திய வங்கி ஆண்டறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையினை நவீன மயப்படுத்துதல்

பா.காமதேனு
2010 Arts[B]

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார அமைப்பிலும் முக்கிய இடத்தை வகிப்பது வங்கியமைப்பாகும். இவ்வங்கியமைப்பில் நடு நாயகமாகவும் அரச நிதிநிறுவனம் ஆகவும் விளங்குவது மத்திய வங்கியாகும். வங்கியமைப்பில் மத்தியவங்கியானது தீர்வையகமாக செயற்பட வேண்டியது சட்டரீதியான எதிர்பார்ப்பாகும்.

காசோலைத் தீர்வையகம் முதன் முதலில் லண்டனில் 1833ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. எமது நாட்டில் காசோலைத் தீர்வையகம் 1950 ஆண்டிற்கு முன்பாக இந்தியன் இம்பீரியல் வங்கியால் ஆரம்பிக்கப்பட்டாலும் 29. 08. 1950 அன்று இலங்கை மத்திய வங்கிக்கு காசோலைத்தீர்வையகம் வழங்கப்பட்டது.

நாட்டில் உள்ள பல வங்கிகளுக் கிடையில் உருவாகுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் மத்தியவங்கியில் வணிக வங்கிகளினால் நடை முறைப் படுத்தப்படும் கணக்குகள் மூலமாக தீர்க்கப்பட்டன. இவ்வாறு காசோலைத் தீர்வை மூலம் இலங்கை மத்திய வங்கி தீர்வையகமாக தொழிற்பட்டது. காசோலை களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து சென்றமையினாலும் வங்கிகளின் செயற்பாடுகள் பல கணனிமயப் படுத்தப் பட்டமையினாலும் காசோலை தீர்வு முறையாக கணனி மயப்படுத்தப்பட்ட காசோலை தீர்வு முறையைத் கணனிமயப் படுத்த மத்திய வங்கி தீர்மானித்தது. 02. 03. 1988 அன்று மத்திய வங்கியினால் ஏனைய வணிக வங்கிகளின் ஒத்துழைப் புடனும் ஸ்ரீலங்கா தன்னியக்க தீர்வையகம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் நிதியியல் உட்கட்டமைப்பின் அபிவிருத்தியில் ஒரு முக்கிய கட்டமாக லங்கா செட்டில் முறைமை 2003/ 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. லங்கா செட்டில் முறைமை பாரிய பெறுமதி வாய்ந்த மற்றும் நேரமுக்கியதத்துவம் வாய்ந்த கொடுப்பனவு களை தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிக் கின்ற அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை மற்றும் அரச பிணையங்களது கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்யும் வசதியை வழங்கும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையமாகும். அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசோலையானது தீர்ப்பனவு மற்றும் அரச பிணையங்களுடன் தொடர்புபட்ட சந்தா கொடுக்கல் வாங்கல்களின் கொடுப்பனவுகள் போன்றவற்றினால் எழுகின்ற வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவு கட்டுப்பாடுகளின் தீர்ப்பனவிற்கும் ஆதரவளிக்கின்றது.

வர்த்தக வங்கிகள் வெளிநாட்டு வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கும் சுவிப்ற் வலையமைப்பைப் பயன்படுத்துகின்றன. உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்புசங்கம் சுவிப்ற் வலையமைப்பு முறைமையை வழங்கு கின்றது. இது கொடுக்கல் வாங்கல் செய்யும் தரப்பினர்களிடையே பாதுகாப்பான விதத்தில் கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தகவலுக்கான முன்னேற்ற மடைந்த தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தும் உலகளாவிய நிதியியல் செய்திக்கான வலையமைப்பாகும்.

லங்காசெட்டில் முறைமை தொடர்ச்சியாக கிடைக்கக் கூடியதாக விருப்பது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் உறுதித் தன்மைக்கும் அதன் மூலம் நாட்டின் நிதியியல் முறைமையின் உறுதித் தன்மைக்கும் இன்றியமையாததாகவுள்ளது. தொழிற் பாட்டாளராக மத்திய வங்கி லங்கா செட்டில் முறைமைக்காக முழுமையான தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தினை தயாரித்ததுடன் அனர்த்த மீட்புத் தலத்தையும் நிறுவியது.

ஒரு சுவிப்ற் வலைப்பின்னலினூடாக அனர்த்த மீட்புத் தலங்களுக்கான சுவிப்ற் வலையமைப்பு இணைப்பை வழங்குவது உள்ளடங்கலான சுவிப்ற் இணைப்பு முகாமைத்துவம் மற்றும் தர செய்முறைப்படுத்தல் பணிகளை சுவிப்ற் உடன் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவன மாகும். வினைத்திறன் மற்றும் பேணிக் கொள்வதிலான வசதி போன்றவற்றின் தொடர்பில் சுவிப்ற் பணியாக மாதிரி தற்பொழுது சுவிப்ற்றினால் ஊக்குவிக்கப் படுகின்றது.

லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களான வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் மத்திய வங்கி போன்றவற்றினால் முழுமையாக உடமையாக்கப்பட்டதுமாக வரையறுக்கப்பட்ட லங்கா நிதியியல் சேவைகள் பணியகம் 2007 யூனில் ஸ்தாபிக்கப்பட்டு 2008 பெப்ரவரியில் இருந்து தொழிற்பாட்டில் உள்ளது. லங்கா நிதியியல் சேவைகள் பணியகம் ஆசியாவில் நிறுவப்பட்டதும் தொழிற்பாட்டிற்கு வந்ததுமான பதினாறாவது சுவிப்ற் சேவைப் பணியகமாகும். லங்கா நிதியியல் சேவைப் பணியகத்தை நிறுவியமை மத்திய வங்கியினதும் இலங்கை சுவிப்ற் பாவனையாளர் குழு போன்றவற்றினால் ஒன்றிணைந்து கையாளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிப்ற் இணைப்பினை தனித் தனியாக பேணிக்கொள்வதுடன் தொடர்புபட்ட பல்வேறு செலவீனங்களாக வன்பொருள் மற்றும் மென்பொருட்களை கொள்வனவு செய்வதுடன் தொடர்புபட்ட மூலதனச் செலவீனங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் உள்ளடங்கலான செலவீனங்கள் சுவிப்ற் வலையமைப்பை முகாமை செய்யும் அர்ப்பணிக்கப்பட்ட தொழில் நுட்ப ஆளணியை வேலைக் கமர்த்தும் செலவீனங்கள் முறைமையின் ஒருங்கிணைப்புச் செலவுகள் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப திறமைகளை இடமாற்றுகின்ற செலவு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் லங்கா நிதியியல் சேவைகள் பணியகத்தின் பணியினைப் பயன்படுத்து வதன் மூலம் சுவிப்ற் வலையமைப்பின் செயற்படா நேரத்தைக் குறைத்துக் கொள்ளலாம். லங்கா நிதியியல் சேவைகள் பணியகம் வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் தமது முக்கிய வியாபாரத் துறைகளில் பணிபுரிவதற்கான சுதந்திரத்தை வழங்குகின்ற அதே வேளையில் கணிசமானளவு செலவீனச் செலவு சிக்கனங்களின் மூலம் நன்மையாகிறது. இத்தகைய அனுகூலங்கள் நிதியியல் துறையின் மேலதிக அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2008 டிசம்பர் 31ம் நாளில் உள்ளவாறு வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் உள்ளடங்கலான 21 பங்கேற்கும் நிறுவனங்கள் லங்கா நிதியியல் சேவைப் பணியகத்துடன் இணைந்து சுவிப்ற் வலையமைப்பின் ஒரு நுழைவாயிலாக லங்காநிதியியல் சேவைப் பணியகத்தை பயன்படுத்துகின்றன. இலங்கை மத்திய வங்கியும் லங்கா நிதியியல் சேவைப்பணியகத்தினொரு அங்கத்தவராகும். உள்நாட்டு சுவிப்ற் சேவைகள் பணியகம் நிறுவப்பட்டமை. இலங்கை மத்திய வங்கியினதும் தேசியக் கொடுப்பனவுகள் சம்மேளத்தினதும் 2008ற்கான வழிகாட்டலில் அடையப்பட்டதொரு மைல்கல்லாகும்.

உசாத்துணை :-
மத்திய வங்கி ஆண்டறிக்கை 2008
தினக்குரல் (11.10.2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கங்கள்

ஜெ.கவிதா
2010 com[A]

பங்குச் சந்தை நிலையில்லாமல் மேலும் கீழும் ஊசலாடும் தன்மையுடையது. சொல்லப் போனால் அந்த ஊசலாட்டமே சந்தையின் உயிர்த் துடிப்பாகும். அது இல்லாமல்ப் போனால் என்ன பரபரப்பு (Thrill) இருக்க முடியும்? இந்த ஏற்ற இறக்கங்களே பங்குச் சந்தையின் மிக முக்கிய பண்பாகும். இந்த ஏற்ற இறக்கங்கள் எதன் அடிப்படையில் உருவாகின்றன தெரியுமா?

❖ நாட்டில் நிலவும் அரசியல் / பொருளாதாரச் சூழ்நிலைகள் (நிதி நிலை அறிக்கை வெளியிடப்படல், வரவு செலவுத்திட்டம் [Budget])

❖ மத்திய வங்கி / நிதி அமைச்சகம் கொண்டு வரும் சில நெறி முறைகள் / கட்டுப்பாடுகள் அல்லது சில விதி முறைகள் விலக்கப்படுதல் (தொழிற் கொள்கை குறித்த அறிவிப்புக்கள், வெளிநாட்டு முதலீட்டுக்கான சட்ட திட்ட வரவுகள்) முதலியன.

❖ உலக சந்தையில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் மாற்றங்கள் (அமெரிக்க வங்கிகளின் மோசமான நிலைமை, உலகப் பொருளாதாரத் தொய்வு)

❖ நிறுவனங்களின் காலாண்டு / ஆண்டு அறிக்கைகள் வெளியிடப்படுதல் அல்லது அந்நிறுவனங்கள் குறித்த சில தகவல்கள்.

❖ சில சமயம் எதிர்பாராத, பொய்யான வதந்திகள் கூட பங்குச் சந்தை நிலவரத்தை பாதிக்கின்றன. (யூக வியாபாரம் செய்பவரில் சிலர் இத்தகைய தவறான தகவல்களை வேண்டுமென்றே பரப்பி லாரம் காண முயல்வதாகவும் வில சமயங்களில் குற்றச் சாட்டு எழுகின்றது.

எது எப்படியோ வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பது போல திறமையான அறிவுக் கூர்மையும் சமயத்துக்குத் தக்கபடி செயல்படும் வேகமும் உள்ள முதலீட்டாளர்கள் எத்தகைய ஊசலாட்டத்திலும் லாபம் சம்பாதித்து விடுவர். குறைந்த பட்சம் நட்டமடையாமல் தப்பித்துக் கொள்வர். சந்தை மிக அதிகமாக ஊசலாடிக் கொண்டே இருக்குமானால் சராசரி முதலீட்டாளர்கள் நம்பிக்கையுடன் அதில் ஈடுபடமாட்டர்கள் என்பது ஒரு குறை. பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கத்தால் கவரப்பட்டு தன்னிச்சையாக ஏதாவது பங்குகளை அடிக்கடி விற்றும் வாங்கியும் பரிவர்த்தனை செய்வாரானால் வெகு விரைவிலேயே முதலை இழுப்பது உறுதி.

## காளையும் கரடியும்

காளைச் சந்தை என்பது பங்கு வர்த்தகம் நல்ல இலாப கரமாக உள்ள சூழ்நிலையைக் குறிப்பது. பங்கு குறியீடுகள் உயர்வதும் பங்கு விலைகள் உயர்ந்து கொண்டே இருப்பதும் காளைச் சந்தையில் தான். பங்கு குறியீடுகள் வீழ்ச்சி அடைவதையும் பங்கு விலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிவதையும் கரடிச் சந்தை என்பர். கரடிச் சந்தையை விட்டு முழுதாக விலகாமல் நல்ல நிறுவன பங்குகளை குறைந்த விலைக்கு வாங்கிப் போடுவது நல்லது. காளை, கரடி என இரு வேறு சந்தைகள் இருக்கின்றன என்று எண்ண வேண்டாம் ஒரே சந்தை தான். அன்றைய நிலவரத்தை வைத்து காளை என்றும் கரடி என்றும் வர்ணிப்பார்கள்.

